# தமிழரசு


இந்திய
விடுதலையின்
40வது ஆண்டு
நிறைவு விழா

எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்

—பாரதியார்




விடுதலை நாள் விழா சிறப்பிதழ்
16-8-1988
ரூ. 1









22.7.88 அன்று செங்கற்பட்டு மாவட்டம், பெணலூர் பேட்டையில் தொகுப்பு வீடுகள், சமுதாயக் கூடங்கள் திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மத்திய அரசு உள்துறை அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்கள் சமூகக் கூடங்களையும், தொகுப்பு வீடுகளையும் திறந்து வைத்தார்.





## பிரதமர் தொடங்கி வைத்த

# காமராசர் ஆதிதிராவிடர் வீட்டு வசதித்திட்டம்

பெருந்தலைவர் காமராசர் வீட்டுவசதித் திட்டத்தைப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் 4-8-'88 அன்று திண்டிவனம் அருகே உள்ள சிங்கனூரில் தொடங்கி வைத்தார்.

விழாவுக்கு, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் தலைமை வகித்தார்.

தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு எம். எம். ராஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

### ஆளுநர் உரை

விழாவிற்குத் தலைமை ஏற்ற தமிழக ஆளுநர் தமது உரையில் கூறியதாவது :

''இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு எடுத்து வந்துள்ள வளர்ச்சித் திட்டங்களிலே ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்கான திட்டங்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம். பிரதமரின் தனி உத்திரவின் பேரில் இந்த காமராஜர் வீட்டு வசதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டும் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டப்படுகின்ற 5,000 வீடுகளுக்குக் கூடுதலாக மேலும் 8,000 வீடுகள் இந்த ஆண்டில் கட்டப்பட உள்ளன. உங்களுக்கு இன்னுமொரு மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். நத்தம் புறம்போக்கில் குடியிருக்கும் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்பட அரசு அண்மையில் உத்தரவிட்டுள்ளது. கடந்த சில வாரங்களில் 4,000-க்கும் மேற்பட்ட மனைகளுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு வேண்டுகோள், பட்டா கொடுக்கிறோம் என்று சொல்வதை நினைத்து நத்தம பகுதியில் ஆக்கிரமிப்புச் செய்ய ஆரம்பித்து விடாதீர்கள். ஏற்கெனவே பல வருடங்களாகக் குடியிருப்பவர்களுக்கு மட்டும்தான் பட்டாக்கள் வழங்கப்படும்.

திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பிரதமர் ஆற்றிய உரை வருமாறு:

''இரண்டு மணி நேரம் கால தாமதமாக வந்ததற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தமிழ்நாட்டிலே காலடி வைத்தது முதல், வரும் வழியெல்லாம் தமிழக மக்கள் தந்த அன்பான வரவேற்பிலே திளைத்து, நாங்கள் வருகிறோம். ஆகவேதான் இந்தத் தாமதப் ஏற்பட்டுவிட்டது. உங்களது அன்பிற்கு, பாசத்திற்கு எனது நன்றி.

இன்று இங்கு தொடங்கியுள்ள திட்டம், அகில இந்திய அளவிலேயே முதன்மையானது. முதன் முதலாக இத்திட்டத்தைத் தமிழ்நாட்டில் தொடங்கி இருக்கிறோம்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - ஆவணி 1

மலர்: 19 16-8-1988 இதழ் : 4

விடுதலை நாள் சிறப்பிதழ்

இங்கே வீடுகளைக் கட்டித்தரப் போகிறோம். ஆனால் வெறும் வீடுகள் அல்ல. வீடுகளோடு சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதியோடு—மொத்தமாக வழங்குகின்ற சூழ்நிலையை உருவாக்கப்போகிறோம். வறுமையிலிருந்து நீங்கள் மீளவும், வாழ்க்கையிலே முன்னேறவும், இந்தப் புதிய நிகழ்ச்சியை இந்த இடத்தில் நாம் தொடங்குகிறோம்.

இந்த ஆண்டு தமிழகத்தினுடைய - ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஒதுக்கீடுகளைப் பற்றி நாங்கள் இன்று யோசனை செய்துகொண்டிருக்கும்பொழுது, இன்னும் கொஞ்சம் பணம் வேண்டும் என்று ஆளுநர், திரு அலெக்சாண்டர் கேட்டுக் கொண்டார். ஆகவே 27 கோடி அதிகமாக ஒதுக்கினோம். இந்த 27 கோடி ரூபாய்கள்தான் இந்தப் புதிய வீடு அமைப்புத் திட்டமாக அரிஜன மக்களுக்குப் புதிய திட்டமாக இங்கே தொடங்கப் போகிறது. இன்று தொடங்குகிற இந்தத் திட்டத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் பெயரை நாங்கள் சூட்டியிருக்கிறோம்.

பெருந்தலைவர் காமராஜர் தமிழகத்தில் தோன்றிய மிகப் பெரிய காங்கிரஸ் தலைவர். இந்தத் திட்டம்-மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அன்னை இந்திரா காந்தி ஆகியோர் எந்த மரபை, எந்த வழியை உருவாக்கித் தந்தார்களோ, அந்த மரபு வழியிலேயே நின்று இன்று காமராஜர் ஆதிதிராவிடர் வீடு அமைப்புத்திட்டம் தொடங்கப்படுகிறது. நம்முடைய பெரிய தலைவர்கள் நமக்குக்கற்றுத் தந்த பாடம் என்ன? இந்த நாட்டிலே முன்னேற்றமும், வளர்ச்சியும் ஏற்பட வேண்டுமென்றால் ஏழையிலும் ஏழை- பரம ஏழையாக யார் இருக்கின்றார்களோ அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். காமராஜருடைய பெயரிலே துவங்குகின்ற இந்தத் திட்டம் இத்தகைய பரம ஏழையாக - ஒடுக்கப்பட்ட மக்கள், கால காலமாக வறுமையிலும் உழலுகின்ற மக்களுக்காக இந்தத் திட்டம் இங்கே உருவாக்கபபடுகிறது.

காமராஜர் அவர்களுக்கு அன்னை இந்திரா காந்தி சூட்டிய புகழாரத்தை உங்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன். ''காமராஜர் மக்கள் தலைவர். மக்களுடைய நாடித் துடிப்பை, மக்களுடைய இதயத் துடிப்பை மிகச் சரியாகப் புரிந்துகொண்ட மகத்தான தலைவர்'' என்று அன்னை இந்திரா காந்தி புகழாரம் சூட்டினார்கள். அன்னை இந்திரா காந்தியும், பெருந்தலைவர் காமராஜரும் வாழ்ந்திருந்தால், அவர்களுக்கு இந்தத் திட்டம் மிகப் பிடித்தமான திட்டமாக இருந்திருக்கும். அவர்களுடைய வழியிலேயே நின்று இன்று 8000 வீடுகளைக் கட்டும் திட்டம் விரைவிலேயே பூர்த்தியாகவேண்டும் என்று நான் விரும்புகிறேன். குறிப்பாக தென் ஆர்க்காடு மாவட்டத்திலேயே இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற 2,250 வீடுகள் இந்த ஆண்டுக்குள்ளேயே பூர்த்தியாகும் என்று நம்புகிறேன். மிக விரைவிலேயே இந்தத் திட்டத்தை அவர்கள் பூர்த்தி செய்வார்களேயானால் அதனால் நிறைந்த பயன்கள் உங்களுக்கு விரைவிலேயே கிடைக்கும். உங்களுடைய அன்பான வரவேற்புக்கும், இந்த வீடு அமைப்புத் திட்டத்தை உருவாக்கியவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' - இவ்வாறு பிரதமர் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றி கூறினார்.

இவ்விழாவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் 'ஆதி-திராவிடர்களுக்கு இலவச மனைப் பட்டாக்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கடன்கள், தையல் இயந்திரங்கள், கலப்புத் திருமண உதவிகள், முதியோர் உதவித் தொகைகள் போன்றவற்றை வழங்கினார்கள். இத்திட்டத்தினால் ஏறத்தாழ 5,400 பேர் பயன் பெற்றார்கள்.

# காமராஜர் ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டம்

**இத்திட்டத்தின் கீழ் 8,000 வீடுகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் பின் குறிப்பிட்டவாறு கட்டப்பட்டு வருகின்றன.**

| வ. எண்: | மாவட்டத்தின் பெயர் | கிராமங்களின் எண்ணிக்கை | கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | 11 | 500 |
| 2. | வட ஆர்க்காடு | 27 | 750 |
| 3. | தென் ஆர்க்காடு | 41 | 2,250 |
| 4. | தருமபுரி | 3 | 100 |
| 5. | சேலம் | 9 | 500 |
| 6. | திருச்சி | 17 | 850 |
| 7. | தஞ்சாவூர் | 24 | 700 |
| 8. | புதுக்கோட்டை | 7 | 100 |
| 9. | கோயமுத்தூர் | 7 | 200 |
| 10. | பெரியார் | 3 | 100 |
| 11. | மதுரை | 13 | 300 |
| 12. | அண்ணா | 8 | 350 |
| 13. | பசும்பொன் முத்துராமலிங்கம் | 10 | 200 |
| 14. | இராமநாதபுரம் | 15 | 600 |
| 15. | காமராஜர் | 7 | 200 |
| 16. | திருநெல்வேலி கட்டபொம்மன் | 8 | 200 |
| 17. | சிதம்பரனார் | 3 | 100 |
| | மொத்தம் | 213 | 8,000 |

**இத்திட்டத்தின் கீழ்க் கட்டப்படும் வீடுகள் ஒரு படுக்கை அறையும், ஒரு சமையல் அறையும் கொண்டவையாக இருக்கும். இந்த வீடுகளின் தரைமட்டப் பரப்பளவு 201 சதுரஅடியாக இருக்கும். மேற்கூரை சிமெண்ட் காங்கிரீட் போட்டுக் கட்டப்படும். இரண்டு ஜாலி, மற்றும் ஒரு கதவு, ஒரு ஜன்னல், இவ்வீடுகளுக்குப் பொருத்தப்படும். தரை சிமெண்ட் காங்கிரீட் போட்டு அதன் மீது சிமெண்ட் கலவையினால் பூசப்படும்.**

**ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு புகை இல்லா அடுப்பும் கட்டித்தரப்படும். வீடுகளின் சுவர்கள் செங்கற்களால் மண் கலவை கொண்டு எழுப்பப்படும். இந்த வீட்டின் தோராய மதிப்பு ரூ. 10,000 .இந்த எட்டாயிரம் வீடுகளையும் 1988 அக்டோபருக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.**

# பொறுப்புக்களை விருப்பு வெறுப்பின்றி ஆற்றி வருகிறோம்



மேதகு தமிழக ஆளுநர் திரு பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 3.8.88 அன்று, பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். தலைமைச் செயலகத்தில் நடந்த அச் சந்திப்பின்போது ஆலோசகர்கள் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, திரு ஆ. பத்மநாபன், அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். ராஜேந்திரன் மற்றும் உயர் அலுவலர்களும் உடனிருந்தார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் அளித்த பத்திரிகையாளர் சந்திப்புப் பதில்களின் விவரம் இங்கே தரப்படுகிறது. ●●

●● காவிரி நதிநீர்ப் பங்கீடு, தெலுங்கு கங்கைத் திட்டம் ஆகியவைகளைப் பற்றிப் பேச வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. திரு பி.சிவலிங்கம் (அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்), திரு எஸ். பி. நமசிவாயம், திரு. மோகனகிருஷ்ணன், திரு. பாலகிருஷ்ணன் ஆகிய முன்னாள் பாசனத்துறை தலைமைப் பொறியாளர்கள் அக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். தற்போது, பாசனத்துறை தலைமைப் பொறியாளராக இருக்கின்ற திரு. நாகேசுவரனும் அக்குழுவில் ஒருவராவார்.

●● சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகள் பதவிகளுக்கு விரைவிலேயே புதிய நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள்.

●● வன்னியர் சங்கத்தினரின் கோரிக்கைகளில் உள்ள நியாயமானவைகள் பற்றி அரசு அனுதாபத்தோடு அணுகும்; பரிசீலிக்கும். இதேபோல் பிற்படுத்தப்பட்ட மற்றும் சமுதாயத்தில் நலிவுற்ற நிலையில் உள்ளவர்களுடைய கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும்.

●● வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் முதலீடுசெய்துகூட்டுத் துறையில் துவங்க உத்தேசித்துள்ள நட்சத்திர ஓட்டல்கள் இரண்டு தொடர்பாகப் பல புகார்கள் நகர முக்கியஸ்தர்களிடமிருந்தும் பல்வேறு அமைப்புகளிடமிருந்தும் அரசுக்கு வந்தன. ஆகவே, இது குறித்து மறுஆய்வு செய்து முடிவெடுக்கும் வரை, அந்த ஓட்டல் பணிகள் தொடர அனுமதிக்கவேண்டாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது.

●● கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர பல்லாயிரக் கணக்கானோர் மனுச் செய்து கொண்டனர். அவர்கள் தகுதியைப் பரிசீலித்து முடிவெடுப்பதில் தாமதம் ஏற்பட்டதே கூட்டுறவு அமைப்புகளுக்கானதேர்தல் தள்ளிப் போடப்பட்டதற்கு முக்கியக் காரணம்.

●● தமிழ்நாட்டில் சட்டப்பேரவைக்கான தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை இப்போது ஏற்பட்டுவிட்டதாகக் கருத இயலாது.

●● லஞ்ச ஊழல் புகார் கூறப்பட்ட அகில இந்திய சர்வீசைச் சேர்ந்த ஐ. ஏ. எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகள் 13 பேர் மீது விசாரணை நடைபெறுகிறது. அவ்விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன், உரிய நடவடிக்கையும் உறுதியாக எடுக்கப்படும். ஏற்கெனவே இது தொடர்பாக ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

●● சென்னையில் நடந்துள்ள சில கொலைகளில் தொடர்புடைய ஆட்டோ சங்கரோடு சம்பந்தப்பட்டவர்கள் என்று விசாரணையில் தெரியவந்து, அவர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருப்பவர்களானாலும், முக்கியப் புள்ளிகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும் தயவுதாட்சண்யமின்றி அவர்கள் மீது நிச்சயமாக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களைத் தப்ப விட மாட்டோம்.

●● மத்தியில் ஆளும் கட்சியாக உள்ள காங்கிரசுக் கட்சிக்குச் சாதகமாக நான் செயல்படுவதாகச் சில அரசியல் கட்சியினர் கூறிவருகின்றனர். காங்கிரஸ்கட்சியினர் சிலர் அக்கட்சியைப் பலப்படுத்தும் வகையில் நான் செயல்படவில்லை என்று சொல்லி வருவதும் எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தவரை—மாநில ஆட்சித் தலைவர், ஆளுநர் என்ற முறையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை விருப்பு வெறுப்பில்லாமல் செய்து வருகிறேன். என் மீதான பாராட்டுரைகளுக்காக எனக்கு மகிழ்ச்சியும் இல்லை; புகார்களுக்காக வருத்தமும் இல்லை.


40வது ஆண்டு விடுதலை
நிறைவு விழா வாழ்த்து
ஆளுநரின் ஆலோசகர்
டாக்டர் ஆ. பத்மநாபன், இ.ஆ.ப.
200 ஆண்டுகட்கு மேலாக இந்தியத் துணைக் கண்டத்தைக் கோலோச்சிய ஆங்கில ஏகாதிபத்தியத்தை வெளியேற்றிய 40வது சுதந்திரத் திருநாளில் நாட்டு விடுதலைக்கு வித்திட்ட தியாகச் சுடர்களுக்கு வீர வணக்கங்களைச் செலுத்துவோம். தேசிய ஒருமைப்பாட்டு முயற்சிகளுக்கு மேன் மேலும் வலுவூட்டுவோம். தாய்நாடு உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க உறுதுணையாய் இருப்போம் என்று உறுதி மேற்கொள்வோமாக!
வாழ்க சுதந்திரம்!
வாழ்க இந்தியா!

# விடுதலை நாள் சூளுரை

எம். எம். இராஜேந்திரன் இ.ஆ.ப.,

தலைமைச் செயலர்





இந்திய விடுதலைத் திருநாளையொட்டி சிறப்பிதழ் ஒன்றினைத் 'தமிழரசு'' வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய விடுதலையின் 40 ஆண்டு விழா நிகழ்ச்சிகள் நிறைவு பெற்ற நிலையில் இந்த ஆண்டு விடுதலைத் திருநாளைக் கொண்டாடுகிறோம்.

நமது மாபெரும் தேசம் விடுதலை அடைய வேண்டுமென்பதற்காகத் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் காணிக்கையாக்கிய வீரப்பெருமக்களுக்கு நமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதற்கும், இந்தியநாட்டின் ஒற்றுமையினையும் ஒருமைப்பாட்டினையும் கட்டிக் காத்திட உறுதி ஏற்பதற்கும் விடுதலைத் திருநாளான ஆகஸ்ட் 15 பொருத்தமான நாள் ஆகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்திலும், சுதந்திரத்திற்குப் பின் புதிய இந்தியாவை நிர்மாணிக்கும் பெரும்பணியிலும் தமிழ்நாடு சிறப்பான பங்காற்றி வந்துள்ளது. சீரான, திறமையான நிர்வாகத்திற்கும், சமூக அமைதிக்கும் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாகத் திகழ்ந்து வந்துள்ளது.

. இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் வலியுறுத்தி வருவதற்கிணங்க, தமிழ்நாட்டில் உள்ள நலிந்த மக்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் ஆகியோர் நலனில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சீரிய பல திட்டங்கள் வாயிலாகக் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும், பல்வேறு வகையான வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செம்மையான முறையில் நாம் நிறைவேற்றி வருகிறோம்.

அரசாங்கம் என்பது மக்களது கூட்டு முயற்சியின் சின்னம். மக்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும் தான் அரசாங்கம் சீரிய முறையில் இயங்கிட ஆதாரமான தேவைகளாகும். எனவே, தமிழக மக்கள் அரசுடன் ஒத்துழைத்து வளர்ச்சித் திட்டங்கள் பழுதின்றி நிறைவேற உறுதுணையாக நிற்க வேண்டும்.

வறுமையும், அறியாமையும், வேலை இன்மையும் சுதந்திரத்தின் எதிரிகள். 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்திய மக்கள்' என்று மகாகவி பாரதியார் பாடியது போல, மக்களிடையே ஒற்றுமை ஓங்கிடவும், அமைதி நிலவிடவும், வளர்ச்சித் திட்டங்கள் விரைந்து நிறைவேறிடவும் அனைவரும் செயலாற்றிட இவ் விடுதலை நாளில் உறுதி ஏற்போம்!

# நாற்பதாவது விடுதலை ஆண்டு தமிழக அரசு ஆற்றிய தொண்டு




**இந்திய விடுதலையின் 40வது ஆண்டினை யொட்டி தமிழக அரசு அதன் தொடர்பாக ஆற்றியுள்ள பணிகள் - உருவாக்கி வரும் திட்டங்கள் இங்கே தொகுத்துச் சொல்லப் பட்டுள்ளன.**


## நா. கிருஷ்ணபாரதி, இ. ஆ.ப.,

**இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்புத்துறை**


இந்திய சுதந்திரத்திற்காக உடல் பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கையாக்கிய வீரர்களின் நினைவைப் போற்றவும், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க உறுதி ஏற்கவும், சுதந்திரத்தின் மாண்பினை இன்றைய தலை முறைக்கு எடுத்துக்கூறவும், இந்திய சுதந்திரத்தின் 40-வது ஆண்டான சென்ற ஆண்டு முதல் அரசு பல் வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது.

இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாகக் கொண்டாடவும், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வழிமுறை களை வகுத்துத் தருவதற்காகவும், முன்னாள் குடியரசுத் துணைத் தலைவராக இருந்த இன்றைய மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைத் தலைவராகவும் மாண்புமிகு பிரத மர். திரு ராஜீவ் காந்தி அவர் களைத் துணைத் தலைவராகவும் கொண்ட தேசியக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அதே போன்று, தமிழ்நாட்டில் விழாவுக்கான திட்டங்களையும் வழி முறைகளையும் வகுத்துத் துணை புரிய மேதகு முன்னாள் ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர் களைத் தலைவராகவும் மாண்பு மிகு முன்னாள் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களைத்துணைத் தலைவராகவும் கொண்ட மாநிலக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் குழுவில் பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்கள் 35 பேர் உறுப்பினர்களாகச் செயல் பட்டு வருகின்றனர். செய்தி-சுற்றுலாத் துறையின்சிறப்பு ஆணை யர் மற்றும் செயலர் இக்குழுவின் உறுப்பினர் செயலராகப் பணி புரிகிறார்.

மேலும் தமிழக அரசுத் தலை மைச் செயலர் அவர்களைத் தலைவ ராகக் கொண்ட மாநில செயற் பாட்டுக்குழு ஒன்றும் அமைக்கப் பட்டது. இக்குழு கடந்த ஆண்டு ஆகஸ்டு 5-ஆம் நாள் கூடி, பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.

இந்திய சுதந்திரத்தின் 40-வது ஆண்டு விழாவின் துவக்கமாக, தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட் டம் நடைபெற்ற மிக முக்கிய 5 இடங்களிலிருந்து வீரமண் சேகரிக் கும் நிகழ்ச்சி 7-8-'87 அன்று நடை பெற்றது.

உப்பின் மீது விதிக்கப்பட்ட வரியை எதிர்த்து 1930-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியா கிரகம்மேற்கொண்ட இடம் வேதார ணியம்; பெருமைமிக்க இந்த வேதாரணியத்திலிருந்து விடுதலைப் போராட்ட வீரரும் தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவரு மான டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் வீரமண் எடுத்து வந்தார்.

செக்கிழுத்த செம்மல் சிதம்பர னார் சுதேசிக் கப்பல் கம்பெனி யைத் துவக்கிய இடம் தூத்துக்குடி. இங்குதான், இந்தியப் பொருளா தாரத்தைச் சுரண்டிய பிரிட்டிஷ் காரர்களின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஆயிரக் கணக்கான கஜங்கள் நீளமுள்ள அந்நியத்துணி களும், இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய அந்நியப் பொருட்களும் கொளுத்தப்பட்டன. இத்தகு சிறப்புப் பெற்ற தூத்துக்குடித் துறைமுகப்பகுதியிலிருந்து விடு தலைப் போராட்ட வீரர் திரு எஸ். என். சோமையாஜுலு அவர்கள் வீரமண் எடுத்து வந்தார்.



**தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டக் களங்களாகத் திகழ்ந்த ஐந்து இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட வீரமண் கலசங்கள் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட பிறகு சட்டப் பேரவைச் சிறப்புக் கூட்டத் திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபொழுது....**

ஆங்கிலேய கலெக்டர் ஆஷின் அடக்குமுறைக்கு முடிவுகட்ட அந்தக் கலெக்டரை மணியாச்சி ரயில் நிலையத்தில் சுட்டுக்கொன்றதுடன் தன்னையும் சுட்டுக் கொண்டு வீரமரணம் எய்தினான் வீரவாஞ்சி. புனிதமிக்க இந்த மணியாச்சி ரயில் நிலையத்திலிருந்து தியாகி திரு எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் வீரமண் கொண்டு வந்தார்.

தேசியப் பெருந்தலைவர்கள் நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டிய இடம் சென்னை மெரீனாக் கடற்கரை. பாரதத் தாயின் வீரப் புதல்வர்களும், புதல்வியரும் தீரஞ்செறிந்த உரையாற்றிய இடம் இதுதான். இங்குள்ள திலகர் கட்டத்திலிருந்து வீரமண் எடுத்து வந்தார், தியாகி திரு டி. செங்கல்வராயன் அவர்கள்.

கொடிகாத்த குமரன் தோன்றிய திருப்பூரிலிருந்து தியாகி, திரு பெரியண்ண முதலியார் அவர்கள் வீரமண் எடுத்து வந்தார்.

வீரமண் எடுத்து வந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் சென்னை எழும்பூர், சென்ட்ரல் இரயில் நிலையங்களிலிருந்து வரவேற்கப் பட்டனர். வீரமண் அடங்கிய பேழைகள் பொது மக்களின் பார்வைக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டன. பின்னர் 9-8-'87 அன்று சிறப்பு ஊர்தி அணிவகுப்பு மூலம் வீரமண் பேழைகள் சட்டமன்றத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டன.

வீரமிக்க விடுதலைப் போராட்டத்தை நினைவுறுத்தி, நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காக்கும் உறுதிமொழித் தீர்மானம் சட்டமன்றச் சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. விடுத்லைப் போரில் உயிர் நீத்த தியாகிகளுக்காக இரண்டு நிமிடம் அமைதி காத்து அஞ்சலி செலுத்தப் பட்டது; மேதகு ஆளுநர் அவர்கள் பேருரை நிகழ்த்தினார்.

பின்னர் இந்த வீரமண் பேழைகளை விடுதலைப் போராட்டத் தியாகிகள் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள், திருமதி விஜய லட்சுமி அவர்கள், விளையாட்டு வீராங்கனை செல்வி ஃபெளசியா பேகம், விளையாட்டு வீரர்கள் திரு என். அண்ணாவி, திரு. ஜி.இ. ஸ்ரீதரன் ஆகியோர் 12-8-'87 அன்று டில்லி கொண்டு சென்றனர்.

விடுதலைத்திருநாளான 15-8-'87 அன்று சென்னை கோட்டையில் கொடியேற்றுவிழா நடைபெற்றது. அந்த நாள் முழுதும் கலைவாணர் அரங்கில் கருத்தரங்கம், மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கிண்டி ராஜ்பவனில் மேதகு ஆளுநர் அவர்கள் அளித்த வரவேற்பு விருந்தில் விடுதலைப் போராட்டத் தியாகிகள் கெளரவிக்கப்பட்டனர்.



நாற்பதாவது ஆண்டு சுதந்திர விழாவினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் டெல்லி சென்றிருந்த தமிழ்நாட்டு விளையாட்டு வீரர் திரு ஜி. இ. ஸ்ரீதரன் அவர்கள் புதுடெல்லியில் 15.8.87 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமரிடமிருந்து தேசியக் கொடியினைப் பெறுகிறார்.

17-8-'87 அன்று சென்னை மெரீனாக் கடற்கரையிலுள்ள காந்தி சிலையிலிருந்து தீவுத் திடலில் அமைந்திருந்த பொருட்காட்சி வரை விடுதலை ஓட்டம் நடைபெற்றது. அன்றைய மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் விடுதலை ஓட்டத்தைத் துவக்கி வைத்தார்.

சுதந்திரதின ஓட்டத்தில் கொண்டு செல்வதற்காக டெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்களிடமிருந்து பெற்று வரப்பட்ட சுதந்திர ஜோதியை உயர்த்திப் பிடித்தபடி, விளையாட்டு வீரர்கள் ஓட அவர்களைத் தொடர்ந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஓடினர். 'இந்தியாவை நேசிக்கிறோம்', 'இந்தியாவுக்காக ஓடுகிறோம்' என்ற முழக்கங்களை ஒலித்தவாறு அவர்கள் ஓடிய காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. சுதந்திர ஜோதியை ஓராண்டுக் காலம் தொடர்ந்து எரிய வைப்பதற்காகப் பொருட்காட்சி மைதானத்தில் உள்ள விளக்கு பீடத்தில் சுதந்திர ஜோதியைக் கொண்டு தீபம் ஏற்றப் பட்டது.

1987 ஆகஸ்டு 9 முதல் 14-ஆம் நாள்வரை சென்னைப் பெருநகரிலும், மாவட்டத்தலைநகர்களிலும், வட்டங்களிலும் ஆங்காங்கே உள்ள முக்கிய ஊர்களிலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் தேசியக் கொடி ஏந்தி, தேச பக்திப் பாடல்களைப் பாடினர். விடுதலை இயக்கம் பற்றிய பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மாநிலமெங்கும் நடைபெற்றன.

தேசிய ஒருமைப்பாட்டு வார விழா 1987 நவம்பர் 19 முதல் 25 வரை சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. சென்னையில் இந்த ஒரு வார காலத்தில் ஒவ்வொரு நாளும் தேசிய ஒருமைப்பாட்டு நாள், சிறுபான்மையினர் நல நாள், மொழி ஒற்றுமை நாள், நலிவடைந்தோர் நல நாள், பண்பாட்டு ஒற்றுமை நாள், மகளிர்நல நாள் எனக் கொண்டாடப்பட்டது. ஒருமைப்பாட்டு உணர்வை அனைவர் உள்ளங்களிலும் பதிப்பதற்கு இந்த ஒரு வார விழா பயன்பட்டது.

**அடுத்த இதழில் முடியும்**

**அடுத்த இதழில் ..**

* **தமிழகத்தில் பிரதமர் சுற்றுப் பயணம் நேர்முக வர்ணனை.**
* **தமிழக அரசின் அரும்பணிகள்**
* **இந்திய விடுதலை 40வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சித் தொகுப்பு**

# வெல்க இந்தியா

## டாக்டர் ஆ. பத்மநாபன், இ. ஆ. ப.

ஆளுநரின் ஆலோசகர்



புகழ்பூத்த பாரதமே
பழம்பெருமைத் தாய்நாடே
சிலிர்த்தெழுந்த சீர்வாழ்வே
தியாகத்தின் திருவுருவே
எதிர்கால ஜோதியே
ஏற்றந்தரும் அன்னையே!
போட்டிடுக பீடுநடை
பொசுக்கிடுக பிற்போக்கை!

நேற்றுன் மைந்தர்
ஆடவர் பெண்டிர்
ஆற்று மணலினும்
அளவற் றோர்கள்
ஆற்றல் மறவர்
அஞ்சா நெஞ்சினர்
அண்ணல் காந்தி
நேரு தலைமையில்

அடிமைத் தளையை
அறுத்தே எறிந்தனர்
இருட்டை விரட்டி
ஏற்றினர் தீபம்
இளங்காலை விடுதலை
இன்னமுதக் காற்றில்
எங்களை அணைத்தது
என்ன சுகம் அம்மா!

எல்லார்க்கும் விடுதலை
எங்கணும் வெற்றிக்களை
எப்படிச் சொல்வோம்
இதயத்தின் குதூகலம்
அண்ணலின் அகிம்சை
பண்டித நேருவின்
அணிசேராக் கொள்கை
அன்னை இந்திரா
ஆவியில் கலந்திட்ட
ஐக்கிய இலட்சியம்
உன்னைப் பலப்படுத்தி
உயர்ந்தோங்கச் செய்தன!
உலக நாடுகளில் உனக்கு
உன்னத மரியாதை
வளரும் நாடுகளில்
வாழ்த்தும் வரவேற்பும்!


இளமையின் சின்னம்
எழுச்சியின் முரசம்
துணிவின் தோற்றம்
துவளாத உறுதி
தளராத தலைவர் ராஜீவ்
வகுத்தளித்த வகையான
கொள்கைகள்
விஞ்ஞான அணுகுமுறை
விதித்திட்ட பாதையில்
வீறுநடை போடுகிறாய்
வெற்றியில் சிறக்கின்றாய்!
வகுப்புவாதக் குப்பையை வீசியெறி!
வெறித்தனத்தைவிட்டு விலகு
மொழி மத பிராந்திய வேறுபாடு
உன்னையே கூறுபோட விடாதே
அன்னையே முன்னேறு! முன்னேறு!

அமைதியும் உண்மையும்
அனைவரும் சமம் எனும் எண்ணமும்
வேற்றுமையில்' ஒற்றுமையும்
வேகமான வளர்ச்சியும்
உரிமையும் கடமையும்
ஒன்றிப் பிணைந்திட்ட
ஒளிமுகத் தாயே!
வளங் கொழிப்பாயே!

இருள் சூழ்ந்த உலகில்
மருள் போக்கும் பெருமகளாய்
சுடர்முகத் தூய்மையில்
இடர் களைந்து எம்மை
ஊரிலும் பாரிலும் உயர்த்தி
உறுதியில் வைப்பாய்!

('Rain Drops' என்ற ஆங்கிலக் கவிதை நூலிலிருந்து)

—தமிழாக்கம்
டாக்டர் மு. முத்துக்காளத்தி



# நாடு விடுதலைபெறப் பாடுபட்ட தலைவர்கள்!

**இந்திய நாட்டை மொகலாய மன்னர்கள ஆட்சி செய்துவந்த காலத்தில், வணிக ரோக்குடன் இந்தியாவுக்குள் நுழைந்து பண்டகசாலைகள் அமைத்த ஆங்கிலேயர்கள், பின்னர் இங்குள்ள குறுநில மன்னர்களின் ஒற்றுமையின்மையைச் சாதகமாக அமைத்துக்கொண்டு தங்களின் சாம்ராஜ்யத்தை உருவாக்கிவிட்டார்கள். நாட்டு மக்களை அடிமைப்படுத்தினார்கள்.**

**அடிமைத் தனத்தை ஒழித்து-தன்னாட்சி பெறும் முயற்சியில் தலைவர்கள் பலர் ஈடுபட்டனர். சுமுகமான முறையிலே தோன்றிய காங்கிரஸ் இயக்கம் பின்னர் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய புரட்சி இயக்கமாக மாறியது. அந்நியரிடமிருந்து விடுதலை பெறுவதே தனி இலட்சியமாக உருவெடுத்தது. அந்த விடுதலை வேள்வியில் ஈடுபட்ட தலைவர்கள்-தொண்டர்கள் எண்ணற்றோர். செல்வமிழந்து - கால்கரம் இழந்து-ஆவி இழந்து, நாட்டுக்காகப் பாடுபட்டு, சுதந்திரக் கோயிலை உருவாக்கிய உத்தமர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அந்தத் தலைவர்களில் ஒரு சிலர் இங்கே நினைவு கூரப்படுகிறார்கள்.**



**தாதாபாய் நௌரோஜி**
**(1825-1917)**

இந்தியப் பொது வாழ்வின் கனவான் என்று அழைக்கப்பட்டவர். வர்த்தகத் துறையில் நமது மக்கள் வளர வழி வகுத்தவர். இங்கிலாந்தில் வசித்தபோதே இந்தியாவின் உயர்வுக்குப் பாடுபட்டவர். இங்கிலாந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட மன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட முதல் இந்தியர். 1893-1906 ஆகிய இரு ஆண்டுகளில் காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்தார்.

இந்தியர்களும் ஐ.சி.எஸ். ஆகப் படித்துப் பட்டம் பெறலாம் என்ற உரிமையை இங்கிலாந்தில் போராடிப் பெற்றவர். இந்திய விடுதலை என்னும் குறிக்கோளுக்கு வித்திட்டவர்களில் ஒருவர். ''நமது நாட்டுத் தாய்மார்களுக்கு நௌரோஜி போல் புதல்வர்கள் பிறக்க வேண்டும்'' என்று இவரைப் பற்றி மகாகவி பாரதி பாடுகிறார். 1917 ஜூன் 3-ல் மறைந்தார்.



**திலகர்**
**(1856-1920)**

சுயராஜ்யம் எனத் பிறப்புரிமை என்று முதன் முதல் முழங்கி, இந்திய சுதந்திர இயக்கத்துக்கு வேக மூட்டியவர் லோகமான்ய பாலகங்காதர திலகர். 1856ஆம் ஆண்டு ஜூலை 23-ஆம் தேதி மராட்டியத்தைச் சேர்ந்த ரத்னகிரியில் கங்காதர்பந்த் - பார்வதிபாய் தம்பதிகளுக்கு மகனாகப்பிறந்தார். 1879-இல் சட்டப்படிப்பை முடித்தார்.

1880-இல் பூனாவில் பள்ளி ஆசிரியர் ஆனார். 1881-இல் 'மராட்டா' என்ற ஆங்கில வார இதழையும், 'கேசரி' என்ற மராத்தி மொழி வார இதழையும் நடத்தினார். ஒரு வழக்கில் நான்கு மாத சிறைத் தண்டனை பெற்றார். 1889-இல் பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். தீவிரவாதிகளான லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால் போன்றோருடன் தொடர்பு கொண்டார். 1907 காங்கிரஸ் மாநாட்டில் மிதவாதிகளுடன் பலப்பரீட்சை; 1897 ஜூலையில் கைதானார். 18 மாத தண்டனைகிடைத்தது. தண்டனைக் காலம் முடியும் முன்பே 1898-ல் விடுதலை பெற்றார்.

தீவிர சுதேசி பிரச்சாரம். முசபர்பூரில் வெள்ளைக்கார நீதிபதி மீது வெடிகுண்டு வீச்சு சம்பவத்தை ஆதரித்து எழுதியதற்காக இவர் மீது ராஜதுவேஷ வழக்கு எழுந்தது. நீதிமன்றத்தில் 21 மணி நேரம் தாமே தமது வழக்கில் வாதாடினார். ஆறு ஆண்டு தண்டனை கிடைத்தது. நாடு கடத்துமாறு தீர்ப்பு விதிக்கப்பட்டது. 1914 வரை பர்மாவில் மாண்டலே சிறைவாசம்.

'கீதா ரகஸ்யம்' என்ற நூலை எழுதினார். 1918 செப்டம்பரில் லண்டன் பயணம். இங்கிலாந்தில் இந்திய சுதந்திரத்துக்கு ஆதரவாக ஓர் ஆண்டு பிரச்சாரம்.

1919-இல் நாடு திரும்பினார். 1920-ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கினார். அதே ஆண்டு ஜூலை 28-இல் மறைவு. மராட்டியத்தில் விநாயகர் விழா-சிவாஜி விழா கொண்டாடவழிவகுத்தவர் இவரே. இந்திய விடுதலை இயக்கத் தீவிரவாதிகளின் பிதா. 'தியாகம்' என்ற சொல்லுக்கு ஓர் இலக்கணம்' என்று காந்தியடிகளால் புகழப் பெற்றவர்.



**கோகலே**
**(1866-1915)**

மகாத்மா காந்தியால் 'எனது குருநாதர்' என்று வர்ணிக்கப்பட்ட கோபாலகிருஷ்ண கோகலே புதிய இந்தியாவை உருவாக்கியவர்களில் ஒருவர். இரத்தினகிரியில் 1866 மே 9-ஆம் தேதி பிறந்தார். பூனாவில் படித்து அதே நகரில் பெர்கூசன் கல்லூரியில் பேராசிரியர் ஆனார். பம்பாய் மேலவைக்கு 1899-இல் தேர்ந்து எடுக்கப்பட்டார். மத்திய கவுன்சிலில் 1902-இல் உறுப்பினரானார். கட்டாய இலவசக் கல்விக்காக அப்போதே வாதாடினார்.

1905-இல் காசி காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்தார். வங்கப் பிரிவினையை எதிர்த்தார். தென்ஆப்பிரிக்கா சென்று அங்குள்ள இந்தியர்களின் இன்னலைத் தீர்க்கப் பாடுபட்டார்.

தென் ஆப்பிரிக்காவில் அப்பொழுது இயக்கம் நடத்திய மகாத்மாவுக்கும் தென் ஆப்பிரிக்க அரசுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட உதவினார். 'ஆக்கப்பூர்வமான தேசியம்' என்பது இவர் கொள்கை.

இந்தியாவை நிர்வாகம் செய்ய மக்கள் பயிற்சி பெற வேண்டும் என்பதற்காக 1905-இல் இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவினார். கூட்டுறவு இயக்கம், மகளிர் முன்னேற்றம் போன்ற கருத்துக்களைப் பரப்பினார்.

விடுதலைக்காகவும், மக்களைச் சீர்திருத்துவதற்காகவும் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். அரசியல் கலப்பற்ற சமூக சேவையை வலியுறுத்தியவர். அதேபோல் வாழ்ந்து காட்டியவர். ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். 1915-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-இல் அமரர் ஆனார்.



**லாலா லஜபதிராய்**

பஞ்சாப் மாகாணம் லூதியானா மாவட்டத்தில் ஜகராம்ஸ் கிராமத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர் லாலா லஜபதிராய். 'லாலாஜி' என மிகச் செல்லமாக அழைக்கப்பட்டார். பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும்போது இவருக்கு சுதந்திரத்தில் பற்று ஏற்பட்டது. வக்கீலாகப் பட்டம் பெற்ற லாலாஜி நாட்டில் ஏழை மக்களுக்காக இலவசமாகவே ஆஜராகி, வழக்கு நடத்தி வெற்றி கண்டவர்.

மராட்டிய சிங்கம் எனக்கூறும் லோகமான்ய பாலகங்காதர திலகர், வங்காளப் புரட்சி மன்னன் விபின் சந்திரபால் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். இதன் காரணத்தால் இம்மூவர்களையும் இணைத்து 'பால்-லால்-பால்' என்று சிறப்புடன் அழைப்பர்.

லாலா லஜபதிராயின் பெயரைக் கேட்டாலேயே ஆட்சியாளர்களுக்கு நடுக்கம்தான்! இவர் மீது ராஜ துரோகக் குற்றங்களையும் சாட்டி, நாடு கடத்தியது. 1928-இல் நாடெங்கும் விடுதலைப் போராட்டம் உச்சக்கட்ட நிலையில் இருந்தது. அச்சமயம் ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட 'சைமன் கமிஷன் குழு' லாகூருக்கு வந்தபோது தடையையும் மீறி 'லாலாஜி' ஆட்சியாளர்களை எதிர்த்துக் கோஷமிட்டு ஊர்வலம் நடத்தினார். இதனைக் கண்ட ஆங்கிலேய போலீஸ் அதிகாரியான 'ஸ்காட்டும்' அவருக்குத் துணையாக 'சாண்டர்ஸும்' ஊர்வலத்தைத் தடை செய்ததுடன், லாலா லஜபதிராயின் தலையில் பலமாகத் தாக்கினார்கள்.

பலத்த காயங்களுடன், அஞ்சா நெஞ்சத்துடன் 'வந்தே மாதரம்' பாரத் மாதாகீ ஜெய்!' என்ற தாரக மந்திர கோஷத்துடன் உயிரை நாட்டிற்காக அர்ப்பணித்தார்.



**அரவிந்தர்**
**(1872-1950)**

இந்தியாவிற்கு வழி காட்டியது வங்கம். வங்கத்துக்கு வழி காட்டியவர்களில் ஒருவர் அரவிந்தர். இளவயதிலேயே இங்கிலாந்தில் படிப்பு. ஐ.சி.எஸ். தகுதி பெற்றவர்.

குதிரை ஏற்றப் பரிட்சையைத் தவிர்த்ததால் பட்டம் பெறவில்லை. ஐரோப்பிய தேசிய இயக்கங்கள் அவரைக் கவர்ந்தன. 1893-இல் இந்தியா திரும்பி பரோடா சமஸ்தானத்தில் வேலைக்குச் சேர்ந்தார். 1905-இல் வங்கப் பிரிவினை. தலைமறைவு-பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்பு. 'ஆயுதப் புரட்சி மூலம்தான் இந்தியா விடுதலை அடைய முடியும்' என்று பிரச்சாரம் செய்தார். இலக்கியம், கவிதை - சமய தத்துவங்களில் புதிய ஆராய்ச்சி மேற்கொண்டார். காங்கிரசில் திலகரின் தளபதியாக உருவானார். அலிபூர் வெடிகுண்டு வழக்கில் சிக்க வைக்கப்பட்டு 1908 மே 4-இல் கைதானார். நீதிமன்றத்தில் இவருக்காக சித்தரஞ்சனதாஸ் வாதாடினார். குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பெற்று விடுதலைஆனார். அந்தச் சிறைவாசத்தில் புதிய ஒளி பெற்றார். 'உலகு அனைத்துமே-மக்கள் அனைவருமே எனக்கு கிருஷ்ண பரமாத்மாவாகத் தெரிகிறார்கள்' என்றார். ஆன்மீக தேசியம் எனும் புது வழியைப் பரப்பினார்.

வங்கத்தில் இருந்து 1910, ஏப்ரல் 4ஆம்தேதி புதுவை வந்து அங்கேயே தங்கி ஆன்மீக நெறியில் ஈடுபட்டார். பிரான்சின் காலனியாக இருந்த புதுவையில் அரவிந்தர் தங்கியிருந்த காரணத்தால் பாரதியார், வ.வே.சு. ஐயர் போன்ற தீவிரவாதிகள் புதுவையில் அடைக்கலம் பெற முடிந்தது. அரவிந்தரின் 'ஆன்மீக ஒளி' காண உலக அறிஞர் புதுவை வந்தனர். இறுதியாக 1950-இல் சமாதி நிலை அடைந்தார்.



**சர்தார் படேல்**
**(1875—1950)**

இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழ் பெற்றவர். பெரிய வழக்கறிஞர். காந்தியடிகளின் அழைப்பை ஏற்றுத் தொழிலைத் துறந்தார். குஜராத் பகுதியில் தேசீய விடுதலை இயக்கத்திற்குச் செல்வாக்குத் தேடினார்.

புகழ் பெற்ற 'பர்தோலி' இயக்க வெற்றிக்குக் காந்தியடிகளுடன் உழைத்தார். நாடு விடுதலை பெற்ற பிறகு உள்துறை அமைச்சர் ஆனார்.

இந்தியாவுக்கு எதிராக அணி திரண்ட மன்னர்களுக்குப் பாடம் புகட்டி, பணிய வைத்து, சமஸ்தானங்களை இந்திய அரசின் கீழ்க் கொண்டு வந்தார். 1950 டிசம்பர் 15-ல் மறைந்தார்.



**மவுலானா அபுல்கலாம் ஆசாத்**

'பாரத நாட்டு மக்கள் இனி ஆங்கிலேயருக்கு அடங்கி நடப்பவர்களல்ல! அந்தக் காலம் மலையேறி விட்டது! இனி சுதந்திரம் பெறுவதுதான் எமது இலட்சியம்!'' எனப் பகிரங்கமாகவே குரல் கொடுத்தவர் அபுல்கலாம் ஆசாத்!

இந்திய விடுதலை பற்றி, தாதாபாய் நௌரோஜி மதன்மோகன்

மாளவியா, மோதிலால் நேரு இவர்களின் பிரசங்கங்கள் இவரைச் சுதந்திரப் போராட்டத்தில் குதிக்கச் செய்தன. 1938 ஜனவரியில் மௌலானா அபுல்கலாம் ஆசாத் காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு முக்கிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், மகமதலி ஜின்னாவுடன் கருத்து வேறுபாடு கொண்டு நேருக்கு நேர வாதாடியவர். பலமுறை பல போராட்டங்களில் கலந்து கொண்டவர் ஆசாத். மேடைப் பிரசங்கங்களில் இவருடைய பேச்சில் தனித்தன்மை இருக்கும்.

1942 ஆகஸ்டு 9-ஆம் தேதி மகாத்மா 'வெள்ளையனே வெளியேறு!' என்று கொண்டு வந்த போராட்டத்தைப் பெரிதும் ஆதரித்து இதனையே நாட்டு மக்களிடம் எதிரொலிக்கச் செய்தவர் ஆசாத். இப்போராட்டத்தின் காரணமாக மகாத்மா காந்தி மற்றும் பலர் கைது செய்யப்பட்டனர். பின்னர் காந்தி சிறையிலிருந்து விடுதலையாகி வெளி வந்ததும் சமரசப் பேச்சு தொடங்கியது. ஆசாத் இதை ஏற்கவில்லை. என்றாலும் காங்கிரசின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். பல ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராக இருந்தார். சுதந்திர இந்தியாவில் கல்வி அமைச்சராக விளங்கினார். பாரசீகமொழியில் புலமை பெற்றவர். மிகச் சிறந்த அறிஞர்.



## ஜெயபிரகாஷ் நாராயணன்
## (1902—1979)

'வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கத்துடன் தொடங்கிய 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் தீவிர பங்குஏற்றவர் ஜெயபிரகாஷ். 1902 அக்டோபர் 11-ஆம் தேதி பீகார்மாநிலம் சீதாப் தயரா என்ற கிராமத்தில் பிறந்தார். தொடக்கக் கல்வி முடிந்து பாட்னாவில் படித்தார். ராஜேந்திர பிரசாத் குடும்பத்துடன் தொடர்பு ஏற்பட்டது. படிக்கும்போதே அக் குடும்பத்தைச் சேர்ந்த பிரபாவதியை மணந்தார். 1919-இல் ஜாலியன் வாலாபாக் படுகொலையின்போது அரசியலில் நுழைந்தார்.

1922-இல் மேல்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். கலிபோர்னியா சர்வ கலாசாலையில் சேர்ந்தார். சோஷலிசம் பற்றித் தீவிரமாக ஆராய்ந்தார். பழத் தோட்டத்தில் வேலை செய்து அந்த வருவாயில் தன் செலவுகளைச் செய்தார். தீவிர சோஷலிஸ்ட்டாக 1929-இல் இந்தியா திரும்பினார். காந்தியடிகள், நேரு மற்றும் காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார்.

1931-இல் காங்கிரஸ் தலைவர்கள் கைதான நேரத்தில் தலைமறைவாகத் தேசமுழுவதும் சுற்றிச் செயல்பட்டார். 1931 செப்டம்பரில் கைதானார். நாசிக் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அசோக் மேத்தா - அச்சுத்பட்டவர்த்தன் போன்றவர்களுடன் தொடர்பு. 1934-இல் விடுதலை பெற்றார். அதே ஆண்டு நவம்பரில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி தோன்றியது.

நரேந்திரதேவ், டாக்டர் லோகியா போன்றவர்களுடன் தொடர்பு. பிரிட்டிஷாருக்கு எதிராகத் தீவிர வர்க்கப் போராட்டத்தை உருவாக்க விரும்பினார். சோசலிஸ்ட் கட்சிக்குள் இருந்த கம்யூனிஸ்டுகள் இரண்டாவது உலகப் போர் காரணமாக எழுந்த தத்துவ மோதலில் வெளியேறினர். 1940-இல் கைது செய்யப்பட்டார். 9 மாதம் கழித்து விடுதலை ஆனார்.

மீண்டும் கைது. ஹசாரிபாக் சிறையில் இருந்தபோது 1942 ஆகஸ்ட் கிளர்ச்சி தொடங்கியது. 1942 நவம்பர் 9 தீபாவளி நாளன்று ஜெயபிரகாசர் சிறையிலிருந்து தப்பினார்.

ஆகஸ்ட் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தினார். 1943 செப்டம்பரில் பிடிபட்டார். பிரிட்டிஷ் அதிகாரிகளின் சொல்லொணாச் சித்ரவதைகளுக்கு ஆளானார். 1946 ஏப்ரலில் விடுதலை ஆனார்.

1948 முதல் சோஷலிஸ்ட் கட்சி தனியாக இயங்கியது. 1954-இல் பூதான இயக்கத்தில் சேர்ந்தார். 1975-இல் நெருக்கடி நிலை, சிறைவாசம்.

1977-இல் ஜனதா அரசு அமையக் காரணமாக இருந்தார். 1979 அக்டோபரில் பாட்னாவில் மறைந்தார். வெள்ளை ஆட்சியை விரட்டிய ஆகஸ்ட் புரட்சியின் கர்த்தா அவர்.

## சுபாஷ் சந்திரபோஸ்
## (1897—1945)

இந்தியாவில் விடுதலையை விரைவுபடுத்திய பெருமைக்குரியவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.



தேசிய விடுதலை இயக்கக் காலத்தில் இளைஞர்களின் இதயங் கவர்ந்தவராகவும் பிரிட்டிஷ் ஆட்சிக்குச் சிம்ம சொப்பனமாகவும் விளங்கியவர். 1897-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதி பிறந்த சுபாஷ் சந்திரபோஸ், தொடக்கக் கல்விக்குப் பிறகு - கல்கத்தாவில் கல்லூரியில் சேர்ந்தார். வெள்ளைக்கார ஆசிரியர்களை எதிர்த்த காரணத்தால் பலமுறை வெளியேற்றப்பட்டார். 1919-இல் கல்கத்தா பல்கலைக் கழகப் பட்டம் பெற்றார்.

சுபாஷ்போஸுக்குத் தேசிய இயக்கத்தில் இருந்த ஆர்வத்தைத் திசை திருப்புவதற்காக அவரது தந்தையார் சுபாஸ்போஸை ஐ.சி.எஸ். படிக்க இங்கிலாந்துக்கு அனுப்பினார். 1920-இல் ஐ.சி.எஸ். பரிட்சையிலும், 1921-இல் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைப் பட்டப் படிப்பிலும் தேர்ச்சி பெற்றார். லண்டனிலேயே ஐ.சி.எஸ். பட்டத்தை உதறி எறிந்தார். இந்தியா திரும்பி, ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து கைதானார்.

1924-ல் மீண்டும் கைது. 1924 முதல் 1927 வரை பர்மாவில் உள்ள மாண்டலே சிறையில் கடுங்காவல். சிறையில் இருந்தே வங்க சட்டசபைத் தேர்தலில் வென்றார். 1930-இல் மீண்டும் கைது. 1933 முதல் 36 வரை ஐரோப்பாவில் தங்கினார். 1936-இல் இந்தியா திரும்பிய உடன் கைது. 1939-இல் விடுதலை 1938-39 ஆண்டுகளில் காங்கிரஸ் மகாசபைத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். காந்தியடிகளுடனும் இதர தலைவர்களுடனும் கருத்து மோதல். காங்கிரசிலிருந்து வெளியேறி 1939 மே மாதம் 'பார்வர்ட் பிளாக்' கட்சியைத் தொடங்கினார். 1940-இல் கைதாகி, பின்னர் விடுதலை. 1941 ஜனவரியில் வீட்டைச் சுற்றிக் காவலில் இருந்த போலீசாரை ஏமாற்றி விட்டு இந்தியாவிலிருந்து வெளியேறினார்.

ஜெர்மனி, ஜப்பான், ஆகிய நாடுகளுக்குச் சென்று விட்டு சிங்கப்பூர் வந்து தெற்காசிய இந்தியர்களைத் திரட்டி, இந்திய தேசிய

இராணுவம் அமைத்தார். 1943 ஜூலையில் இந்திய தேசியஇராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 1943 அக்டோபர் 23-ஆம் தேதி சுதந்திர இந்திய அரசை அமைத்தார். இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றிட இராணுவத்தை நடத்தினார். யுத்தம் முப்முரமாக நடந்த நேரத்தில் பார்மோசா தீவில் ஏற்பட்ட விமான விபத்தில் 1945-ஆம் ஆண்டு மரணமடைந்தார். (அவர் மரணம் எய்தவில்லை என்று வாதிப்பவர்களும் இருக்கிறார்கள்).



**சேலம் விஜயராகவாச்சாரி**
**(1852 - 1944)**

மங்களூரில் ஒரு கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த விரிவுரையாளருக்கும் கல்லூரி முதல்வரான ஆங்கிலேயருக்கும் மனவேற்றுமை ஏற்பட்டுவிட்டது. விரிவுரையாளர் தனது ராஜினாமாவை முதல்வரிடம் சமர்ப்பித்தார். பணியைத் துறந்தார். சேலத்திற்குச் சென்று நகரசபைக் கல்லூரியில் விரிவுரையாளர் பணியை மேற்கொண்டார். சிறிது காலம் சென்று வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். 'பாரதத்தின் பீஷ்மர்' என்றும் 'இந்தியாவின் முதுகிழவர்' என்றும் புகழப் பெற்ற அவர்தான் சேலம் விஜயராகவாச்சாரி.

மதுராந்தகத்திற்கு அருகில் பொன்விளைந்தகளத்தூர் என்னும் கிராமத்தில் சடகோபாச்சாரி-கனகவல்லி தம்பதியருக்கு மகனாக 18-6-1852 அன்று பிறந்தவர் விஜயராகவாச்சாரியார். கல்வியில் சிறந்து விளங்கி, பட்டதாரியாகி, பின்னர் சட்டக்கல்வியும் கற்றார்.

1888-ல் காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் சென்னையில் கூடிய போது அதற்கு அமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்தவர் இவர்தான். 1920-ஆம் ஆண்டில் நாகபுரியில் கூடிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 'கோரிக்கைகளை வலியுறுத்திப் பயனில்லை. பூரண சுதந்திரம் கோரித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்' என்றுகூறிய மேதை. 'குழம்பியிருந்த எனக்குத் தெளிவு ஏற்படுத்தியவர்' என்று மகாத்மாவே இவரைப் புகழ்ந்தார்.

இந்தியர்களால் அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்க முடியாது என்று பிரிட்டனின் இந்தியா மந்திரியான பர்க்கென் ஹெட் என்னும் ஆங்கிலேயர் தெரிவித்தபோது, அதனைச் சவாலாக ஏற்று, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கி, 1927-ல் சென்னையில் கூடிய காங்கிரசில் சமர்ப்பித்து, ஆங்கிலேயரின் திமிரான பேச்சுக்குச் சரியானமுறையில் பதிலளித்து, அவர்களைத் தலைகுனிய வைத்தார்.

திவான் பகதூர் பட்டமும் சர் பட்டமும் இவரை நாடி வந்தபோதும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். கொச்சியின் திவான் பதவி தேடி வந்தபோதும் மறுத்துவிட்டார்.

1944 ஏப்ரல் 19-ஆம் நாளன்று அவர் மறைவெய்தினார். மறைவுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு அவர் விடுத்த செய்தி வருமாறு:

''ஜாதி மத இன பேதங்களை எல்லாம் மறந்து நாம் எல்லோரும் ஒற்றுமையாக ஒரே குலத்தவராக இருக்க வேண்டும். நாம் பெறப் போகும் சுதந்திரம் பாதுகாக்கப்பட இது ஒன்றே வழி''.



**ஜி. சுப்பிரமணிய அய்யர்**

சுதேசி பத்திரிகைகள் இல்லாத குறையை நீக்கியவர் தேசாபிமானி ஜி. சுப்பிரமணிய அய்யர். தஞ்சை ஜில்லா திருவையாற்றில் பிறந்த இவர் தனது கல்லூரிப் படிப்பு முடிந்ததும் தமது ஐந்து நண்பர்களுடன் சேர்ந்து 1878-ல் முதன் முதலில் ஆங்கிலத்தில் 'இந்து' பத்திரிகையைத் தொடங்கினார். பின்னர் ஆங்கிலம் தெரியாத மக்களும் ராஜீய விஷயங்களை அறிய தமிழில் 1882-ல் 'சுதேச மித்திரன்' பத்திரிகையைத் தொடங்கினார். இவ்விரு பத்திரிகைகளின்மூலம் ஆட்சியாளர்கள் கூறும் வீண்புரளிகளுக்குப் பதிலடி கொடுத்தார். இந்தியா முழுவதிலும் பல இடங்களில் மேடைப் பிரசங்கங்கள் செய்து நாட்டு மக்களுக்கு சுதந்திரப் பற்றும், சுதேசிய உணர்வும் வளர்த்தார். காங்கிரஸ் கட்சியைத் தொடங்கிய ஒரு சிலரில் அய்யரும் ஒருவர்.

சுப்பிரமணிய பாரதியைத் தமது 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்த்தார்.

பத்திரிகைகளில், ஆட்சியாளர்களின் அநீதிகளைக் கண்டித்து எழுதியதற்காக ஜி. சுப்பிரமணிய அய்யர் மீது அடக்குமுறையால் அபராதமும், தடையும் விதிக்கப்பட்டன. பின்னர் அய்யரவர்களையும் கைது செய்தனர். தீராத நோய் கண்ட அவரை அப்போது சென்னைக்கு விஜயம் செய்த காந்தியடிகள் அய்யரவர்களின் இல்லத்திற்கே சென்று விசாரித்தார். அப்போது அவர் மகாத்மாவிடம், 'நம் தேசத்திற்கு மேலும் தொண்டு செய்ய முடியாமல் லாயக்கற்றவனாகப் படுத்துவிட்டேனே!' என்று கண்ணீர் விட்டுக் கதறியபோது, மகாத்மா தமது கரத்தால் அய்யரவர்களின் கண்ணீரைத்துடைத்துக் கொண்டே, 'நீங்கள் நாட்டிற்காக வேண்டியது உழைத்திருக்கிறீர்கள்; ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்!'' என ஆறுதலாகக் கூறினார்.



**எஸ். சீனிவாச அய்யங்கார்**
**(1874—1941)**

இராமநாதபுரம் அரச குடும்பத்துச் சட்ட ஆலோசகராயிருந்த சேஷாத்திரி அய்யங்காரின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவர் எஸ். சீனிவாச அய்யங்கார். கல்லூரிக் கல்விக்குப் பிறகு 1897-இல் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றார்.

சட்டமேதை வி. பாஷ்யம் அய்யங்காரின் மகளை மணந்தார்; பாஷ்யத்திடமே வக்கீல் தொழில் பயின்றார். வக்கீல் தொழிலில் மகத்தான புகழ் பெற்றார். காங்கிரஸ் கட்சியில் ஈடுபாடு கொண்டார். 1907-இல் சூரத் காங்கிரசுக்குத் திலகரை ஆதரிக்கத் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளை அழைத்துச் சென்றார். அக்காலத்தில் கோயிலில் நுழைய முடியாதிருந்த நாடார் குலமக்களுக்காக வாதாடினார்.

ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்து அட்வகேட் ஜெனரல் பதவியையும் இதர பட்டங்

களையும் துறந்தார். 1922-இல் டில்லி சட்டசபைக்கு நடந்த தேர்தலில் வெற்றி பெற்றார். பிரச்சாரம் செய்வதில் நிபுணர். 1926-இல் மீண்டும் டில்லி சட்டசபைக்குச் சென்றார்.

அதே ஆண்டு கவுகாத்தியில் நடைபெற்ற காங்கிரசுக்குத் தலைமை வகித்தார். 1927-இல் சென்னை காங்கிரஸ் மகாசபையை முன்னின்று நடத்தினார். பூரண சுதந்திரக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

இங்கிலாந்து, ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச்சென்று திரும்பினார். இந்து முஸ்லீம் ஒற்றுமை, கங்கை-காவேரி இணைப்பு, சோவியத் கம்யூனிச ஆட்சி முறை இவற்றைப் பிரச்சாரம் செய்தார்.

காந்தியடிகளின் அகிம்சை நிர்மாணத் திட்டங்களை எதிர்த்தார். 1928-ல் கல்கத்தா காங்கிரஸ்



**தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப்போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல் வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன்.**

மாநாட்டில் சுபாஷ் சந்திரபோசை ஆதரித்தார். கொள்கை மாறுபாடுகள் காரணமாக 1935-இல் காங்கிரசை விட்டு விலகினார். 'மதமும் அரசியலும் கலக்கக் கூடாது. ஜனநாயக சோஷலிஸ்ட் சமூகம் அமைய வேண்டும்' என்று பிரச்சாரம் செய்தார். ஆயுதப் புரட்சி மூலம்தான் விடுதலைகிட்டும் என்று நம்பினார்.

முத்துராமலிங்கத் தேவர், ஜீவானந்தம் போன்றவர்களுக்குப் பின்பலமாக நின்றார்.

தேசிய காரியங்களுக்கு வாரி வழங்கிய வள்ளல் அவர். அவரைப் போலப் பொதுவாழ்வில் பொருட்செலவு செய்தவர்கள் இல்லை. 1941 மே 19-ஆம் தேதி உயிர் நீத்தார்.



## சத்தியமூர்த்தி

அண்ணல் காந்தியடிகளின் கட்டளைப்படி 1919-ல் இங்கிலாந்து அனுப்பி வைக்கப் பெற்ற இந்திய தூதர் குழுவின் தலைவர் அயர்லாந்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். இந்தியர்களின் பெருமையை அவர் எடுத்துச் சொல்லிக் கொணடிருந்தார்.

அந்த மண்டபத்திலே அமர்ந்திருந்த ஓர் ஐரோப்பியர் "இந்தியாவை விட்டு ஆங்கிலேயர்கள் விலகிச் சென்றால் கொள்ளையும் கொலையும் இந்தியாவில் அதிகமாகுமே" என்று கேட்டார்.

உடனே தூதுக் குழுவின் தலைவர் சிறிதும் தயக்கமின்றி "ஆங்கிலேயர்கள் என்ன அகில உலகத்துக்கும் போலிஸ்காரர்களா? என்று வெடுக்கெண கேட்டார்.

அதைக்கேட்ட ஐரோப்பியர் அந்த இடத்தைவிட்டு உடனே அகன்று சென்றுவிட்டார்.

ஐரோப்பியரிடம் துணிச்சலாகக் கேட்டவர் தீரர் சத்தியமூர்த்தி.

புதுக்கோட்டை வழக்கறிஞர் சுந்தர சாஸ்திரி, சுப்புலட்சுமி தம்பதியருக்கு 19.8.1887-ல் மகனாக திருமயத்தில் பிறந்தவர் சத்தியமூர்த்தி.

கல்லூரி மாணவராக இருந்த போதே நாட்டுப்பற்று மிக்கவராக விளங்கிய இவர் காங்கிரஸ் பேரியக்கத்தின் தொண்டர் படையில் 1908-ல் சேர்ந்தார். கிராமங்களுக்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார். சிறந்த வழக்கறிஞராக விளங்கிய இவர் திலகர், லஜபதிராய் ஆகியோரிடம் பற்றுக் கொண்டிருந்தார். காந்தியடிகளின் அறப்போரின் நெறிகள் இவரைக் கவர்ந்தன. அவற்றில் பங்கு பெற்றார்.

1923, 1926 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். மகாகவி பாரதியின் பாடலை அரசு தடை செய்த போது சட்டமன்றத்தில் அவசரத் தீர்மானம் கொண்டு வந்து பாரதியின் பாடலின் பெருமையை எடுத்துரைத்தார் சத்தியமூர்த்தி. இவரது தீர்மானம் வெற்றியுடன் நிறைவேறியது. 1934-ல் மத்திய சட்டமன்ற உறுப்பினரானார். டில்லி மத்திய சட்டசபையில் அவர் இங்கிலீஷ்காரர்களை மடக்கிய ஆற்றல் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கதை கதையாகப் பேசப்பட்ட காலம் உண்டு. 1939-ல் சென்னை மாநகரத்தின் மேயர் ஆனார். 1942-ஆம் ஆண்டுப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டார். உடல் நலிவின் காரணமாக விடுதலை பெற்றார்.

கலை உள்ளம் கொண்ட இவர் அமெச்சூர் நாடகங்களில் நடித்துள்ளார். காமராஜரின் குருநாதராக விள்ங்கிய இவர் சிறிது காலம் நோய் வாய்ப்பட்டு 1943 மார்ச் 8-ஆம் நாளன்று அமரரானார். "இந்திய விடுதலைக்காக வாதாட ஒரே ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினால் போதும் என்ற நிலை வந்தால் நான் சத்தியமூர்த்தியைத்தான் அனுப்புவேன்" என்று மகாத்மா கூறினார். அந்த அளவு சட்ட மன்ற நாடாளுமன்ற விவகாரங்களில் புகழும் தேர்ச்சியும் பெற்றவர். அவருக்கிணையாக ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசக்கூடியவர்கள் மிகவும் அருமை. தமிழ்நாட்டின் பெருமையை உயர்த்திய பெருமகன். 'சுதந்திர இந்தியாவைக் காணாமல் போகிறேனே' என்று புலம்பியவாறு உயிர் நீத்தார்.



## வ. உ. சிதம்பரனார்

சுதேசி நாவாய்ச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி வாணிகக் கப்பல் போக்குவரத்தைத் தொடங்கி கப்பல் ஓட்டிய தமிழர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர் வ. உ. சிதம்பரனார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் வழக்கறிஞர் உலகநாதபிள்ளை-பிரமாயி அம்மாள் தம்பதியாருக்கு மகனாக 5.9.1872ல் பிறந்த சிதம்பரனார் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்று 1895ல் வழக்கறிஞரானார். தேசிய இயக்கத்தில் திலகரின் தென்னாட்டுத் தளபதியாக விளங்கினார். தீவிரவாதியாகத் திகழ்ந்தார்.

விடுதலை முழக்கத்தை மேடைகளில் முழங்கியதாலும் விபின் சந்திர பாலரின் விடுதலையைப் போற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊர்வலம் தடைசெய்யப்பட்டபோது அதை மீறியதாலும் நெல்லை மாவட்ட கலெக்டர் விஞ்ச் துரை, சிதம்பரனாரைக் கைது செய்தார். அவர் மீது அரசநிந்தனைக் குற்றம் சாட்டப்பட்டு 40 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அப்பீலில் 6 ஆண்டாகக் குறைக்கப்பட்டது.

1912 டிசம்பர் திங்களில் விடுதலை பெற்றார். 1936 நவம்பர் 18 ஆம் நாள் அமரரானார்.

**திருச்சி விழா**

# தியாகிகளை நினைப்போம்!




திருச்சிராப்பள்ளி சிறைச்சாலையிலிருந்த தியாகிகளை நினைவு கூரும் விழா தமிழ்நாடு அரசின் சார்பில் 30-7-1988 அன்று திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையில் சிறப்புற நடைபெற்றது.

செய்தி மக்கள்தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி இ.ஆ.ப. அவர்கள் வ்ழாவிற்கு வநதிருந்தோரை வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:

'விடுதலைக்காகச் சிறைச்சாலையில் பல கொடுமைகளை அனுபவித்த தியாகிகளின் நினைவைக் கொண்டாடும் இந்த விழா, வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் இதே போன்று தியாகிகளை நினைவு கூரும் வகையில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. விடுதலைக்காகப் பாடுபட்டுச்சிறையில் இருந்தவர்களும், சிறையில் இருந்த தியாகிகளின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் இங்கு உரையாற்ற இருக்கிறார்கள்'.

''இந்தச் சிறையில் நூற்றுக்கணக்கான தியாகிகள் இருந்தனர். அவர்களில் ஒரு சிலரின் உருவப் படங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை இங்கு திறக்கப்பட உள்ளன''.

விழாவிற்குத் தலைமையேற்ற மாவட்ட ஆட்சித்தலைவர் திரு உஜாகர்சிங். இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் கூறியதாவது :

''இந்தச் சிறைச்சாலையில் பொங்கல், தீபாவளி போன்ற விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. நம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளின் நினைவைப் போற்றும் வகையில் இன்று இங்கு விழா கொண்டாடப்படுகின்றது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்த நாட்டுச் சிறையில் அடைக்கப்பட்டது போதாதென்று, வெளி நாட்டுச் சிறையிலும் அடைக்கப்பட்டனர்''.

திரு ஓ.வி. அளகேசன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது :

''நான் சிறுவனாக இருந்தபோது காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று, தண்டி சென்று, காந்தியடிகளைச் சந்தித்து, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில் வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டேன். பாரத விடுதலைக்காகப் பாடுபட்டோம் என்ற திருப்தி எனக்கு இன்று ஏற்பட்டுள்ளது. கல்லூரிப் படிப்பைத் துறந்துவிட்டு சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டேன். சிறைவாசம் ஏற்ற தியாகிகளை நினைவுகூரும் வகையில் அரசு இன்று விழா எடுத்துள்ளது."

'தியாகிகள் உருவாக்கிய பலனை இன்று விடுதலை மூலம் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்: தியாகிகளின் குடும்பங்களுக்குச் செய்யும் பல்வேறு உதவிகளை விரிவுபடுத்த வேண்டும்''

திரு. கு. இராஜவேலு அவர்கள் பேசுகையில் கூறியதாவது :

''அலிப்புரம்சிறையில் நான் இருந்தேன். அன்று சிறையில் இறந்தால் கொன்றை மலரைக் கொண்டு அடக்கம் செய்வார்கள். அவ்வளவு தூரம் சிறையில் பல இன்னல்களைச் சுமந்தோம். அன்று சிறையில் அடைபட்ட தியாகிகளை இன்று நினைவு கூரும் வகையில் விழாக் கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

'1905-இல் அந்தமானுக்கு அனுப்பப்பட்ட தியாகிகள் 1947-ல்தான் வெளிவந்தார்கள். அப்படிப்பட்ட தியாகிகளை நாம் இன்று நினைவு கூர்கிறோம்''.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''தியாகிகள் நாட்டிற்காகச் செந்நீர் வழங்கியுள்ளார்கள். அவர்


கட்கு இந்த நேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"என்னுடைய திருமணம் இந்தச் சிறையிலே நிச்சயிக்கப்பட்டது. திருமணம் முடிந்ததும், இங்குவந்து வாழ்த்தும் பெற்றுள்ளேன்.

"தமிழகஅரசு ஒவ்வொரு ஆண்டும் விழா நடத்தி தியாகிகள் அரும்பாடு பட்டுப் பெற்ற சுதந்திரத்தை இளைஞர்கட்கு விளக்கிக் கூற வேண்டும்.

"காந்தியடிகளின் கொள்கை இன்று வெளிநாடு முழுவதும் பரவி வெற்றி பெற்று வருகிறது. வந்தே மாதரத்தினை உரக்கக் கூறவேண்டும்."

திரு அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் பேசுகையில்,



"இந்த நேரத்தில் நாம் புதிய உணர்ச்சி பெற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

"எனது மாமனாரையும், எனது தந்தையையும் இந்தச் சிறையில் வந்து சந்தித்துள்ளேன். பெரும் தலைவர்களையும் இங்கு சந்திக்கும் வாய்ப்புப் பெற்றுள்ளேன். ஜாதிமத வித்தியாசமின்றிப் பழகிய திருச்சி வாசுதேவன் குடும்பத்தையும் மறக்க முடியாது.

'தியாகிகளின் மனைவிமார்கள் பட்ட கஷ்டத்திற்கு இன்று நான் உணர்வுபூர்வமாகத் தலை வணங்குகின்றேன். தேசப்பற்று, சுதந்திர உணர்ச்சி ஆகியவற்றை இன்றைய இளைஞர்கட்கு ஊட்ட வேண்டும்.

பாடப் புத்தகங்கள் மூலமும் மாணவர்கட்கு சுதந்திர எழுச்சியை ஊட்ட வேண்டும்."

திரு பி.ஏ. தெய்வசிகாமணி அவர்கள் பேசுகையில், 'என்னுடைய தந்தையார் சர்தார் ஆதி கேசவலு நாயக்கர் அவர்களின் படத்னைத் திறந்து வைத்தமைக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். என்னுடைய தந்தை சிறையில் சிரிப்புடன் இருப்பார். அவரது புத்தகத்தை வருங்கால இளைஞர்கள் படித்துப் பயன்பெற வேண்டும்." என்றார்.

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தியாகிகளின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்துப் பேருரையாற்றுகையில், குறிப்பிட்டதாவது:

"ஏழை நெசவாளியாக இருந்தேன். நான் பழைய காங்கிரஸ்காரன். ஒரு முழக் குச்சியை எடுத்துக்கொண்டு, கொடியைக் கட்டிக்கொண்டு, 5 பேராகச் சென்று, தேச விடுதலைக்காகக் கோஷம் போடுவேன். காந்தியடிகள் இல்லையென்றால், சுதந்திரம் கிடைத்திருக்காது.

அமெரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகள் தாம் பெற்ற சுதந்திரத்தை உணர்வுப்பூர்வமாக மதித்து நடந்து வருகின்றன. அதேபோல நாமும் இந்தியாவில் உணர்வுடன் செயல்பட வேண்டும்.

'காந்தியடிகள் பிரதமர் பதவிக்கோ, ஜனாதிபதி பதவிக்கோ ஆசைப்படவில்லை. நம்மைச்சுற்றிப் பல நாடுகள் சுதந்திரம் பெற்றன. அங்கெல்லாம் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. இந்தியா சுதந்திரத்துடன் இயங்கி வருகிறது. தியாகிகள் தன்னம்பிக்கை பெற வேண்டும். நம்முடைய வேலை என்று கருதி தியாகிகள் நாட்டிற்காகச் செயல்பட வேண்டும். எதிர்காலத் தலைமுறையினருக்கு இன்றைய தலைமுறையினர் சுதந்திரத்தைப் பாதுகாத்துத் தரவேண்டும்"

மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள்நினைவுத்தூணைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகையில். "இன்று நாம் சுதந்திரமாக இருப்பதற்கு நேரு, காந்தி முதலானோர்தான் காரணம். நம் முன்னோர் பெற்ற சுதந்திரத்தை நாம் பேணிப் பாதுகாக்கவேண்டும்; இங்கு நாம் கூடினோம், கலைந்தோம் என்று இல்லாமல், தலைவர்களின் கருத்துக்களைப் பயன்படுத்திக் கொண்டு செயல்பட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

விழாவில் ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ.பத்மநாபன் அவர்கள், நலிவுற்ற மக்கட்குப் பல்வேறு உதவிகளை வழங்கினார். இதன் மதிப்பு ஏறத்தாழ ரூ. 7 இலட்சம் ஆகும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு வி. டி. வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

ஆயிரக்கணக்கான தியாகிகளும் தியாகிகளின் குடும்பத்தினரும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தது பெருமிதத்திற்குரியதாகும்.

—நமது செய்தியாளர்

# மண்டேலா பிறந்தநாள் விழா



தென்னாப்பிரிக்காவில் வாழும் கறுப்பு இன மக்களின் சுதந்திர வாழ்வுக்காக முழு மூச்சோடு போராடி வருபவர் நெல்சன் மண்டேலா. தென் ஆப்பிரிக்கக்கொடுங்கோல் அரசால் இருபத்தாறாண்டுக் காலமாகத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அந்த மாவீரனின் 70-வது பிறந்த நாள்விழா உலகெங்கும் 18-7-88 அன்று கொண்டாடப்பட்டது.

அதன் தொடர்பாக, தமிழ்நாடு அரசும் மாவீரன் மண்டேலா பிறந்த நாள் விழாவை 28-7-88 அன்று சென்னையில் உள்ள இராணிமேரி கல்லூரி வெள்ளிவிழா அரங்கில் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் கொண்டாடியது. இராணிமேரிக் கல்லூரி முதல்வர் திருமதி நிர்மலா தியாகராஜன் அனைவரையும் வரவேற்றார்.

'சூரியர்' இதழின் ஆசிரியர் திரு. மணவை முஸ்தபா, தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ சிவஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

செய்தி மக்கள்தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. அவர்கள் தமது தலைமை உரையில்,

''உலக நாடுகள் விஞ்ஞான முன்னேற்றம், தத்துவ முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம் கண்டு வரும் இந்நாளில், தன் இன மக்கள் உலக மக்களுக்கு இணையாகச் சுதந்திர வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் போராடி, சிறையில் இருபத்தாறு ஆண்டுக் காலமாக அடைக்கப்பட்டிருக்கும் தென்னாப்பிரிக்கக் கறுப்பர் இனத் தலைவர் தான் நெல்சன் மணடேலா. தென்னாப்பிரிக்க அரசின் இனவெறியை எதிர்த்து முதல் குரல் கொடுத்தவர்கள் நமது இந்தியர்கள்தான். முதன் முதல் மகாத்மா காந்தியடிகள்தான் அங்கே இனவெறியை எதிர்த்து நின்றார். அதன் பிறகு தில்லையாடி வள்ளி. அவர்களுக்கெல்லாம் முன்பாக அங்கே இனவெறி எதிர்ப்புக்கு வித்திட்டவர் பாலசுந்தரம் என்ற இந்தியர்தான் என்பதற்கு வரலாறு இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

திரு மணவை முஸ்தபா அவர்கள் தம் சிறப்புரையில் 'வரலாறு படிக்கும் மாணவிகளிடையே, வரலாறு படைக்கும் மண்டேலாவுக்கு தமிழக அரசு விழா நடத்துவது, மிகவும் பொருத்தமுடையதாகும், என்று குறிப்பிட்டார். ''நெல்சன் மண்டேலாவின் இயக்கம், இன்றைக்கு எரிமலையாக வெடித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டம் வெல்லப் போவது உறுதி'' என்றும் குறிப்பிட்டார்.

நெல்சன் மண்டேலாவின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, தமிழ்வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பேசியதாவது:

'தென்னாப்பிரிக்காவின் நிற வெறி, உலகத்திற்கு இரண்டு மகாத்மாக்களைத் தந்திருக்கிறது. ஒருவர் அண்ணல் காந்தியடிகள்; இன்னொருவர் நெல்சன்மண்டேலா. அங்குள்ள ஆதிக்க வெறியர்களால் மனிதாத்மாக்களைத்தான் அழிக்க முடிந்ததே தவிர, மகாத்மாக்களை அழிக்க முடியவில்லை. இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் 1920-ல் ராஜாஜியும், 1922-ல் காந்தியடிகளும் தனிக்கொட்டடியில் அடைக்கப்பட்டார்கள். அதே போல்-ஒரு மனிதனைப் பெட்டியில் வைத்துப் பூட்டுவதைப் போல் மிருகத்தனமாக, இருபத்தாறாண்டுக் காலமாக நெல்சன மண்டேலாவைத் தனிமைச் சிறையில் வைத்திருக்கிறார்கள் அங்கே. உலகநாடுகளும், ஐக்கியநாடுகள் சபையும் சேர்ந்து, தென்னாப்பிரிக்க நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர் மண்டேலாவை விடுதலை செய்ய ஒரு தேதியை நிர்ணயிக்க வேண்டும் ; அதற்குள் அவரை விடுதலைசெய்யவில்லையேல் தென்னாப்பிரிக்க நாட்டைப் புறக்கணிக்க முன்வர வேண்டும்.''

—நெல்சன் மண்டேலா பிறந்த நாள் விழா முடிவில், அங்கு திறந்து வைக்கப்பட்ட பெரிய அளவிலான அவரது திருவுருவப்படம் இராணி மேரிக் கல்லூரிக்கே செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரால் வழங்கப்பட்டது. விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி தெரிவித்தார்.

—நமது செய்தியாளர்

# விடுதலை இயக்கத்தின் வீரமிக்க வரலாறு

இந்தியத் துணைக்கண்டத்தில் வர்த்தகம் செய்ய வந்த பிரிட்டிஷ் காரர்கள் இந்தியாவையே தங்கள் ஆட்சியில் கொண்டு வந்தனர் என்பதுதான் வரலாறு. 1600-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது கிழக்கிந்தியக் கம்பெனி.

டச்சு, போர்ச்சுக்கீசியரைத் தொடர்ந்து இங்கிலாந்தைச்சேர்ந்தவர்கள் இந்தியாவின் சில பகுதிகளில் வாணிபம் செய்ய வந்தனர்.

சக்கரவர்த்தி ஷாஜஹானின் மகள் இளவரசி ஜஹானாராவுக்குத் தீக்காயங்கள் ஏற்பட்டன. பிழைக்க மாட்டாள் இளவரசி என்ற நிலையில் டாக்டர் கேப்பிரியல் பஃப்டன் என்பவர் சிகிச்சை அளித்து உயிர்ப்பித்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் மருத்துவர் அவர். அவருடைய சிகிச்சைக்கு மகிழ்ந்த ஷாஜஹான், கிழக்கிந்தியக் கம்பெனி தனது ஆட்சியில எங்கு வேண்டுமானாலும் வரியின்றி வியாபாரம் செய்ய அனுமதித்தார்.

இது 1645-ல் நடந்தது.

அந்தக் கால கட்டத்தில் 1662-ல் பம்பாய் கிழக்கிந்தியக் கம்பெனியின் வசமானது. 1666-ல் ஷாஜஹான் இறந்தார். வெள்ளையரை எதிர்த்த வீர சிவாஜியும் 1680-ல் இறந்தார். சீக்கியர்களின் எதிர்ப்பும் மங்கியது.

1757-ல் கல்கத்தாவைக் கிழக்கிந்தியக் கம்பெனி முழுவதும் தன் வசமாக்கியது. 1791-ல் வெள்ளைத் துருப்புக்கள் பங்களூரைப்பிடித்தன. 1809-ல் வெள்ளையருக்கு எதிரான புரட்சிகள் அடக்கப்பட்டன.

டில்லியில் 1816-ல் பகதூர்ஷா சக்கரவர்த்தியாகப் பிரகடனப் படுத்தப்பட்டார். வட மாநிலங்களில் வெள்ளையரை எதிர்த்துப் பெரும் கலவரம், 1857 சிப்பாய்க் கலகம் தோன்றியது.

வடக்கே ஜான்சிராணி தோன்றி வெள்ளையரை எதிர்த்து விரட்டினாள். தெற்கே வேலூரில் பெரும் புரட்சி; 1857 செப்டம்பரில் வெள்ளையரின் எதிர்ப்பைத் தாங்க முடியாமல் பகதூர்ஷா சரண் அடைந்தார்.

சிப்பாய்க் கலகம் என்று வர்ணிக்கப்பட்ட முதல் சுதந்திரப் போரை பிரிட்டிஷார் நசுக்கினர்.

**இத்தொகுப்பு...**

**இந்தியாவில் அந்நிய ஆதிக்கம் இடம்பெறத் தொடங்கியபோதே அங்குமிங்குமாகச் சில எதிர்ப்புகள் தோன்றின. ஆனால் மக்களை ஒன்று திரட்டி பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நின்றது தேசிய இயக்கம்தான். 400 ஆண்டு சரிதத்தில் தேசீய இயக்கத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.**

வெள்ளையர்கள் மீண்டும் லட்சுமணபுரி எனும் லக்னோ நகரைக் கைப்பற்றினர். 1858 ஜூன் மாதம் போர்க் களத்தில் ஜான்சிராணி லட்சுமிபாய் மரணம் எய்தினார்.

இந்தியாவில் உள்ள மன்னர்கள் அனைவரும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசம் தெரிவித்தனர்.

இந்தியாவின் பேரரசியாக 1876-இல் விக்டோரியா மகாராணி பிரகடனம் செய்யப்பட்டார்.

ஆங்கிலக்கல்வி பெற்று உலக வரலாறுகளைப் படித்த இந்தியர்களில் தேசிய ஆவேசம் கொண்ட தலைவர்கள் உருவான காலகட்டம் இது.

இந்தக் காலத்தில்தான் 1881-ல் மோதிலால் நேரு, ரவீந்திரநாத தாகூர், மதன்மோகன் மாளவியா, 1863-ல் விவேகாநந்தர், 1865-ல் லாலா லஜபதிராய், 1866-ல் கோபாலகிருஷ்ணகோகலே, 1869-ல் மகாத்மா காந்தி என்று தேசத் தலைவர்கள், வரிசையாகப் பிறந்தார்கள்.

ஆங்காங்கே இந்திய மக்களுக்கு உரிமைக்குரல் கொடுக்கப் பல அமைப்புக்கள் தோன்றின. 1851-ல் வங்காளத்தில் பிரிட்டிஷ் இந்தியச் சங்கம் தோன்றியது.

அதே ஆண்டில் பம்பாய்ச் சங்கம் என்ற அமைப்பை, தாதாபாய் நவுரோஜி தொடங்கினார். சென்னையில் 1881-ல் மகாஜன சபை தொடங்கப்பட்டது.

தொகுப்பு:
**ஆர். சீனிவாசமூர்த்தி**

இந்தக் காலத்தில்தான் ஜி. சுப்பிரமணிய அய்யர் சென்னையில் இந்து பத்திரிகையை ஆரம்பித்தார். பல முன்னணியினர் ஒரு தேசிய சபை தொடங்குவது பற்றி விவாதித்து வந்தனர். 1883-ல் கல்கத்தாவில் ஒரு தேசிய மாநாடு நடந்தது. அதில் மக்கள் உரிமைக்காகப் போராடுவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் ஏ. ஓ. ஹ்யூம் எனும் ஆங்கிலேயருக்கு இந்திய மக்களின் நிலை பற்றிக் கவலை எழுந்தது. அவர் பிரிட்டிஷ் ஆட்சியில் முக்கிய அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர்.

அவர் இந்தியாவில் உள்ள பல பிரமுகர்களுக்குக் கடிதம் எழுதினார். சேலம் விஜயராகவாச்சாரியார், ஜி. சுப்பிரமணிய அய்யர், ரங்கையநாயுடு, சுப்பராவ் பந்துலு போன்ற பல தென்னிந்திய பிரமுகர்களின் ஆதரவைத் தேடினார்.



**ஏ.ஓ. ஹ்யூம்**

முன்னமேயே சென்னைப் பிரமுகர்கள் அடையாறு ஆலமரத்தடியில் கூடி காங்கிரஸ் என்ற பெயரில் தேசிய அமைப்பைத் தொடங்க முடிவு செய்திருந்தார்கள்.

ஹ்யூம் இடமிருந்து கடிதம் வரவே, அவர்கள் பம்பாயில் நடைபெறும் கூட்டத்திற்குச் செல்ல முடிவு செய்தார்கள்.

இந்தியர்களின் போராட்ட உணர்வை நசுக்கவும், அவர்களுடைய உரிமைகளைப்பற்றி வாதாடி பிரிட்டிஷ் அரசிடமிருந்து பெற்றுத் தரவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையாளாகவே ஹ்யூம் செயல்பட்டார் என்று கூறுவதுண்டு.

அக்கால பிரிட்டிஷ் ஆட்சித் தலைவர்களிடம் ஹ்யூம் தொடர்பு கொண்டிருந்த விவரங்கள் பிறகு வெளியாகின.

1885 மார்ச் மாதம் ஹ்யூம் எழுதிய கடிதங்கள் கிடைக்கப் பெற்ற பலர், மாநாட்டுக்கு வர விருப்பம் தெரிவித்தனர்.

**காங்கிரஸ் மகாசபையின் முதல் கூட்டம்**

அதன் பயனாக 1885 டிசம்பர் 28-ந் தேதி பம்பாயில் கோகுல் தாஸ் தேஸ்மால் கல்லூரியில் காங்கிரஸ் மகாசபை பிறந்தது. முதல் கூட்டத்துக்கு உமேஷ்சந்திர பானர்ஜி தலைமை தாங்கினார். அவரை வழிமொழிந்தவர் சுப்பிரமணிய அய்யர். தாதாபாய் நவுரோஜி, பெரோஸ் ஷா மேத்தா, சேலம் விஜயராகவாச்சாரியார், ஜி.சுப்பிரமணிய அய்யர், ரங்கைய நாயுடு, அனந்தாச்சார்லு போன்றவர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு தேசிய அமைப்புக்களை ஒன்று சேர்த்து தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை ஏற்படுத்துவது என்ற தீர்மானம் நிறைவேறியது. பிற தீர்மானங்கள் எல்லாம் வெறும் கோரிக்கைகளே!

அடுத்து 1886-ல் தாதாபாய் நவுரோஜி தலைமையில் கல்கத்தா காங்கிரஸ் நடைபெற்றது. 1887-ல் சென்னையில் பத்ருதீன் தயாப்ஜி தலைமையிலும், நான்காவது காங்கிரஸ் 1888-ல் அலகாபாத்தில் ஜார்ஜ் யூல் தலைமையிலும், 1889-ல் பம்பாயிலும் நடைபெற்றது.

இந்த மாநாடுகளில் ஆங்கில அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானங்களே நிறைவேறின.

அடுத்து 1890-ல் கல்கத்தாவில் பெரோஸ் ஷா மேத்தா தலைமையில் காங்கிரஸ் நடைபெற்றது. 1891-ல் நாகபுரியில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்த பி. அனந்தாசார்லு தான், 'இந்தியர்கள் தாங்களே ஆளும் நிலை வரவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அலகாபாத்தில் 1891-ல் எட்டாவது காங்கிரஸ் நடந்தது. உமேஷ் சந்திர பானர்ஜி தலைமை.

9-வது காங்கிரஸ் லாகூரில் 1893-இல் தாதாபாய் நவுரோஜி தலைமையில் நடைபெற்றது.

10-வது காங்கிரஸ் சென்னையில் 1894-இல் ஆல்பிரெட் வெப் தலைமையில் நிகழ்ந்தது.

11-வது காங்கிரஸ் - பூனாவில் 1895-இல் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் நடைபெற்றது.



சுரேந்திரநாத் பானர்ஜி

12-வது காங்கிரஸ் மகாசபை 1896-ல் கல்கத்தாவில் ரஹீமுல்லா சயானி என்பவர் தலைமையில் நடந்தது. இங்குதான் சட்டபூர்வமான கிளர்ச்சி என்ற கருத்து எழுந்தது. இதன் பின்னர்தான் பிரிட்டிஷ் அரசு இந்திய சட்டசபைச் சட்டம் என்கிற ஒன்றைக் கொண்டு வந்தது.

**வீரசாவர்க்கர் தலைமையில்**

விடுதலைக்குத் தீவிரவாதமே சரியான மார்க்கம் என்று கருதிய வாலிபர்கள் வீரசாவர்க்கர் தலைமையில் ஒன்று திரண்டனர்.

இதே கால கட்டத்தில் தீவிர இயக்கம் ஒன்றை பாலகங்காதர திலகர் மராட்டியத்தில் உருவாக்கினார். ஆட்சேபகரமாக எழுதிய குற்றத்திற்காகத் திலகருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அமராவதி நகரில் 1897-ல் சர்.வி. சங்கரன்நாயர் தலைமையில் 13-வது காங்கிரஸ் மாநாடும், 1898-ல் சென்னையில் ஆனந்த மோகன் போஸ் தலைமையில் 14-வது காங்கிரஸ் மாநாடும் நடந்தன.

லக்னோவில் 15-வது காங்கிரஸ் 1899-இல் ஆர். சி. தத் தலைமையில் நடைபெற்றது.

லாகூரில் 16-வது காங்கிரஸ் 1900-இல் சந்தவர்க்கர் தலைமையில் நடைபெற்றது.

கல்கத்தாவில் 17-வது காங்கிரஸ் 1901-இல் தின்ஷா இ.வாச்சா தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆண்டில்தான் விக்டோரியா மகாராணி மறைந்தார்.

அகமதாபாத்தில் 18-வது காங்கிரஸ் 1902-இல், சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆண்டு 12-ஆம் தேதியன்று சுவாமி விவேகாநந்தர் தமது 39-வது வயதில் மறைந்தார்.

இரண்டாம் எட்வர்ட் டில்லியில் இந்தியாவின் சக்கரவர்த்தியாக 1903-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி பதவி ஏற்றார். பெரிய தர்பார் நடந்தது. இதனால் இந்திய மக்களின் மனம் குமுறியது.

மராட்டியத்தில் அந்நியப் பொருள்கள் பகிஷ்காரத்தைத் திலகர் தொடங்கினார்.

1903-ல் சென்னையில் 19-வது காங்கிரஸ் மாநாடு லால்மோகன் கோஷ் தலைமையில் நடந்தது.

இந்தக் கால கட்டத்தில்தான் மகாத்மாகாந்தி தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் உரிமைக்காகப் போராடத் தொடங்கியிருந்தார். ஹென்றி காட்டன் என்னும் ஆங்கிலேயர் தலைமையில் 1904-இல் பம்பாய் நகரில் 20-வது காங்கிரஸ் மாநாடு நடந்தது.

அடுத்து வந்த 1905-ல் தான் இந்திய அரசியலில் சூடு பிடிக்கத் தொடங்கியது. வங்கப் பிரிவினை எனும் தீய திட்டத்தை பிரிட்டிஷ் ஆட்சி அறிவித்தது.

வங்கம் கிளர்ந்து எழுந்தது.

பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' எனும் கீதம் இந்தியாவெங்கும் ஒலித்தது. பிபின் சந்திரபால் தலைமையில் வங்கம் ஒன்று திரண்டது. அரவிந்தர் இந்தக் கனலை வளர்த்தார்.

மராட்டியத்தில் திலகர் தலைமையில் எழுச்சி, பஞ்சாபில் பஞ்சாப் லாலா லஜபதிராய் தலைமையில் போராட்டம். தமிழகத்தில் வ.உ. சிதம்பரனார் தலைமையில் தேசிய அணி வகுப்பு; எங்கு நோக்கிலும் அடக்கு முறை-சித்ரவதை; பல தேச பக்தர்களுக்கு மரண தண்டனை; காங்கிரசில் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே பலப் பரீட்சை.

இந்நிலையில் 1905-ல் காசி நகரில் கோபாலகிருஷ்ண கோகலே தலைமையில் 21-வது காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிலேயே மிதவாதப் போக்கினுக்குக் கடும் எதிர்ப்பு எழுந்தது.

**சுயராஜ்யமே கொள்கையாக**

காங்கிரசுக்கு நடுநிலையானவர் என்று கருதப்பட்ட தாதாபாய் நவுரோஜி தலைமை வகித்தார். 'இந்தியாவின் கொள்கை சுயராஜ்யமே' என்று அந்தக் காங்கிரசில் தான் முதன்முதல் கூறப்பட்டது.

மிதவாதிகள் செல்வாக்கு சரிந்தது. நாட்டின் அரசியலில் எங்கு நோக்கினும் பதட்டநிலை. 1907-இல் சூரத் காங்கிரஸ் ராஷ்பிகாரி கோஷ் தலைமையில் நடந்தது.



**விபின் சந்திரபால்**

காங்கிரஸ் மாநாட்டிலேயே தீவிர வாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் அடிதடி; பெரும் கலவரம்.

பீகாரில் 1908-இல் ஏப்ரல் மாதம் முசபர்பூரில் ஒரு வெள்ளை கலெக்டரைக் கொலை செய்ய வெடிகுண்டு வீசப்பட்டது. இரு வெள்ளைக்காரப்பெண்கள் கொலையுண்டனர்.

18 வயதான குதிராம்போஸ் என்ற இளைஞர் அக்குற்றத்துக்காகத் தூக்கிலிடப்பட்டார். இது பற்றித் திலகர் எழுதிய கட்டுரைக்காக 18 ஆண்டுச் சிறைதண்டனை. திலகர் நாடு கடத்தப்பட்டு பர்மாவில் மாண்டலே சிறையில் அடைக்கப்பட்டார்.

**நாடெங்கும் கொந்தளிப்பு**

சென்னையில் 1908-ல் கூடிய காங்கிரஸ், ராஷ்பிகாரி கோஷ் தலைமையில் பல கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றியது. நாசிமாவட்ட கலெக்டர் ஜாக்சன் கொலை செய்யப்பட்டார். அந்த ஆண்டு 1909-இல் லாகூரில் மதன் மோகன் மாளவியா தலைமையில் 24-வது காங்கிரஸ் மகாசபை நடந்தது. இந்த மாநாட்டு நடவடிக்கைகளும் தீர்மானங்களும் கொதித்துக் கொண்டிருந்த இந்திய மக்களின் மனநிலையைப் பிரதிபலிப்பதாக இல்லை.

காங்கிரசின் 25-வது மாநாடு அலகாபாத்தில் 1910-ஆம் ஆண்டு வில்லியம் வெட்டர்பர்ன் தலைமையில் நடந்தது. 1911-ஆம் ஆண்டு வங்கம் மீண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டது. இது மக்களுக்குப் பெரிய வெற்றியாகும்.

**டில்லி தலைநகரானது**

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், மேரியும் இந்தியா வந்தனர். தர்பார் நடத்தினர். கல்கத்தாவுக்குப் பதிலாக டில்லி இந்தியாவின் தலைநகரம் ஆக்கப்பட்டது. 1912, 1913, 1914- ஆண்டுகளின் காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களுக்குப் பிறகு, இந்திய அரசியலில் பெரும் மாறுதல்கள் உருவாகத் தொடங்கின.

மகாத்மா 1915 ஜனவரியில் தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பினார். பீகாரில் சாம்பரான் விவசாயிகளுக்காகப் போராட்டத்தைத் தொடங்கினார்.

திலகரும், அன்னி பெசண்ட்டும் ஹோம் ரூல் லீக் எனும் அமைப்பைத் தொடங்கினர். பிரிட்டிஷ் ஆட்சி சில சமரசத் திட்டங்களை அறிவித்தது. 1916-ஆம் ஆண்டு லக்னோ காங்கிரஸ் நடந்தது. அம்பிகா சரண் மசூம்தார் தலைமை வகித்தார்.

**காந்தியும் நேருவும் சந்தித்த மாநாடு**

இந்த மாநாட்டில் திலகர் கலந்து கொண்டார். இங்குதான் முதன் முதலாக மகாத்மாவும் பண்டித நேருவும் சந்தித்தனர். அன்னி பெசண்ட் கைது செய்யப்பட்டார். லக்னோவில்தான் காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அடுத்து 1917-ஆம் ஆண்டில் 32 வது காங்கிரஸ் மாநாடு கல்கத்தாவில் நடந்தது. திருமதி அன்னி பெசண்ட் தலைமை தாங்கினார். சாம்பரானில் காந்தியடிகள் தடையை மீறிக் கைதாகி பின்னர் விடுதலை பெற்றார். சத்தியாக்கிரகம் எனும் புதுவழி தோன்றியது

அடுத்த ஆண்டு 1918-இல் புதிய இந்தியா மந்திரியாக வந்த லார்ட் மாண்டேகு என்பவர் இந்தியர்களுக்கு ஆட்சியில் கூடுதலாகப் பங்கு கொடுக்கும் சீர்திருத்தங்களை வெளியிட்டார். புரட்சிக் குற்றம் செய்பவர்களை விசாரணையின்றிச் சிறையில் அடைக்கும் சட்டம் கொண்டுவர 'ரவுலட்' எனும் நீதிபதி தலைமையிலான குழு, அரசுக்குப் பரிந்துரைத்தது.

ஹோம்ரூல் லீகின் தீவிர பிரச்சாரம்; திலகர் இங்கிலாந்து சென்றார். 1918 செப்டம்பரில பம்பாயில் காங்கிரஸ் கட்சி சிறப்பு மாநாடு நடத்தியது. ஆண்டு இறுதியில் மதன் மோகன் மாளவியா தலைமையில் டில்லியில் காங்கிரஸ் மகாசபை நடந்தது. 'ரவுலட்' சட்டத்தை எதிர்த்துக் குரல் எழுப்பப்பட்டது.

இதே 1918-ல் தான் மகாத்மா காந்தி குஜராத்தில் பர்தோலி பகுதியில் வரி கொடா இயக்கம் நடத்தினார்.

அடுத்து 1919-இல் வைசிராய் நிர்வாக கவுன்சிலில் சில மிதவாத இந்தியர்கள் இடம் பெற்றனர். அரசுக்கு அவசரகால அதிகாரம் வழங்கும் ரவுலட் சட்டம் அமலுக்கு வந்தது. 'அறப்போர் நடத்துவேன்' என்று மகாத்மா எச்சரிக்கை. நாடெங்கும் அர்த்தால்.



**அண்ணல் காந்தியடிகள்**

பஞ்சாபில்-அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் பொதுக் கூட்டத்தில் துப்பாக்கி சூடு; ஆயிரக்கணக்கில் மக்கள் மரணம், ஜெனரல் டயர் என்பவனின் பேயாட்சி. நாடெங்கும் கொந்தளிப்பு, மகாத்மா உட்படப் பலர் கைது. எங்கும் இராணுவ ஆட்சி, சர் பட்டத்தைக் கவியரசர் தாகூர் துறந்தார். இராணுவச் சட்டம் வாபஸ். தலைவர்கள் விடுதலை. அமிர்தசரசில் 34-வது காங்கிரஸ், மோதிலால்நேரு தலைமை வகித்தார்.

மகாத்மா காந்தி 1920 ஆகஸ்ட் மாதத்தில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். கல்கத்தாவில் லாலா லஜபதிராய் தலைமையில் நடந்த சிறப்பு மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவு. 36-வது காங்கிரஸ் மாநாடு அகமதாபாத்தில் நடந்தது. சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமை ஏற்றார்.

**பூரண சுதந்திரக் குரல்**

இங்குதான் பூரண சுதந்திரக் குரல் எழுந்தது. ஒத்துழையாமை இயக்கத்தோடு அந்நியப் பொருள்களைப் புறக்கணிக்கும் இயக்கமும் சேர்ந்து நடந்தது. நாடு முழுவதும் லட்சக் கணக்கானவர் கைது. அன்னியத்துணி மற்றும்பொருள்கள் எரிக்கப்பட்டன. 1921 நவம்பரில் வேல்ஸ் இளவரசர் வருகைக்குக் கடும் எதிர்ப்பு; கலவரங்கள்; மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ், ஜவகர்லால் நேரு போன்ற தலைவர்கள் கைது. இந்த ஆண்டு நடந்த காங்கிரஸ் மகாசபையில் தேசிய இயக்கம் அனைத்துக்கும் மகாத்மா காந்தியே தலைவர்என்று காங்கிரஸ் தீர்மானித்தது.

அடுத்த 1922-ல் ஒத்துழையாமை இயக்கத்தில் வன்முறை தலைதூக்கியதால் காந்தியடிகள்போராட்டத்தை நிறுத்தினார். அகமதாபாத்தில் காந்தியடிகள் கைது. கயா நகரில் 37-வது காங்கிரஸ் மாநாடு. சி. ஆர். தாஸ் தலைமை.

மோதிலால் நேருவும், சி. ஆர். தாசும் 1923-ல் காங்கிரசைவிட்டுத்

தனியாக சுயராஜ்யக் கட்சியை ஆரம்பித்தனர். காகிநாடாவில் 38-வது காங்கிரஸ் மாநாடு முகமது அலி தலைமையில் நடந்தது. 1924-இல் காங்கிரஸ் லீக் பிளவு உச்சக் கட்டத்தை அடைந்தது. 1924-ல் பெல்காம் நகரில் காந்தியடிகள் காங்கிரசின் தலைவர் பொறுப் பேற்று 39-வது மாநாட்டை நடத்தினார். 1925-ல் மத்திய சட்ட சபைக்கு மோதிலால் நேரு தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். கான்பூரில் நடந்த 40-வது காங்கிரஸ் மாநாட்டுக்குக் கவிக்குயில் சரோஜினி நாயுடு தலைமை வகித்தார்.

நாடெங்கும் வகுப்புக் கலவரங்கள் நடந்த ஆண்டு என்று 1926 ஆம் ஆண்டை வர்ணிக்கலாம். கவுகாத்தியில் 41-வது காங்கிரஸ் மாநாட்டுக்கு எஸ். சீனிவாச அய்யங்கார் தலைமை வகித்து 'தீவிரவாத வழியில் நாடு விடுதலை அடைய வேண்டும்' என்று முழங்கினார். அடுத்து வந்த 1927-இல் வட்ட மேஜை மாநாடுகள் நடந்தன. சுதந்திர இந்தியாவுக்கான அரசியல் அமைப்பு நகலை சேலம் விஜயராகவாச்சாரியார் காங்கிரஸ் முன் சமர்ப்பித்தார். சென்னையில் 42-வது காங்கிரஸ் மாநாடு எம். ஏ. அன்சாரி தலைமையில் நடந்தது.

**சைமன் கமிஷன்**

சைமன் என்பவர் தலைமையில் பிரிட்டிஷ் அரசு ஒரு கமிஷன் நியமித்தது. அக் கமிஷன் 1928 ஜனவரி 3-இல் பம்பாய் வந்தது.

நாடெங்கும் எதிர்ப்பு. பல இடங்களில் அடக்கு முறை. குஜராத்தில் பர்தோலி விவசாயிகளுக்காக மகாத்மா அறப்போர். பஞ்சாபில் சைமன் கமிஷனை எதிர்த்து ஊர்வலம் நடத்திய லாலா லஜபதிராய், தடியடியில் காயமுற்று மரணம். கொந்தளிப்பு. அவரை அடித்த சாண்டர்ஸ் எனும் வெள்ளை போலீஸ் அதிகாரி கொலை. கல்கத்தாவில் உணர்ச்சிமிகு சூழ்நிலையில் 43-வது காங்கிரஸ் மாநாடு. மோதிலால் நேரு தலைமை. நாடெங்கும் அந்நியத்துணி புறக்கணிப்பு; அடக்குமுறை நீடிப்பு. பார்லிமெண்ட் கட்டிடத்தின் மீதும், வைஸ்ராய் சென்ற ரயில் மீதும் குண்டுவீச்சு. பகத் சிங் உட்பட வீரர்கள் கைது. 1929-இல் லாகூரில் பண்டித நேரு தலைமையில் காங்கிரஸ் மாநாடு.

'காங்கிரசின் குறிக்கோள் முழுச் சுதந்திரம்' என்று 1930 ஜனவரியில் பண்டித நேரு முழங்கினார். நாடெங்கும் சுதந்திர பிரதிக்ஞை மேற்கொள்ளப்பட்டது.

**உப்பு சத்தியாக்கிரகம்**

காந்தியடிகள் 1930 மார்ச்மாதம் உப்பு சத்தியாக் கிரகத்தையொட்டி



**ராஜாஜி**

தண்டி எனும் குஜராத் கடற்கரைப் பகுதிக்குப் புறப்பட்டார். மே 4-ஆம் தேதி காந்தியடிகள் கைது. தமிழநாட்டில் வேதாரண்யத்தில் ராஜாஜி, உப்பு சத்தியாக்கிரகத்தையொட்டிக் கைது. தேசத் தலைவர்கள் அனைவரும் சிறையில், 1930 அக்டோபர் 7-ஆம் தேதி பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு 1931-இல் எல்லாத் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். மகாத்மாவுடன் வைசிராய் இர்வின் சந்திப்பு. மார்ச் 23-இல் பகதசிங், ராஜகுரு, சுகதேவ் தூக்கில் இடப்பட்டனர். இந்த ஆண்டில்தான் மூவண்ணக் கொடி காங்கிரசின் கொடியாக அங்கீகரிக்கப்பட்டது. வட்டமேஜை மாநாட்டில்கலந்து கொள்ள காந்தியடிகள் இலண்டன் சென்றார்.

ஆனால் பேச்சு வார்த்தை முறிந்தது. 1932-இல் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. மகாத்மா உட்பட அனைத்துத் தலைவர்களும் கைது. தாழத்தப்பட்டோர் பிரச்னையில் மகாத்மா காந்தி உண்ணாவிரதம். அம்பேத்காருடன் உடன்பாடு. உண்ணா நோன்பு நிறுத்தம். ஆனால் 1933 மே 8-இல் மீண்டும் காந்தியடிகள் சிறையில் உண்ணாவிரதம்.

சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது. காந்தியடிகள் விடுதலை; மீண்டும் கைது. காங்கிரசிற்குள் பல கருத்து மாறுபாடுகள் தோன்றின. பிரிட்டிஷ் ஆட்சி, புதிய சமரச யோசனைகளைப் பரிசீலனை செய்து வந்தது. தேர்தல் மூலம் மத்திய சட்டசபைக்கும் மாநிலங்களின் சட்டசபைகளுக்கும் பிரதிநிதிகளை அனுப்ப வகை செய்யும் சீர்திருத்தங்களைப் பிரிட்டிஷ் அரசு வெளியிட்டது.

அதன்படி 1935-இல் மத்திய சட்டசபைக்கு வெற்றி பெற்று காங்கிரஸ்காரர்கள் சென்றனர். 1935-இல் காங்கிரஸ் கட்சியின் பொன்விழா கொண்டாடப்பட்டது.

லக்னோ நகரில் 1936-இல் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ஜவகர்லால் நேரு தலைமை தாங்கி ஏகாதிபத்திய எதிர்ப்பு - பாசிச எதிர்ப்பு- சோஷலிசம போன்ற குறிக்கோள்களை எடுத்துரைத்தார். சோஷலிசவாதிகள் வெளிப்படையாக இங்கு தென்பட்டனர்.

1937-ஆம் ஆண்டு பல மாநிலங்களில் காங்கிரஸ்ஆட்சி ஏற்பட்டது. சென்னையில் பிரதமராக ராஜாஜி பதவி ஏற்றார். மதுவிலக்கைக் கொண்டு வந்தார்.

ஆனால் ஜெயப் பிரகாசர், நேதாஜி போன்றவர்கள், காங்கிரசின் சட்டசபை நுழைவை எதிர்த்தனர். 1938-ஆம் ஆண்டு காங்கிரசுக்குத் தலைமை வகித்த சுபாஷ் சந்திரபோஸ், காங்கிரஸ் கட்சியின் சமரசப் போக்கை எதிர்த்துப் பதவி விலகத் தயார் என்று கூறினார்.

அடுத்த 1939-ஆம் ஆண்டுக்கும் காங்கிரஸ் தலைவராக நேதாஜி தேர்ந்து எடுக்கப்பட்டார். இது பெரிய பிளவை ஏற்படுத்தியது.

நேதாஜி காங்கிரசிலிருந்து விலகி பார்வர்ட் பிளாக் கட்சியைத் தொடங்கினார். கவர்னர்களுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக உ.பி., பீகார், சென்னை போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்தன.

உலக யுத்தம் தீவிரமடைந்தது. எங்கும் பஞ்சம். பிரிட்டிஷ் ஆட்சி திணறியது.

காந்தியடிகள் 1940-ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தை அறிவித்தார். இநதிய மக்களைக் கேட்காமல் இநதியாவை யுத்தத்தில் ஈடுபடுத்தியதைக் கண்டித்து இந்த அறப்போர் நடைபெற்றது. பல்லாயிரவர் கைது செய்யப்பட்டனர். 1941-இல் பல தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இறுதிப் போராட்டமாக 1942 ஆகஸ்ட் 9-இல் **'வெள்ளையனே வெளியேறு'** இயக்கத்தைக்காங்கிரஸ் அறிவித்தது. 'செய் அல்லது செத்துமடி' என்று மகாத்மா அறைகூவல் விடுத்தார். நாடே கிளர்ந்து எழுந்தது. லட்சக் கணக்கானவர்கள் கைது.

மகாத்மா, நேரு, ஆசாத் உட்பட எல்லாத் தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். தீவிரவாதிகள் தலைமறைவாகி, பெரும் புரட்சி செய்தனர். பல பகுதிகளில் வரி கொடா இயக்கம் நடந்தது. முஸ்லீம் லீக் கட்சி நாட்டைத் துண்டாட வேண்டும் என்று வலியுறுத்தியது.

நாட்டுக்கு வெளியே சிங்கப்பூரில் நேதாஜி இந்திய தேசிய இராணுவத்தை 1943 ஜூலையில் அமைத்தார். அந்த இராணுவம் பர்மா வழியாக இந்தியாவை நோக்கி முன்னேறியது.



ஜவஹர்லால் நேரு

சிறையில் இருந்த காந்தியடிகள் 1944 மே மாதம் விடுதலை செய்யப்பட்டார். இந்தச் சிறைவாசத்தின்போது சிறையிலேயே அன்னை கஸ்தூரிபாயும் மகாத்மாவின் அன்புச் செயலாளர் மகாதேவ தேசாயும் உயிரிழந்தனர். வெளியே வந்த காந்தியடிகள் பிரிட்டிஷ் அரசுடன் பேச்சு நடத்த முயன்றார்.

## மறைமுகத் தூண்டுதல்

மறுபுறம் முஸ்லீம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னாவுடன் சமரசப் பேச்சில் ஈடுபட்டார். ஜின்னா தமது பாகிஸ்தான் கோரிக்கையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

பிரிட்டிஷ் ஆட்சியினர் மறைமுகமாக ஜின்னாவைத் தூண்டி வந்தனர்.

இந்நிலையில் உலகயுத்தம் முடிந்தது. 1945 மே மாதம் ஜெர்மனியும் ஆகஸ்ட் மாதம் ஜப்பானும் சரணடைந்தன. பிரிட்டிஷ் ஆட்சி வெற்றி மமதையில் இருந்தது.

ஆனால் இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோற்று, தொழிற்கட்சி வெற்றி பெற்று, கிளமன்ட் ஆட்லி பிரதமரானார். இந்திய விடுதலையை அனுதாபத்துடன் கவனிக்கத் தொழிற்கட்சி முன்வந்தது. ஆனாலும் நாட்டைப் பிளவுபடுத்தும் சூழ்ச்சியும் தொடர்ந்தது.

இந்தியாவின் பல மாநிலங்களில் சட்டசபைக்கு 1946 மார்ச் மாதம் தேர்தல்கள் நடைபெற்றன. பெருவாரியான மாநிலங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

இதற்கிடையில் பாகிஸ்தானை அடைவதற்கு இறுதிப்போர் என்ற பெயரில் ஜனாப் ஜின்னா நாடெங்கும் கலவரங்களைத் தூண்டிவிட்டார்.

இலட்சக்கணக்கான மக்கள் உயிரையும் உடமைகளையும் இழந்தனர். பிரிட்டனிலிருந்து அந்நாட்டு அமைச்சர் பெதிக் லாரன்ஸ் தலைமையில் தூதுக்குழு வந்தது. நாட்டைத் துண்டாட வேண்டும் என்பதில் ஜின்னா பிடிவாதமாக இருந்தார். இந்தக் கால கட்டத்தில் லார்டு மவுண்ட் பேட்டன் புதிய வைசிராயாக நியமிக்கப்பட்டார்.

காங்கிரசுடன் சமரசப் பேச்சு நடந்தது. வகுப்புக் கலவரங்களை நிறுத்துவதற்கான இடைக்கால அரசு அமைக்க காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ஆம் தேதி ஜவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. இதில் முதலில் முஸ்லீம் லீக் பங்கு கொண்டது. பின்னர் விலகியது. பஞ்சாப், டில்லி, வங்காளத்தில் வகுப்புக் கலவரம் பயங்கர வடிவெடுத்தது.



பகவத்சிங்

1946 நவம்பரில் காந்தியடிகள் அமைதி ஏற்படுத்த வங்காளம் சென்றார். ஆனால் மற்ற இடங்களிலும் டில்லியிலும் நடந்த கலவரங்களையும் உயிர்ச் சேதங்களையும் தடுக்க இயலவில்லை.

இறுதியாக நாட்டுப் பிரிவினைக்குக் காங்கிரஸ் தலைவர்கள் உடன் பட்டனர்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் 1947 ஜூலை 18-ஆம் தேதி இந்தியா, பாகிஸ்தான் என்கிற இரு நாடுகள் அமைக்கும் சட்டம் நிறைவேறியது. நாட்டுப் பிரிவினைக்கான ஏற்



ஜெயபிரகாஷ் நாராயணன்

பாடுகள் நடந்தன. எல்லைகள், சொத்துக்கள் பிரிக்கப்பட்டன. கோடிக்கணக்கான மக்கள் இந்திய-பாகிஸ்தான் பிரிவினையையொட்டி இடம் பெயர்ந்தனர். வழியெல்லாம் கலவரம், கொலை, கொள்ளை தீவைப்பு; என்றாலும் அந்நிய ஆதிக்கம் அகன்றது என்ற மகிழ்ச்சி எங்கும் நிலவியது.

இருநூறு ஆண்டுகளுக்கு மேலே இத்துணைக்கண்டத்தை ஆட்சி செய்த பிரிட்டிஷ் ஆதிக்கம் அகன்றது.

1947 ஆகஸ்ட் 14-ஆம் தேதி நள்ளிரவில் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களிடையே 'இந்தியா விடுதலை பெற்றது' என்பதை அப்போதைய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அறிவித்தார்.

மறுநாள் ஆகஸ்ட் 15 காலை டில்லி செங்கோட்டையில் மூவண்ணக் கொடியை ஏற்றிச் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக நேரு உரையாற்றினார்.

வீர விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது. இந்தியா ஒரு சுதந்திர தேசமாக ஆகியது.

உலகத்து சுதந்திர நாடுகள் வரிசையில் இடம் பெற்றது.

இந்தியன் தலைநிமிர்ந்து சுதந்திர மனிதனாக நடக்க முடிந்தது.

இந்த உரிமை வாழ்வுக்குத் தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த தியாகிகளுக்கு இந்த 40-வது சுதந்திர தின ஆண்டு விழா நாளில் வீர வணக்கம் செலுத்துவோம். ●

## “நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!”



கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!

தன்னிகரற்ற

# பன்மின்த்*

(மொரண்ட்டெல் ஸிட்ரேட்)

## நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

‘‘பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!’’

**பால் இழப்பே இல்லை.**

‘‘அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.’’

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

‘‘என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!’’

**வசதி மிக்கதும் கூட.**

‘‘சாப்பிட வெகு இலகு பன்மின்த். சுண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!’’

பால் இழப்பே இராது
பன்மின்த்*
விலையை ஈடு செய்வது

LINTAS BMT 2 2217 TM

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.**

# பன்மின்த்*

புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

*யூ.எஸ்.ஏ. ஃபைஸர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு:
ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400021.

# தியாக வேள்வி வளர்த்த திலகர் கட்டம்

வங்கக் கடலோரம் அமைந்துள்ள சென்னைப் பெருநகரின் மெரினாக் கடற்கரை தேசியப் பெருந்தலைவர்கள் நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டி வளர்த்த இடமாகும்.

அந்த வெண்மணற் பரப்பில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆற்றிய வீர உரைகள் சுதந்திரச் சுடரொளியை எங்கும் பரப்பின. அந்நியரின் ஆதிக்கத்தில் அடிமைப் பட்டுக்கிடந்தஇந்தியத்திருநாட்டை விடுவிக்க வேண்டும் என்ற உணர்வு மக்களிடையே காட்டுத்தீ போலப் பரவுவதற்கு அந்தக் கடற்கரை மணல்வெளி நிலைக்களமாகத் திகழ்ந்தது.

*1905*-இல் வங்க மாநிலத்தைத் துண்டாட ஆங்கிலேய வைசிராய் கர்சன் பிரபு முடிவு செய்தபோது, வங்கம் மட்டுமல்லாமல், நாடே கொதித்தெழுந்த நாளில், விடுதலைக் கவிஞர் பாரதியார் வங்கக் கிளர்ச்சியை ஆதரித்து மாணவர் கூட்டத்தில் 'வங்கமே நீ வாழிய' என்ற பாடலைப்பாடி, எழுச்சி முரசு கொட்டியதும் இதே கடற்கரையில்தான்.

*1907*-இல் சூரத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபைக்குச் சென்ற விடுதலைக் கவிஞர் பாரதியார், வ.உ. சிதம்பரனார், மண்டையம் சீனிவ வாசாச்சாரியார் போன்றோர் சென்னை திரும்பியதும், மராட்டிய மாவீரர் லோகமான்ய திலகரின் தீவிரவாதக் கொள்கையை ஆதரித்துத் தீவிரப் பிரச்சாரம் செய்ததும் இதே கடற்கரையில்தான்.

*1908*-இல் இங்கு நடைபெற்ற சூரத் காங்கிரஸ் மாநாட்டு நிகழ்ச்சிகளின் விளக்கக் கூட்டத்தில் தியாகசீலர் சுப்பிரமணிய சிவா கலந்து கொண்டு, வீர முழக்கம் செய்ததோடு,கூட்டம் நடந்த சென்னைக் கடற்கரைத் திடலுக்குத் 'திலகர் கட்டம்' என்ற பெயரையும் சூட்டினார்.

*1907*-இல் வங்காளப் புரட்சி வீரர் விபின் சந்திரபால் சிறையிலிருந்து விடுதலையாகி வந்ததும், பாரதியார், ஜி.சுப்பிரமணிய ஐயர், டாக்டர் நாயர்போன்றோர் முயற்சியால் சென்னை வந்து, இதே இடத்தில் அவர் ஆற்றிய வீரமிகு சொற்பொழிவு, சுதந்திரப் போர் வீரர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தது. அக்காலத்தில் ஒலிபெருக்கி இல்லை. எனினும் நீர் வீழ்ச்சி போல்,வீரனின் வில்லிலிருந்து அம்பு மாரி பொழிவதுபோல், விபின் சந்திரபாலர் சொல் மாரி பொழிந்தார்.



*1919*-இல் அடக்குமுறை கட்டவிழ்த்து விட வழிவகுத்த ரௌலட் சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சி நடத்தத் திட்டமிட்ட போது, அண்ணல் காந்தியடிகள் *1919*-மார்ச் மாதம் சென்னை வந்து இதே கடற்கரையில் சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை விடுதலை வீரர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டிய வீர உரையாக அமைந்தது. அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி ரௌலட் சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் அணிவகுத்து வந்து, இதே கடற்கரையை அடைந்த போது, சிதம்பரனார், தண்டபாணி பிள்ளை, திரு.வி.க. போன்றோர் ஆற்றிய சொற்பொழிவுகள் வரலாற்றுச் சிறப்புடையவை,

டிசம்பர் மாதம் 17-ஆம் தேதி சென்னை வந்த லோகமான்ய பால கங்காதர திலகர் இதே கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் உணர்ச்சிமிகு சொற்பொழிவை ஆற்றினார். அக்கால அரசியல் உலகமே அக்கூட்டத்தில் திரண்டு நின்று, திலகர் சொல்மாரியில் மூழ்கியது. இளைஞர் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருந்த திலகர், 'சுயராஜ்யமே எமது பிறப்புரிமை' என்று அன்று திலகர் கட்டத்தில் வீர முழக்கம் செய்தார்.

*1921*-இல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருகை தந்ததை எதிர்த்துக் கிளர்ச்சி நடந்தபோது, சென்னையில் ஊர்வலமும், திலகர் கட்டத்தில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடந்தன. திரு.வி.க., வ.வே.சு. ஐயர், டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆகியோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு இதே கடற்கரைப் பொதுக் கூட்டத்திலும் பேசினர்.

*1927*-இல் நீல் சிலையை அகற்றச் சத்தியாக்கிரகப்போர் நடந்தபோதும், 1928-இல் சைமன் கமிஷனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடந்தபோதும், சென்னை திலகர் கட்டத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்கள் குறிப்பிடத் தக்கவை.

*1924*- மே 4-ஆம் தேதியும், மே 11-ஆம் தேதியும் திலகர் கட்டத்தில் தியாகசீலர் சுப்பிரமணிய சிவா ஆற்றிய தீரமிகு உரைகளைக் கேட்ட ஆங்கிலேய அரசாங்கம், சிவா மீது அரச நிந்தனை வழக்கைத் தொடர்ந்தது என்பதை நினைக்கும்போது, திலகர் கட்டத்தில் பாய்ச்சப்பட்ட உணர்ச்சி வெள்ளம் எத்தனை வேகம் வாய்ந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

*1930*-ஆம் ஆண்டு சென்னை நகரில் உப்புச் சத்தியாக்கிரக யாத்திரை முடிவுற்றதும் திலகர் கட்டத்தில்தான். அங்குதான் உப்பு காய்ச்சப்பட்டது.


எத்தனை எத்தனையோ தியாகச் செம்மல்கள் திலகர் கட்டத்திடலில் வீர உரை ஆற்றி இருக்கிறார்கள்.

எத்தனையோ சத்தியாக்கிரகக் கிளர்ச்சிகளுக்கு இங்குதான் வித்திடப்பட்டது. திலகர், விபின் சந்திரபால், லாலா லஜபதிராய், அண்ணல் காந்தியடிகள், பண்டிட் ஜவகர்லால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், சி.ஆர். தாஸ், சிதம்பரனார், சிவா, பாரதியார், வ.வே.சு. ஐயர், திரு. வி. க., நாவலர் சோமசுந்தர பாரதி, டாக்டர் வரதராஜுலு நாயுடு. சத்திய மூர்த்தி, ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜ், பெரியார் ஈ.வெ.ரா., பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் இப்படி எண்ணற்ற அரசியல் மேதைகள் இத்திடலில் முழங்கிய வீர முழக்கங்கள், ஊட்டி வளர்த்த சுதந்திர வேட்கை, இத்திடலுக்குத் தனிப்பெருமை தேடித்தந்துள்ளன.

**வ. இராசமனோகரன்**



**வீர மிக்க மராட்டியர் ஆதர**
**மேவிப் பாரத தேவி திருநுதல்**
**ஆர வைத்த திலக மெனத்திகழ்**
**ஐயன் நல்லிசைப் பாலகங்காதரன்.**









# சுதந்திரப் பெருமை

## மகாகவி பாரதியார்



வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ?

புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பாரோ?


பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
பெற்றியை அறிந்தாரேல்—மானம்
துறந்தறம் மறந்தும்பின் உயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?

மானுட ஜென்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ?

விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?

'வந்தே மாதரம்' என்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ?



# சுதந்திரத்தின் சுகம்

## கவியரசு கண்ணதாசன்






கல்லக் குடிஎனும் களத்திடைப் பிடித்து
சிலமா தங்கள் சிறைவைத் தாரெனை.
பட்டினிப் போரும் பாசப் பெருக்கும்
உறவின ரில்லா உலகுமாய் வாழ்ந்தேன்!
நான்கு சுவர்களின் நடுவே இருப்பதை
எண்ணி எண்ணிநான் ஏக்கம் பெருக்கினேன்!
விரைந்தவர் ஒருநாள் 'விடுதலை' என்றார்
பறந்தேன் பிறந்த பட்டியை நோக்கி!
விடுதலையின் சுகம் விளக்கவும் ஒண்ணுமோ
பார்வை புதிது; பசியும் புதிது;
ஊருணி புதிது, உறவினர் புதியவர்;
கண்மாய்க் காற்றின் கனிவே கனிவு!
அன்னை தன் கையால் அமுதம் படைக்க
அள்ளி அள்ளி அருந்திய சுகங்கள்
சூழும் மனைவி, சுற்றம் மக்கள்
வல்லவன் கோவில் வாசக சாலை
நடந்து நடந்து நடையும் பழகினேன்!
சிறகு விரித்த சிட்டுக் குருவிபோல்
வானில் பறந்தே வண்ணம் பாடினேன்!
பத்து நாட்களுக்குள் பட்டினம் வந்தேன்
மனையொன்று தேடி வாழ்வைத் தொடங்கினேன்
எண்ணம் புதிதாய் எழுத்தும் புதிதாய்
வண்ணம் பலப்பல வடித்துச் சிறந்தேன்!
ஒருதரம் சிறையின் உள்ளே சென்று
திரும்பி வந்தால்தான் தெரியும் உலகம்
'நிழலின் அருமை வெயிலில்' என்று
நிகழ்த்திய மூதோன் மொழிபொய் யன்று!
அடிமை வாழ்வதனையும் அளந்து பார்க்கிறேன்
விடுதலை நாளையும் வியந்து காண்கிறேன்
இரண்டின் நடுவே உள்ளதோர் இடைவெளி
இமயம் குமரி இடைவெளி யலவோ!
சுதந்திரம் முழுவதும் சுகந்தர வேண்டுமேல்
நல்லவர் தமையே நாட்டினர் போற்றி
அல்லா தவரை அகற்றிட வேண்டும்!
பாரத நாடும் பழந்தமிழ் நாடும்
வாழிய வாழிய வாழிய நீடு!









# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# எனது
# முதல் சிறைவாசம்

— ஓ. வி. அளகேசன் —



**தா**ய்ப்பசுவின் குரல்கேட்டுத் தாவி ஓடும் கன்று போல, காந்தியடிகளின் குரல் கேட்டு இளைஞர்கள் கல்லூரிகளையும், பள்ளிகளையும் விட்டு வெளியேறி நாட்டின் விடுதலைக்காகத் தியாக வேள்வியில் குதித்த நேரம். 1930-ஆம் ஆண்டில் காந்தியடிகள் தண்டி உப்பு சத்தியாகிரக யாத்திரையைத் தொடங்கியதையொட்டி, தமிழகத்தில் வேதாரணியத்தை நோக்கி உப்பு சத்தியாகிரக யாத்திரை ராஜாஜியின் தலைமையில் நடை பெற்றது.

வேதாரணியம் உப்பு சத்தியாகிரக யாத்திரையில் கலந்துகொண்ட நான், யாத்திரையின்போதே சிரங்கு வந்து அவதிப்பட்டேன். அதனால் கும்பகோணம் சென்ற பிறகு சிரங்கு குணமாகும் என்று கருதி தியாகச் செம்மல் பந்துலு ஐயர் அவர்கள் வீட்டில் சிலநாள் தங்கினேன். அது குணமாவதாகக் காணோம். எனக்கும் கும்பகோணத்தில் இருப்புக் கொள்ளவில்லை. ஆகவே, மன்னார்குடி சென்று அங்கிருந்து மீண்டும் தொண்டர்களுடன் வழி நடந்து சென்றேன். எல்லோரும் வேதாரணியத்தை அடைந்தோம்.

சர்தார் வேதரத்தினம்பிள்ளை அவர்கள் வெகு கவனத்தோடு அமைத்திருந்த தென்னங்கீற்றுக் கொட்டகை முகாமில் தங்கினோம். பிறகு, ராஜாஜியும் அவருடன் சில தொண்டர்களும் உப்பு அள்ளியதற்காக முதல்நாள் கைது செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொருநாளும் கும்பல் கும்பலாகத் தொண்டர்கள் உப்பு அள்ளச் செல்வார்கள். அவர்களைப் போலீசார் கைது செய்தது மட்டுமின்றி, அடிக்கவும் அடித்தார்கள். பிறகு, திரு. கே. சந்தானம் கைது ஆனார். அதற்குப் பிறகு திரு ஜி. ராமச்சந்திரன் தலைமைப் பொறுப்பு ஏற்றார். அவர் என்னைப் பார்த்து, 'உனக்குச் சிரங்குத் தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. நீ இந்த நிலையில் ஜெயிலுக்குப் போக வேண்டாம். வீட்டிற்குச் சென்று குணமான பிறகு வா' என்று சொல்லி என்னைஅனுப்பிவைத்தார்.

**"ஆறுமாதம் திருச்சி சிறையில் இருந்து பிறகு சிறையிலிருந்து விடுதலை கிடைத்தது. ஆனால், திருச்சி சிறை சின்ன சிறை பாரத நாடு பெரிய சிறை என்றஉணர்வுடன் வெளியே வற்தேன்"**

நான் செங்கல்பட்டை அடுத்த ஒழலூரில் என்னுடைய வீட்டுக்குத் திரும்பினேன். சுதந்திரப் போரில் ஜெயிலுக்குப் போக முடியவில்லையே என்ற **துக்கம்** எனக்கு. இம்மட்டோடு பையன் வீட்டுக்குத் திரும்பி வந்தானே என்ற **சந்தோஷம்** என் பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும். கொண்ட லட்சியம் நிறைவேறவில்லையே என்ற **ஏமாற்றம்** எனக்கு; பையன் வீட்டில் இருக்கிறானே என்ற **திருப்தி** அவர்களுக்கு.

இதற்குள் வேதாரணியத்தில் போர் ஓய்ந்துவிட்டது. நான் கோயமுத்தூர் சென்றேன். அங்கு என்னைக் காங்கிரஸ் ஆபீசில் வரவேற்றவர்கள், காலஞ் சென்ற தேசபக்தர் சி.பி.சுப்பையா முதலியார், இப்போதும் நம்மிடையே உள்ள முதுபெருந் தலைவர்களான திரு. அவினாசிலிங்கம் செட்டியார், கே. சுப்ரி ஆகியோர்.

அப்போது கோயமுத்தூரில் கள்ளுக்கடை மறியலும், அந்நியத் துணிக்கடை மறியலும் நடந்து கொண்டிருந்தன. ஆயினும், போராட்டம் முடியும் தறுவாயில் இருந்தது. (கோயமுத்தூரில் ஒருநாள் மாலை பொதுக் கூட்டத்தில் நான் பேசியதாக ஞாபகம்). ஆகவே, அவர்கள் என்னைத் திருச்சி சென்று போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கூறினார்கள். அவ்வாறே, நான் திருச்சி சென்றேன். என்னுடன் பிரசிடென்சி காலேஜில் படித்த முத்தாயிபாளையம் (ஈரோட்டுக்கு அருகில் உள்ளது) ஆயணனும், கொடுமுடியைச் சார்ந்த மகுடபதியும் சேர்ந்து கொண்டார்கள். இவர்களும் என்னைப் போல் காந்திஜி மாணவர்களுக்கு விடுத்த அழைப்புக்கிணங்க, கல்லூரிப்பட்டப் படிப்பை விட்டொழித்தவர்கள்.

திருச்சியில் எங்கள் மூவருடன் மேலும் ஐந்து தொண்டர்கள் சேர்ந்து கொண்டார்கள். நாங்கள் எட்டுப் பேரும் ஒருநாள் காலை ஒரு அரசமரத்தடி மேடையின் கீழ்144-ஆவது பிரிவு தடைஉத்தரவை மீறிக் கூட்டம் நடத்தினோம். ஜனங்கள் சேர்ந்தார்கள். முதலில் நான் பேச ஆரம்பித்தேன், சில நிமிஷங்களே பேசியிருப்பேன். உடனே, போலீசார் பெருங்கூட்டமாக வந்து எங்களை வளைத்துக் கொண்டார்கள். எங்களைத் தடிகொண்டு மிரட்டினார்கள். ஆனால், அடிக்கவில்லை. எங்களுடைய பெயர்களைக் கேட்டார்கள். ஒவ்வொருவராகச் சொன்னோம்.

ஒருவர் மட்டும் தமது பெயர் 'வந்தே மாதரம்' என்றார். போலீஸ் இன்ஸ்பெக்டருக்குக் கோபம்

வந்துவிட்டது. அவரை மிரட்டினார். அவர் மீண்டும் மீண்டும் தமது பெயர் 'வந்தே மாதரம்' என்றார். அக்கூட்டத்துக்கு நான் தான் தலைவன் என்று கருதிய இன்ஸ்பெக்டர், அவருடைய உண்மையான பெயரைச் சொல்லும்படி என்னை அதட்டினார். அவர் கூறுகிற பெயரையே எழுதிக்கொள்ளும்படி சொன்னேன்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் மூர்க்கத்தனமாக என்னுடைய மோவாய்க்கட்டையில் ஓங்கி ஒரு குத்துவிட கையைக் கிட்டே கொண்டுவந்தார். நான் அசையாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தேன். ஆனால், குத்து விழவில்லை. அந்தக் குத்து விழுந்திருந்தால் என்னுடைய பல் ஒன்றுகூட இருந்திருக்காது, மோவாய் எலும்பும் முறிந்து போயிருக்கும்.



பிறகு, எங்களைப் போலீஸ் வண்டியில் ஏற்றினார்கள். நாங்கள் உள்ளிருந்தே 'வந்தே மாதரம்' என்று வீதியெல்லாம் முழங்கிக்கொண்டு சென்றோம். சுதந்தரப் போர் முழக்கங்கள் இரண்டு; ஒன்று, 'வந்தே மாதரம்', இரண்டு, 'மகாத்மா காந்திக்கு ஜே'. இவையே இந்தியாவுக்கு, பாரத தேசத்துக்குச் சுதந்திரம் பலிக்கச் செய்த தாரக மந்திரங்கள்.

எங்களை ரிமாண்டில் வைத்தார்கள். அன்று மாலை திருச்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு எங்களைக் கைவிலங்குடன் அழைத்துச் சென்றார்கள். விசாரணை ஒரு நொடியில் முடிந்து விட்டது. மாஜிஸ்ட்ரேட் குற்றப் பத்திரிகையை வாசித்ததுதான் தாமதம், நாங்கள் அனைவரும் உடனே குற்றவாளிகள் என்று ஒப்புக் கொண்டோம். அதுவே, காந்திஜியின் கட்டளை. எங்களுக்குக் குற்றச்சட்டத்தின் பிரிவுகளோ, குற்ற விவரமோ ஒன்றும் தெரியாது.

மாஜிஸ்ட்ரேட் எங்களுக்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை என்று அறிவித்தார். முன்னிரவில் எங்களை அழைத்துச் சென்று திருச்சி சென்ட்ரல் ஜெயிலில் அடைத்தார்கள். உண்மையைச் சொல்லுகிறேன். அன்று, அந்த நேரம் நான் அடைந்த ஆனந்தத்துக்கு ஈடான மகிழ்ச்சியை அதற்குப் பிறகு நான் என் வாழ்நாளில் அனுபவித்ததே இல்லை. அந்தக் கால கட்டத்தில் பிரிட்டிஷ் சிறைகளுக்கு வெளியே இருப்பதுதான் சிறைவாசம். அவற்றுக்கு உள்ளே இருப்பதுதான் உண்மையான சுதந்தர வாழ்வு என்று நாங்கள் கருதினோம்! அன்று 1930ஆம் ஆண்டு, ஜூலை மாதம், இரண்டாம் தேதி; எனக்கு வயது பதினெட்டு.



முதல் நாள் இரவு நாங்கள் ஒரு பெரிய ஹாலில் பல பேருடன் விடப்பட்டோம். நல்ல நிலவு. சிறைக் கம்பிகளுக்கு உள்ளே இருந்த நாங்கள்-முப்பது நாற்பது பேர் இருப்போம். நெடுநாள் பழகிய நண்பர்களைப் போலவும், சகோதரர்கள்போலவும் அளவளாவினோம்.

மறுநாள் பொழுது விடிந்தது. எனக்குச் சிறையில் விடிந்த முதல் காலைப்பொழுது. பறவைகள் உதயத்தில் பாட்டு ஒலிக்குமல்லவா, அதைப்போல் என் உள்ளமும் பாட்டிசைத்தது. பாரத மாதாவின் விலங்குகள் அப்போதே உடைக்கப்பட்டது போன்ற ஒரு குதூகலம்.

. கோபாலன் (பிறகு அவர் திருநீர்மலையில் தேவஸ்தான நிர்வாகியாகப் பணிபுரிந்தார்) என்பவர் கையில் நீளமான ஒரு கரண்டியை உயரத்தூக்கிப் பிடித்துக் கொண்டு 'வாங்கோ, கஞ்சி வந்துவிட்டது' என்று கூவினார். ஒவ்வொருவர் கையிலும் ஒரு அலுமினியத்தட்டும், குவளையும். இரண்டு கரண்டி கஞ்சி வார்த்ததுமே போதும் என்று சொல்லிவிட்டேன்.

இரும்பு அண்டாவில் இருந்த கஞ்சிக்கு இரும்பு வாசனை, உள்ளே புழு நெளிந்து கொண்டிருந்தது. வாயருகில் கொண்டு சென்றதும் குமட்டியது. அதை அப்படியே கொட்டிவிட்டேன். சுதந்நரத்தின் முதல் 'ருசி'. மத்தியானம் ஒரு இரும்புக்கட்டிலில் சோற்றுக் கட்டிகள். இரும்பு அண்டாவில் குழம்பு என்று சொல்லப்பட்ட ஒன்று. தட்டில் சோற்றுக் கட்டியையும், குவளையில் குழம்பையும் வாங்கிக்கொண்டேன். அவற்றை உண்ண மனம் ஒத்துக்கொள்ளவில்லை; ஆனால், வயிறு உண்ணாதிருக்க ஒத்துக்கொள்ளவில்லை. இரண்டுக்குமிடையே நடந்த போராட்டத்தில் வயிறே வெற்றி பெற்றது. காலையில் கஞ்சியிடம் காட்டிய வெறுப்பை இப்போது சோற்றுக்கட்டியிடம் காட்ட முடியவில்லை. வேண்டா வெறுப்பாகச் சிறிது உண்டேன், கற்களுடன் சேர்த்து. மீதியைக் கொட்டிவிட்டேன்! அப்புறம் என்ன என்று கேட்கிறீர்களா? இதுவேதான், அரையும் குறையுமாகச் சாப்பிட்டு வைப்பது. முதலில் சிறை உணவின்மீது காட்டிய வைராக்கியம் நாளடைவில் தேய்ந்துவிட்டது.

நாங்கள் 'சி' வகுப்புக் கைதிகள். ஒருநாள் 'பி' வகுப்பில் இருந்த நாராயணய்யங்கார் என்ற நண்பர் எங்களுக்கு ஒரு குவளை தாளித்த மோர் அனுப்பி வைத்தார். அதை, மகுடபதி, தனக்கும், ஆயணனுக்கும், எனக்குமாக ரொம்ப ரொம்பச் 'சுகிர்' ஆக மூன்று பாகமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். தசரதன் பிள்ளையில்லாதிருந்தபோது தனது தேவிமார் மூவருக்கும் அக்னியில் தோன்றிய தேவபுருஷன் அளித்த அமிர்தத்தைப் பங்கிட்டு அளித்ததுபோல. அதிக நாள்

மோரே அறியாதிருந்த என் 'அப்பாவி' வயிறு, கடுகு தாளித்த மோரை உண்டதும் வலிக்க ஆரம்பித்துவிட்டது! அப்பர் சுவாமிகளுக்கு ஏற்பட்ட வயிற்று வலி மாதிரி.

திருச்சி சிறையில் தண்ணீர்க் கஷ்டம். பாறாங்கற்களைத் தோண்டி எடுத்த ஒரு கிணறு-அதில் சிறிது சிறிதாகத் தான் தண்ணீர் ஊறும். தண்ணீரை இறைத்து, ஒரு நீண்ட சிமெண்டு தொட்டியில் நிரப்புவார்கள். அதன் இருபக்கங்களிலும் நின்றுகொண்டே குளிக்கலாம். தடுப்புச் சுவர்கள் இருக்கும்.

தொட்டியில் நீர் நிறைந்ததும் மணி அடிப்பார்கள். நாங்கள் அனைவரும் 'நீ முந்தி, நான் முந்தி' என்று குவளைகளை எடுத்துக்கொண்டு ஓடுவோம். நாங்கள் எத்தனை பேர் என்கிறீர்கள், எண்ணூறு, ஆயிரம்பேர் இருப்போம். முண்டி அடித்துக்கொண்டு தொட்டிக்கருகில் இடம் பிடித்துக் குவளைகளில் நீரை எடுத்துத் தலையிலும் உடம்பிலும் கொட்டிக் கொள்வோம். நன்றாகத் தேய்த்துக் குளிக்க முடியாது. பாதி பட்டதும் படாததுமாய் இருக்கையிலேயே தொட்டியில் தண்ணீர் தீர்ந்துவிடும். அப்படியே உடம்பில் பட்ட ஈரத்தைத் துவட்டிக் கொண்டு வரவேண்டியதுதான். பிறகு அடுத்தநாள்தான் குளியல்; கிணற்றில் தண்ணீர் ஊற ஒருநாள் ஆகும், மறுபடியும் இதே அரைகுறை ஸ்நானம்!

போன மறுநாளே எங்களுக்குச் சாதாரண கைதிகள் அணியும் சிறை உடுப்பு ஒரு ஜதை கொடுத்தார்கள். கட்டம் போட்ட ஒரு அரை நிஜாரும் ஒரு பனியனும் தான் அந்த உடை. எங்களுடைய துணிமணிகளைச் சிறையில் மூட்டை கட்டிவைத்துக் கொண்டார்கள். எங்கள் சிறை உடையை ஒன்று மாற்றி ஒன்று தோய்த்து உடுத்திக் கொள்ளவேண்டும். குளிக்கவே போதிய தண்ணீர் கிடையாது. அதற்குக் கொஞ்சம், இதற்குக் கொஞ்சம் என்று பங்கிட்டுக் காலம் தள்ளினோம்.

எங்கள் ஒவ்வொருவருக்கும் தனி கொட்டடி. சிங்கிள் செல் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். மாலை ஆறுமணிக்கே ஒவ்வொருவரையும் கொட்டடியில் அடைத்துப் பூட்டிவிடுவார்கள். பிறகு காலையில் தான் திறந்து விடுவார்கள்.

என்னுடன் பல பேர் இருந்தார்கள். ராஜாஜி அதே சிறையில் வேறு இடத்தில் இருந்தார். அவருடைய மகன் நரசிம்மன் எங்களுடன் இருந்தார். மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் இன்னும் பல மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர்கள் பலர் இருந்தார்கள். அவர்களில் பலர் இப்போது இல்லை. அவர்களுடைய தியாகமே நமது நாட்டின் விடுதலையின் அடிப்படை.



சிறைவாசம் எனக்கு வேறு வகைகளிலும் பயனுள்ளதாயிற்று. வ.வே.சு. அய்யர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். அது ஒரு சிறந்த மொழிபெயர்ப்பு. அந்த மொழிபெயர்ப்பைப் படித்த பிறகே திருக்குறளின் மகிமையை நான் உணர்ந்து தமிழ் மூலத்தைப் படித்தேன். அதற்குப் பிறகு கம்பராமாயணம் படித்தேன். திருப்பாவையின் அருமைபெருமைகளை உணர்ந்தேன். இவ்வாறு சிறைக்கூடமே பள்ளிக் கூடம் ஆயிற்று.

இந்த முதல் சிறைவாசத்தின்போதும் அதற்குப் பிறகு பலநாட்கள், பல மாதங்கள், பல ஆண்டுகள் இருந்த சிறை வாசங்களிலும், கல்லூரியில் கற்காத கலைகளையும் கற்க முடிந்தது. பண்டிட்ஜி எழுதிய Glimpses of world History என்னும் மிகப்பெரிய ஆங்கில நூலை நான் முழுவதுமாகத் தமிழில் மொழிபெயர்த்தது, நான் இருக்க நேர்ந்த பல சிறைகளில்தான். எல்லாம் ஈசுவர கிருபை.

ஆறுமாதம் திருச்சி சிறையில் இருந்த பிறகு, சிறையிலிருந்து விடுதலை கிடைத்தது. ஆனால், திருச்சி சிறை சின்ன சிறை. பாரதநாடு பெரிய சிறை என்ற உணர்வுடன் வெளியே வந்தேன்.

“நாம் இப்போது 1931 ஆம் ஆண்டில் இருக்கிறோம். இன்னும் பல ஆண்டுகள், பல தியாகங்கள், பல துன்பங்கள், பல அக்கினிப் பரீட்சைகள் இவற்றுக்குப் பிறகே பாரத நாடு விடுதலை அடையவிருக்கிறது.” நானும் என்னைப் போன்றவர்களும் காந்திஜியின் தலைமையில் சுதந்தரப்போரில் இறங்கியபோது எங்களுடைய ஆயுள் காலத்தில் இந்தியா விடுதலை அடையப் போவதைப் பார்க்கப் போகிறோம் என்ற நம்பிக்கை இல்லாதவர்களாகவே இருந்தோம். பலர் அவ்வாறே பார்க்காமலும் சென்றுவிட்டார்கள்.

அவர்கள் அதிருஷ்டசாலிகளா, அல்லது சுதந்தர இந்தியாவில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் என் போன்ற சுதந்தர வீரர்கள் அதிருஷ்டசாலிகளா என்ற முடிவில்லாத கேள்விக்கு நான் இன்னும் விடை கண்டு பிடித்துக்கொண்டிருக்கிறேன்.

# தேசத் தொண்டர் சீற்றம்

சில ஆண்டுகளுக்கு முன்னால் மதுரை மாவட்டத்தில் உத்தம பாளையத்துக்கு அருகிலுள்ள அனுமந்தன்பட்டி என்னும் சிற்றூரில் சிறந்த தேசத் தொண்டர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அந்த நாளில் தேசப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற தியாகிகளில் அவரும் ஒருவர்.

'அனுமந்தன்பட்டி கிருஷ்ணசாமி ஐயங்கார்' என்று அவருடைய பெயரைச் சொல்லிய அளவில் மதுரை மாவட்டத்தின் மேற்குச் சீமையில் நன்றாகத் தெரிந்து கொள்ளுவார்கள். அவர் தேசத் தொண்டர் மட்டுமல்லர். சிறந்த கவிஞர். பரம்பரைப் பாவலர்கள் பிறந்த மரபில் பிறந்தவர். நினைத்த அளவில் தாம் நினைத்த கருத்தைப் பாட்டாகச் சொல்லும் திறமை அவருக்கு உண்டு. இராமாயண வெண்பா, செம்பை நாற்பது போன்ற கவிதை நூல்களையெல்லாம் அவர் இயற்றியிருக்கிறார்.

தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக அப்போது ஆண்டுவந்த அந்நிய அரசாங்கம் அவரைக் கைது செய்து கடலூர் சிறையில் கொண்டுபோய்வைத்தது. அதே சிறையில் நாட்டு விடுதலைப் போரில் குதித்த வேறு சில தேசத் தொண்டர்களும் அடைக்கப்பட்டிருந்தனர்.

தமிழ்ப் பாவலரான அனுமந்தன் பட்டி ஐயங்காரவர்கள் சிறையில் இருந்தது எல்லாத் தேசபக்தர்களுக்கும் ஒரு வகையில் நல்ல பயனையளித்தது. தமிழ் இலக்கியத்தைப் பற்றி அவர் சுவையான செய்திகள் பலவற்றைக் கூறி எல்லோருடைய நேரத்தையும் பயனுள்ளதாக்குவார். சிறையில் தமிழ் மணம் கமழ்ந்தது. சிறையில் இருப்பதையே மறந்து ஒரு குடும்பமாக வாழ்வது போல் கடலூர் சிறையில் நாட்களைக் கழித்தார்கள்.

அந்தக் காலதத்தில் கடலூர் சிறையில் இப்போதிருப்பது போன்ற வசதிகள் இல்லை. அதுவும் கைதிகள் தேசபக்தர்கள் என்று தெரிந்தால் கொடுமை அதிகம்.

ஒரு நாள் காலையில் தேசபக்தர்களுக்கு உணவு கிடைக்க வேண்டிய வேளையில் கிடைக்கவில்லை. எல்லோரும் பட்டினி. செவிக்கு உணவு இல்லாத சமயத்தில் வயிற்றுக்கும் ஈயப்படும் என்று கருத்தின்படி ஐயங்கார் கம்பராமாயணம், திருக்குறள் என்று எதைஎதையோ சுவையாகக் கூறி, நண்பர்களின் பசியை மறக்கச் செய்வதற்கு முயன்றார். சிறிது நேரம்தான் அவருடைய முயற்சி வெற்றி பெற்றது. நேரம் ஆக ஆகப் பசி வயிற்றைக் கிள்ளியது. இலக்கியச் சுவை செவிகளில் ஏறவில்லை. இலக்கியச் சுவையூட்டிய ஐயங்காருக்கே பசி பொறுக்க முடியவில்லை. சிறைச்சாலை அதிகாரிகள் கவனிக்கிற பாடாயில்லை.

தேசத் தொண்டர்களுக்குப் பசியும் கோபமும் அதிகரித்தன. சிறைக் காவலாளிகளை நோக்கிக் கூச்சலிட்டனர். போடுவதோ அரைகுறைச் சாப்பாடு. அதையும் நேரத்தோடு போடாமல் பசியை வளரவிட்டால் எப்படிப் பொறுக்க முடியும்? சிறையில் கூப்பாடு வலுத்தது. சிறை 'வார்டன்' வரை தகவல் போயிற்று. எல்லோருக்கும் ஒரே மனக் கொதிப்பு. பசியோடு கூடிய ஆவேசம் அந்தக் கொதிப்பை வளர்த்தது. 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'




என்ற நிலையாகி விட்டது. சிறை வார்டன் எம கிங்கரனைப் போல ஓடிவந்து நின்றார். அதட்டினார்.

''இப்படி அமளி செய்தால் இன்று முழுதும் உங்களைப் பட்டினி போட்டுவிடுவேன்.''

இந்த அதட்டலைக் கேட்டதும் எல்லோரும் கப்சிப் என்று அடங்கிவிட்டனர். அதுவரை அடங்கிப் பசி மயக்கத்தோடு உட்கார்ந்திருந்த ஐயங்கார் பொங்கியெழுந்தார், சீற்றத்தோடு வார்டனைப் பார்த்தார். அவர் உதடுகள் துடித்தன. முகத்தில் ஆவேஷம் படர்ந்தது. அடுத்த கணம் அவருடைய குரல் இடி முழக்கம்போல் ஒலித்தது. வார்டன் அந்த ஆவேசத் தமிழ்க் குரலுக்கு முன் கட்டுண்டு வெலவெலத்துப் போய் நின்றார். அவர் முகத்தில் ஈயாடவில்லை!

''பன்றியெனத் தின்று
பணம்பறிக்கும் வெள்ளையர்காள்
இன்றெமக்குச் சிற்றுணவும்
ஈயாது—துன்றுசிறை
இட்டு வருத்துகின்றீர்
ஏதுக்கிந்த இழவோலை
கிட்டும் நாளொன்று கெடீர்.

ஐயங்காருடைய பசியில் பிறந்த ஆவேசக் கவிதையைக் கேட்டு வியந்துபோய் நின்ற வார்டனின் கன்னத்தில் அறைவதுபோல் மற்றொரு பாட்டும் முழங்கியது. வார்டன் பயந்து நின்றார்.

''ஏடா எமதன்னைக்
கின்ன விழைத்த குடி
கேடா நெறியழித்த
கீழ்மகனே—வாடாத
பீடா ரிளந்தமிழர்
பேரறவாள் கொண்டுகுதித்தார்
போடா இனிவிரைந்து போ!''

பாட்டிலுள்ள ஒவ்வொரு 'டா' வும் கன்னத்தில் அறைவதுபோலவே இருந்தது. அடுத்த சில விநாடிகளில் உணவு வந்தது. வார்டனைப் பார்த்து அந்தத் தேசத் தொண்டர் பாடிய பாடலில் தேசிய எழுச்சி மட்டும் இல்லை. தமிழின் எழுச்சியும் இருக்கிறது. இப்படி எத்தனையோ தேசத் தொண்டர்கள் பட்ட துன்பங்களின் பயனான உரிமை வாழ்வைத்தான் நாம் அனுபவிக்கிறோம்.

—வளவன்

நன்றி : கல்கி

# புத்தகப் பிரியர் காமராஜர்

திரு.காமராஜ் முதலமைச்சராக இருந்தபோது ஒரு சமயம் செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவருடன் நானும் போயிருந்தேன். காரிலேயே கிராமம் கிராமமாகச் சென்று சொற்பொழிவு நிகழ்த்திவிட்டுக் கடைசியாக இரவு பன்னிரண்டு மணிக்கு முசாபரி பங்களா ஒன்றில் தங்கினார். அங்கே படுக்கப் போகு முன், 'சரி, நான் தூங்கப் போகிறேன். என்னைச் சரியாக ஆறு மணிக்கு எழுப்பி விடுங்க'' என்று கூறிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார். உடனே அங்கிருந்தவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? அந்த அறையின் கதவை வெளிப் பக்கம் பூட்டிக் கொண்டார்கள்! எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. ''எதற்காக வெளியே பூட்டிவிடுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''காமராஜ் கதவை உள் பக்கம் தாளிட்டுக்கொண்டு தூங்கிவிட்டால் குறித்த நேரத்தில் அவரை எப்படி எழுப்ப முடியும்? அதற்காகத்தான் வெளியே பூட்டிக் கொள்கிறோம்! ஆறு மணிக்குக் கதவைத் திறந்து நாங்கள் எழுப்பி விடுவோம்'' என்று பதில் சொன்னார்கள்.

இந்த நிகழ்ச்சி எனக்கு ஞாபகம் வரவே, 'இங்கே மெட்ராஸ் ஹவுஸில் என்ன செய்கிறீர்கள் ?'' என்று திரு தீனதயாளை விசாரித்தேன்.

''இங்கே அவர் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு படுக்கப் போவதற்கு மணி பன்னிரண்டு ஆகிவிடும். அதற்கு மேல் அரை மணி, முக்கால் மணி நேரம் புத்தகம் படிப்பார். எவ்வளவு நேரமானாலும் படிக்காமல்மட்டும் உறங்குவதில்லை. இரவு அவர் படுத்துக் கொண்டதும் நான் கதவைச் சாத்திக்கொண்டு வந்து விடுவேன். காலையில் இத்தனை மணிக்குக் காப்பியுடன் எழுப்ப வேண்டும் என்பார். அவர் தூங்கும் போது எத்தனை முறை குரல் கொடுத்தாலும் எழுந்திருக்க மாட்டார். கையினால் மெதுவாகத் தொட்டால் போதும், உடனே எழுந்துவிடுவார்.''

''என்ன புத்தகங்கள் படிக்கிறார்'' என்று கேட்டேன்.

''தமிழ்ப் புத்தகங்கள் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆங்கிலப் புத்தகங்கள் படிப்பதையும் கவனித்திருக்கிறேன். ஆனால் அவை என்னென்ன புத்தகங்கள் என்பது மட்டும் எனக்குத் தெரியாது. பெட்டிக்குள் நிறையப் புத்தகங்கள் வைத்திருக்கிறார். அவ்வளவுதான் தெரியும்....''



அவை என்ன புத்தகங்கள் என்பதை எப்படியாவது தெரிந்து கொண்டுவிட வேண்டுமென்ற ஆவல் அதிகரித்தது.

மறுநாள் காலை காமராஜ் அறைக்குள் எட்டிப் பார்த்தேன். அவர் சோபா ஒன்றில் கால்களைச் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். சட்டைப் பித்தான்களைக் கழற்றிவிட்டு, வலதுகையை முதுகுப் பக்கமாகச் செலுத்தி இடது தோளைத் தேய்த்தபடியே பத்திரிகை படிப்பதில் சுவாரசியமாக ஈடுபட்டிருந்தார்.

மேஜை மீது அன்றைய இந்து, டைம்ஸ் ஆப் இந்தியா, இந்துஸ்தான் டைம்ஸ், இண்டியன் எக்ஸ்பிரஸ்-இவ்வளவு பத்திரிகைகளும் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

''பத்திரிகைகளில் அரசியல் செய்திமட்டும்தான் படிப்பீர்களா? அல்லது..''

''எல்லாந்தான். எந்த ஊரில் என்ன பிரச்னை என்று பார்ப்பேன். ஒரு ஊரில் தண்ணீர் இல்லை என்ற செய்தி இருந்தால் அதையுந்தான் பார்ப்பேன். தண்ணீர் இல்லை என்பதும் அரசியல் சம்பந்தப்பட்டதுதானே?'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார். எழுந்தவர் கவனமாக மின் விசிறியை நிறுத்திவிட்டு அடுத்த அறைக்குள் சென்றார். அதுதான் அவருடைய படுக்கை அறை. படுக்கை அறையை ஒட்டினாற்போல் இன்னொரு சின்ன அறை. அங்கேதான் அவருடைய பெட்டி இருந்தது. சாதாரணமாக ''விசிட்டர்கள்'' யாரும் அந்த அறைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. அந்தச் சின்ன அறைக்குள் இருந்த சிறு மேஜை, 'கோட் ஸ்டாண்ட்', முகம் பார்க்கும் கண்ணாடி எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் கண்ணோட்டமிட்டேன்.

''என்ன...என்ன பாக்கறீங்க?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

'ஒன்றுமில்லை; தங்களைக் கூடவே இருந்து கவனிக்கப் போகிறேன். இது என்னுடைய நெடுநாளைய ஆசை' என்றேன்.

''ஓ, தாராளமா இருங்களேன், இப்படி வந்து உட்காருங்க'' என்று கூறிக்கொண்டே பெட்டியிலிருந்த சலவைத் துணிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே வைத்தார்.

அந்தப் பெட்டிக்குள் என்னென்ன இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆவலில் கூர்ந்து கவனித்தேன்;

INSIDE AFRICA
—by John Gunther

ENDS AND MEANS
—by Aldous Huxley

TIME MAGAZINE

NEWS WEEK

**சிந்தனைச் செல்வம்**
**—வி. ச. காண்டேகர்**

இவ்வளவும் இருந்தன. இவ்வளவையும் கவனிக்காததுபோல் கவனித்துக் கொண்டேன். நான் கவனிக்காததுபோல் கவனித்ததை அவரும் கவனிக்கத் தவறவில்லை.

'இன்ஸைட் ஆப்பிரிக்கா'வைப் பற்றி இவருக்கு என்ன கவலை? 'இன்ஸைட் இந்தியா'வைப்பற்றி இவர் படுகிற கவலை போதாதா?'' என்று எண்ணிக்கொண்டேன். யார் கண்டார்கள்? இந்தப் பொல்லாத மனிதர் அகில இந்தியாவுக்கும் ஒரு ''காமராஜ் திட்டம்'' கொண்டு வந்ததுபோல் ஆப்பிரிக்கா தேசத்துக்கும் இன்னொரு திட்டம் வைத்திருக்கிறாரோ என்னவோ?

—சாவி
[சிவகாமியின் செல்வன் என்னும் நூலில்]

# திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## ஊரக வளர்ச்சித்துறை சாதனைகள்

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

**1987—88**

| | இலக்கு | சாதனை | சதவீதம் | செலவு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| பயனடைந்தோர் | 23614 | 24566 | 104% | ரூ. 383.18 |

**1988—89**

| | இலக்கு | 30-6-88 முடிய சாதனை |
|---|---|---|
| பயனடைவோர் | 19824 | 5117 |

### சிறு விவசாயிகளுக்கு பெருமளவில் உதவும் திட்டம்

**1987—88**

| | | செலவு (இலட்சத்தில்) |
|---|---|---|
| பயனடைந்தோர் | 3997 | ரூ. 107.12 |

### தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

**1987—88**

| | | |
|---|---|---|
| செலவுத் தொகை | — | ரூ. 299.085 இலட்சம் |
| ஒதுக்கப்படட்ட கோதுமை அளவு | — | 3480.250 மெ.டன் மதிப்பு ரூ. 118.32 இலட்சம் |
| ஒதுக்கப்பட்ட அரிசி அளவு | — | 3480.250 மெ. டன் |

**வறட்சிப் பணி**

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்ட அரிசி அளவு | — | 1080.25 மெ. டன். |
| ஒதுக்கப்பட்ட கோதுமை அளவு | — | 1080.25 மெ.டன். |
| முடிக்கப்பட்ட வேலைகள் | — | 2666 |
| வேலைவாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை | — | 22.06 இலட்சம் நபர்கள் |

**1988—89**

2260 வேலைகள் ரூ. 394.60 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளன.

### ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

**1987—88**

**செலவு விவரம்**

| | | |
|---|---|---|
| ரொக்கமாக | — | ரூ. 314.770 இலட்சம் |
| அரிசி | — | 3953 மெட்ரிக் டன் |
| கோதுமை | — | 3620 மெட்ரிக் டன் |
| மொத்த மதிப்பு | — | ரூ. 443.99 இலட்சம் |
| செய்யப்பட்ட வேலைகள் | — | 3000 |
| வேலைவரய்ப்புப் பெற்றவர் | — | 3.15 இலட்சம் நபர்கள் |

**1988—89**

| இலக்கு | ஒதுக்கீடு |
|---|---|
| 2450 குடியிருப்புகள் | ரூ.285.13 இலட்சம் |

**எல். லிங்கவன், பி.ஏ.,**
திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திருச்சிராப்பள்ளி

**உஜாகர் சிங், இ.ஆ.ப.,**
தலைவர்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திருச்சிராப்பள்ளி.

# மாவீரன் மண்டேலா



நிறவெறி பிடித்த தென் ஆப்பிரிக்க வெள்ளையர் ஆதிக்கம் கறுப்பர் இனத்தலைவனான நெல்சன் மண்டேலாவைத் தனிமைச் சிறைக்குள்ளே தள்ளி 26 ஆண்டுகள் ஆகின்றன.

தென்னாப்பிரிக்க அரசின் நிறவெறியை எதிர்த்துப் பல ஆண்டுகளுக்கு முன்பே அண்ணல் காந்தியடிகளும், தமிழ்நாட்டைச் சேர்ந்த தில்லையாடி வள்ளியம்மாளும் நடத்திய அறப்போர் பற்றி நமக்குத் தெரியும். மண்டேலா போராட்டத்தின் குறிக்கோளும் அதுதான்.

'வெள்ளையர் - கறுப்பர் வேறுபாடு கூடாது, எல்லோருக்கும் சமநீதி வழங்கப்பட வேண்டும்' என்பதுதான் நெல்சன் மண்டேலா போராட்டத்தின் ஆணிவேர்.

18-7-1988-ல் அந்த வீரமறவனின் எழுபதாவது பிறந்தநாள். மனைவி மக்களோடு அந்த நன்னாளைக் கொண்டாட ஆறுமணி நேரம் அனுமதி என சட்டக் கட்டுப்பாடு விதித்தது தென்னாப்பிரிக்க அரசு. 'என்னோடு சிறைக்கு வந்தவர்களெல்லாம் ஏங்கித் தவிக்கையில் எனக்கென்ன குதூகலம் வேண்டிக் கிடக்கிறது?' என்று கூறி அதை ஏற்க மறுத்துவிட்டார் நெல்சன் மண்டேலா.

அவர்வழி நடக்கிற-அவர் தியாகத்தைப் பாராட்டுகிற ஆதரவாளர்கள் மண்டேலாவின் பிறந்த நாளைப் பெருமகிழ்வோடு கொண்டாட எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கெல்லாம்கூட அந்த அரக்க குணம்கொண்ட அரசு 'ஆகாது' எனத் தடை விதித்து விட்டது. பின்னர் அதை எதிர்த்து உச்சநீதி மன்றம்வரை போய் வெற்றி பெற்று அச்சமின்றி விழா எடுக்கப்பட்டிருக்கிறது அந்த நாட்டில்.

**நெல்சன் ரோலிலாஹலா மண்டேலா**-இதுதான் அந்த மாவீரனின் முழுப்பெயர்.

18-7-1918-ல், ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் அதிகம் வாழும் டிரான்ஸ்கெய் பகுதியில் உள்ள கியூனுவில் பிறந்தவர் மண்டேலா. 'ரீஷாசா' என்ற ஆப்பிரிக்கப் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவரான அவரது தந்தையார், சிறு வயதில் மகனைப் பள்ளியில் சேர்த்தாரென்றாலும், அவ்வப்போது மாடு மேய்க்கவும் அழைத்துக் கொண்டார்.

1940-ல், மண்டேலாவின் உயர்தரப் படிப்பு முடிந்தது. ஜோகின்ஸ் பர்க் தங்கச் சுரங்கத்தில் காவலாளி வேலை கிடைத்தது. படிப்பின் மேலிருந்த ஆர்வம் மங்காததால், ஓய்வு நேரத்தில் சட்டம் பயின்றார் அந்த உன்னத மனிதர்.

இந்த நேரத்தில்தான் ஈவிலின் நெமோதம் சங்கா எனும் மாதை மணந்து கொண்டார் மண்டேலா. ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் இயக்கத்தில் அவருக்கு ஏற்பட்ட ஈடுபாடு, இல்வாழ்வை இனிமையுடையதாக்கவில்லை. மனைவி, அதைவிட்டு விலகிக்கொள்ளும்படி சொல்லிப் பார்த்தாள். மண்டேலா இணங்குவதாக இல்லை. முடிவு? மண்டேலாவை விட்டு அவள் விலகிக் கொண்டாள்.

தன் இன மக்களின் விடுதலை பற்றி ஏற்பட்ட அவரது தணியாத தாகம் அரசின் நெற்றிக் கண்ணைத் திறக்கவைத்தது. எனவே, மண்டேலா மீது ராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டது. ஐந்தாண்டுக் காலத்திற்கு மேல் வழக்குமன்றம் ஏறியிறங்க வேண்டியதாயிற்று.

இதற்கிடையிலே, நோம்சாமோ வின்னி மாண்டிகிலேலா என்ற, சமூக சேவகியின் காதல் நெஞ்சம் அவரை அரவணைத்து அன்பு காட்டியது. விட்வாட்டர்ஸ்ரண்ட் பல்கலைக் கழகத்தில் பொருளாதார அறிவியலில் பட்டம் பெற்ற பெண்மணி அவர். காதல் நெஞ்சம் கனிந்தது. 1958-ல், அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள்.

பொது வாழ்வில் ஈடுபாடு கொண்ட அவர்களின் புதுவாழ்வு நான்காண்டுக் காலம் நலமுற நடைபெற்றது. ஜென்னி, ஜின்ஜி என்ற இரண்டு பெண்மக்கள் பிறந்தார்கள்.

நடந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படாத காரணத்தால் மண்டேலா விடுவிக்கப்பட்டார். ஆனாலும் அந்த சுதந்திரச் சூரியனை விட்டு வைத்தால் கறுப்பர் இனத்தவரெல்லாம் வெளிச்சத்திற்கு வந்து விடுவார்களோ என்று அஞ்சியது வெள்ளை அரசு; மீண்டும் அவரை வளைத்துப் பிடிக்க வஞ்சக வலை விரித்தது.

அடிமை வாழும் பூமியெங்கும்...

கோடிமக்கள் சேர்ந்துவாழ
வேண்டும் விடுதலை
கோயில்போல நாடுகாண
வேண்டும் விடுதலை
அச்சமின்றி ஆடிப்பாட
வேண்டும் விடுதலை
அடிமைவாழும் பூமியெங்கும்
வேண்டும் விடுதலை

—கவிஞர் கண்ணதாசன்

ஆட்சிக் கவிழ்ப்புக்கு அவர் சதி செய்ததாகக்—குற்றம் 1961-ல் சாட்டப்பட்டது. எதியோப்பியா எனும் ஆப்பிரிக்க நாட்டுத் தலைநகர் அடிஸ் அபாபா வில் நடைபெற்ற ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் திடீரெனத் தோன்றி விடுதலை முழக்கம் செய்தார் மண்டேலா. அவரைக் கைது செய்யத் தேடி யலைந்த காவல் துறையினர், நாடு திரும்பிய அவரை, அரசு அனுமதி பெறாமல் வெளிநாடு சென்றதாகக் கைது செய்து சிறைப்படுத்தினர். 1962 ஆகஸ்டில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 1964இல் மேலும் சில குற்றச்சாட்டுக்களையும் சுமத்தி இரண்டாவது முறையாக அந்தக் கொள்கை வீரனைக் கொடுஞ்சிறை யில் அடைத்தார்கள் கொடியவர்கள்.

அன்றைக்குச் சிறைக்குள் சென்றவர்தான் அவர், இன்றைக்கும் அவரை விடுவிக்க அஞ்சுகிறது, அந்த நாட்டு அரசு.

அன்றைக்கு அவர்மீதும், அவர்வழி நடக்கும் மற்றும் ஒன்பது பேர் மீதும்-நாசவேலைக் குற்றச்சாட்டு சுமத்தி 'ரிவோனியா வழக்கு' தொடரப்பட்ட பிறகு ரோபென் தீவுச் சிறையில் அடைக்கப்பட்டவர்தான் மண்டேலா. தென்னாப்பிரிக்க அரசின் சட்டப்படி, தண்டனைக் குறைப்போ, மன்னிப்போ, ஜாமீனில் விடுதலையோ இல்லை என்ற அளவில் ஆயுள்தண்டனை யாக்கப்பட்டுவிட்டது அது.

1964 ஏப்ரல் 20-ஆம் நாளன்று, சிறை செல்லு முன் பெரட்டோரியா உச்ச நீதிமன்றத்தில் தம் வழக்கு தொடர்பாக அவர் வைத்த அறிக்கையின் சில பகுதிகள் நம் நெஞ்சை நெருடுவதாக இருக்கின்றன.

'இந்த வழக்கின்படி, முதலாவது குற்றவாளி நான். கலையில் இளநிலைப் பட்டம் பெற்றவன். பலஆண்டுக் காலம் ஜோகன்ஸ் பர்க்கில் ஆலிவர் டாம்போவுடன் வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்கிறேன்.'' —என்று தொடங்குகிறது அந்த அறிக்கை.

'நான் செய்வது எதுவாயினும் - யாவும் தனிப் பட்ட முறையிலும், எனது மக்களின் தலைவன் என்ற முறையிலும், என் சொந்தம் காரணமாகவும் செய்ததே யாகும். வெளிநாட்டவர் சொல்லிச் செய்தது எதுவு மில்லை....

'நாசவேலைக்குத் திட்டமிட்டேன் என்பதை நான் மறுக்கப் போவதில்லை. ஆனால் எதைப்பற்றி யும் கவலைப்படாமல் அதற்கு நான் திட்டமிடவில்லை. ஏனென்றால் வன்முறை மீது எனக்கு எந்தக் காதலும் இல்லை. நீண்டகாலக் கொடுங்கோன்மை, வெள்ளை யர்கள் என் இனத்தார் மீது நடத்திவரும் அடக்குமுறை ஆகியவற்றின் காரணமாக எழுந்துள்ள அரசியல் சூழ் நிலை பற்றி அமைதியாகவும், அவசரப்படாமலும் நான் எடுத்த முடிவே அதற்குக் காரணமாகி விட்டது. இது தவிர, எங்கள் 'உம்கொண்டோ' இயக்கம் வன் முறை இயக்கம் அல்லவே அல்ல...

'வெள்ளையாட்சி வெறியர்களின் கொள்கையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற வன்முறையைத் தவிர வேறு எந்த நன்முறை வழியும் ஆப்பிரிக்க மக் களுக்குத் திறந்திருக்கவில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

'முதலில், வன்முறையின்றிச் சட்டத்தை எதிர்க்கத் தொடங்கினோம். எங்களை அடக்கி ஒடுக்க அரசு வன் முறையைக் கையாண்டது. எனவேதான், வன்முறைக்கு வன்முறையாலேயே பதில் கூறத் தொடங்கினோம். ஆனால் நாங்கள் கையாண்ட வன்முறை பயங்கரவாதம் அல்ல. இதுவல்லாமல் இனத்துக்கு இனம் ஒரு யுத் தத்தை ஏற்படுத்த நாங்கள் என்றுமே விரும்பியதில்லை.

'அரசியல் போராட்டத்தில் வன்முறையைக் கையாள நாங்கள் தள்ளப்பட்டோம். இந்தப் பாதைக்கு அரசாங்கமே எங்களைத் தள்ளிச் சென்றது.

'எந்த தேசத்தின் வரலாற்றிலும் 'சரணாகதி' அல்லது 'போராட்டம்' என்கிற முடிவுக்கு வரும் காலம் ஒன்று வந்தே தீரும். அந்த நேரம், தென்னாப்பிரிக்கா வுக்கு இப்போது வந்துவிட்டது. நாங்கள் சரணடைய மாட்டோம்; நம் மக்களை, நம் எதிர்காலத்தை நம் சுதந்திரத்தைப் பாதுகாக்க எல்லாவிதமான சக்தியை யும் பயன்படுத்துவது தவிர, வேறு வழி நமக்கில்லை!'

—நெல்சன் மண்டேலா, உச்ச நீதிமன்றத்தில் அன்று வைத்த அறிக்கையின் சில பகுதிகள் இவை.

அன்றைய தினம் தென்னாப்பிரிக்க அரசின் அதிப ராக இருந்த வென்வவுர்டர் என்பவர், நெல்சன் மண் டேலா என்றாலே நெஞ்சம் கலங்கினார். இப்போது அங்கே அதிபராக இருக்கும் போத்தா என்பவரின் நிலையும் 'புலிவாலைப் பிடித்த நாயர்' கதையாகவே இருக்கிறது.

அவரைச் சிறையிலடைத்து விட்டதால், கறுப்பர் போராட்டம் கட்டுக்கடங்கி விட்டதா என்றால் அது தான் இல்லை. 54 வயதடைந்த நெல்சன் மண்டேலா வின் துணைவியார் திருமதி வின்னியும், மண்டேலாவின் அருமை நண்பர் ஆலிவர் டேம்போவும் இப்போதும் விடுதலைப் போராட்ட நெருப்பில் நீறுபூத்து விடாமல் காத்து வருகிறார்கள். மண்டேலா குடும்பத்தையே அழித்துவிட, அவர் வீட்டின் மீது குண்டு வீசும் சம்பவங் களும் திட்டந்து எறிதலும் துப்பாக்கிச் சூடும் தொடர்ந்து நடந்து கொண்டுதான இருக்கின்றன.

என்ன நடந்தாலும் இதயம் குலைந்து விடாமல்—'பெருநெருப்புக்கு ஈரமில்லை' என்ற விதத்தில் எழுச்சி மிகு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறார் திருமதி வின்னி மண்டேலா.

இப்போது போல்ஸ்மோரில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள நெல்சன் மண்டேலாவுக்குத் தணிக்கை செய்யப்பட்ட செய்தித் தாள்களே தரப்படுகின்றன. உள்ளூர் வானொலிச் செய்திகளைக் கேட்க மட்டுமே அனுமதிக்கப்படுகிறார். எழுபது வயதானாலும் எழுச்சி மயமான எண்ணங்களின் காரணமாக, இன்று அவர் ஓர் இளைஞருக்குள்ள சுறுசுறுப்புடனேயே காணப்படுகிறார்.

கறுப்பு இனமக்களின் விடுதலை வேண்டி, தோளு யர்த்தி நின்ற அந்தத் தன்மானச் சிங்கத்தை விடுதலை செய்ய வேண்டுமென்று நமது இந்தியா உட்பட உலக நாடுகளெல்லாம் ஒருமித்த குரலை எழுப்புகின்றன. பல வெள்ளை நாடுகளும்கூட இதற்கு ஆதரவாகக் கரம் உயர்த்தியுள்ளன.

தென்னாப்பிரிக்காவின் மொத்த மக்கட்தொகை யில் ஒரு கோடியே 90 இலட்சம் கறுப்பு இன மக்கள் வாழ்கிறார்கள். 25 இலட்சம் பேர் கலப்பு இனமக்கள். மற்ற சிறுபான்மையினரே வெள்ளையர்கள். அதாவது ஐந்தில் ஒரு பங்கு வெள்ளையர், எல்லோரும் தமக்கு அடங்கியே ஆகவேண்டும் என்று அடம் பிடிக்கிறார்கள். இதென்ன நியாயம்?

- பி. எல் ராஜேந்திரன்



# நலிந்தோர் பெற்ற நல்வாழ்வு

**இ**து எங்கள் விழா, ஏழைகளுக்குப் பயனளிக்கும் விழா என்ற எழுச்சியோடு கிராமப்புறங்களிலிருந்து மக்கள் சாரை சாரையாக, அணி அணியாக, கால்நடையாகவும் கட்டை வண்டிகளிலும், சைக்கிள், இரு சக்கர ஊர்திகளிலும், லாரி, டிராக்டர்களிலும் கலந்து கொண்ட கண்கொள்ளாக் காட்சியை, 22.7.88 அன்று பிற்பகல் செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் அருகிலுள்ள பெணலூர்ப் பேட்டையில் காண முடிந்தது.

ஆதிதிராவிடர்களுக்குக் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், சமுதாயக் கூடங்கள் முதலியவற்றைத் திறந்து வைத்தும், நலிவுற்றோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் விழாவைச் சிறப்பித்தார் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்கள். மேதகு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ.பத்மநாபன் இ.ஆ.ப. அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர் வியாஸ், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் தெரிவித்ததாவது:

''நமது ஆளுநரின் ஆலோசகர் அவர்கள் 35 ஆண்டுகளுக்கு முன்னால் திருவள்ளூரில் துணைமாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து பணியாற்றியவர். இப்பொழுது அவரது தலைமையில் இந்த விழா நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.

''அதிகாரிகள் மக்களிடம் சென்று குறைகளைக் கேட்டு அறிந்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இன்று கிட்டத்தட்ட 500 வீடுகள் திறக்கப்படுகின்றன. கடன் வாங்குகிறவர்கள் அதைத் திருப்பிச் செலுத்த வேண்டும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இந்த ஆண்டில் ரூ.3.1 கோடி செலவு செய்யப்படும்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன், இ.ஆ.ப. அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்த கருத்துமணிகளில் சில:

''மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்கள் தமிழ்நாட்டில் கலந்து கொள்ளும் முதல் அரசு விழாவாக இது விளங்குவது பெருமைக்குரியது.

''இன்றைக்கு இங்கே தொகுப்பு வீடுகள், சமுதாயக் கூடங்கள், ஊராட்சி நலத் திட்டங்கள் முதலியவை தொடங்கி வைக்கப்படுகின்றன. இவையெல்லாம் இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களின் திட்டங்கள்.

''ஏழை-எளிய கோடிக்கணக்கான மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்ற திட்டங்கள் தமிழகத்தில் ஆளுநர் அவர்களின் தலைமையின் கீழ் சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஏழை, எளிய மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகப் பிரதமர் அவர்கள் இந்த ஆண்டு மட்டும் ரூ.151 கோடி செலவு செய்யப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் ரூ.10 கோடி செலவு செய்யப்படும்.

''நேற்றுக்கூட இந்தத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்தோம். ஆதிதிராவிட மக்களுக்குக் காமராஜர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் - 8,000 வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் 7,200 இடங்கள் தேர்ந்தெடுத்தாயிற்று. அதில் 5,000 வீடுகள் இன்னும் 2,3 மாதங்களில் முடிந்துவிடும். 8,000 வீடுகளும் இந்த ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

''ஏழை, எளிய மக்களின் உயர்வுக்காக அயராது அல்லும் பகலும் உழைத்துவரும் பிரதமரின் கருத்துக்கிணங்க, ஆதிதிராவிட மக்களுக்கு உடனடி நன்மைகள் கிடைக்க, அரசு அரும்பாடுபட்டு வருகிறது. ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டாக்கள் வழங்குவது சம்பந்தமாக, நத்தம் புறம்போக்காக இருந்தால் உடனடியாகப் பட்டா செய்து கொடுக்கும்படியும், வேறு வகையில் ஒதுக்கீடு செய்வதாயிருந்தால் அதையும் உடனடியாகச் செய்யும்படியும் உத்தரவு போட்டிருக்கிறோம்.

''எந்தக் கிராமத்திலும் சரி, மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினையே இருக்கக்கூடாது என்று பணியாற்றி வருகிறோம். பள்ளிகளில் குழந்தைகளுக்கு மதிய உணவு மட்டுமல்லாமல், இலவசப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் 4 கோடி இலவசப் புத்தகங்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன''.

திருமதி மரகதம் சந்திரசேகர், எம்.பி., அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இங்கே தொகுப்பு வீடுகள் திறந்து வைத்திருக்கிறோம். இந்தத் தொகுப்பு வீடுகளுக்கு ' இந்திரா நிவாஸ் தொகுப்பு வீடுகள்'' என்று பெயர். இந்த வீடுகள் கட்ட 3 செண்டு நிலம் கட்டாயம் இருக்க வேண்டும். தையல் இயந்திரங்கள் கொடுத்து, ஆதிதிராவிட மக்கள் அந்த இயந்திரத்தில் துணி தைத்துக் கொடுத்தால், சில இடங்களில் அவைகளை வாங்குவதில்லையெனக் கேள்விப்படுகிறோம். அப்படிப்பட்ட நிலை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்''

திரு. ஆர். ஜீவரத்தினம் எம்.பி., அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

''இப்படி ஒரு கிராமத்தில் நடக்கும் விழாவுக்கு இந்தியாவின் உள்துறை அமைச்சர் அவர்களே வந்து கலந்து கொள்வது இந்திய வரலாற்றில் இதுவே முதல் தடவையாக இருக்குமென்று நினைக்கிறேன்.''

''ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டித் தருவதில் இப்பொழுது ஒரு வீட்டிற்கு ரூ.6,000 செலவு செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திறக்கப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டுத் தொகை மற்றும் வழங்கப் பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம்.

| | எண் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| திருவள்ளூர் கோட்டம் (தே.ஊ.வே.தி. ஊ.நி.வே.உ. திட்டங்கள்) | | |
| 1. தொகுப்பு வீடுகள் | 494 | 50.38 |
| 2. பள்ளிக் கட்டிடம் | 1 | 00.90 |
| 3. அரிசி சேமிப்புக் கிடங்கு | 1 | 00.70 |
| 4. சமுதாயக் கூடம் | 11 | 5.20 |
| தாட்கோ செங்கை மாவட்டம் 5. தொகுப்பு வீடுகள் | 60 | 3.60 |
| | 567 | 60.78 |

வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம்:

| | |
|---|---|
| தாட்கோ | |
| மாட்டு வண்டிகள், உழவு மாடுகள், கிணறு மற்றும் பம்புசெட் கடன் உதவி பெற்றவர்கள் | 54 நபர்கள் |
| மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | |
| முடிதிருத்துவோருக்கு இலவசத் தொழிற் கருவிகள் | 38 நபர்கள் |
| சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகள் | 70 நபர்கள் |
| ஆதிதிராவிடர் நலத்திட்டம் | |
| இலவச தையல் இயந்திரம் | 60 நபர்கள் |
| முடி திருத்துவோருக்கு இலவசத் தொழிற்கருவிகள் | 20 நபர்கள் |
| வீட்டுமனைப்பட்டா | 200 நபர்கள் |
| திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் | |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ்க் கடனுதவி வழங்குதல் | 200 நபர்கள் |
| மாவட்டச் சமூக நல அலுவலர், காஞ்சிபுரம் | |
| ஏழை மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இலவசத் தையல் இயந்திரம் வழங்குதல் | 30 நபர்கள் |

இது போதாது. இந்தத் தொகையை மேலும் அதிகமாக்க வேண்டும்.

பூண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு.வி.சுப்பிரமணிய ராஜா, மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு மடல் வாசித்தளித்தார். கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு.சீராமநாயக்கர், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு ஆர்.சிட்டிபாபு, திருத்தணி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு.வீ.பாலசுப்பிரமணியம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு வி.எம். துரைசாமி ஆகியோரும் விழாவில் பேசினார்கள்.

விழாவின் முடிமணி நிகழ்ச்சியாகக் கட்டடங்களைத் திறந்து வைத்தும், மக்களுக்கு நல்வாழ்வு உதவிகளை வழங்கியும் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்கள் பேருரை யாற்றினார். அவரது சத்தான கருத்துகளில் சில:

''சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவு மக்களுக்கு மிகப் பெருமளவில் நன்மை செய்யத்தக்க நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருவதை நான் பாராட்டுகிறேன். மாபெரும் தலைவராக விளங்கிய எம்.ஜி.ஆர். அவர்களது துயரமான மரணத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டு மக்களுக்கு உதவக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

''திட்ட ஒதுக்கீட்டிற்கு மேலும் நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டு, பிரதமர் அவர்களிடத்தில் நானும் சகோதரி மரகதம் சந்திரசேகர், சகோதரர் ஜீவரத்தினம், தலைவர் மூப்பனார் போன்றவர்களும் சென்றோம். பிரதமர் அவர்கள் எங்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் கேட்டு ரூ. 26 கோடியைச் சிறப்பு ஒதுக்கீடாக அதிகரித்துத் தந்தார்.

''கிராமங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதிலும், பெண்களை முன்னேற்றமடையச் செய்வதிலும், கிராமங்களிலிருந்து வறுமையை ஒட்டுவதிலும் அரசு முழுமூச்சாக ஈடுபடவேண்டும் என்பதே திரு ராஜீவ்காந்தியின் இலட்சியமாக இருந்து வருகிறது. இந்த இலட்சியம் நிறைவேறுவதற்கு மக்கள் அரசுடன் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

''பிரிவினைச் சக்திகள் பற்றியும், அவற்றிற்குத் துணைபோகும் சில எதிர்க்கட்சிகள் பற்றியும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம் இது. அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமையில்லாத - மதவாத, எதிர்ப்புவாத, பிரிவினைச் சக்திகள், சந்தர்ப்பவாத, கொள்கையற்ற கூட்டுச்சேர முயல்வதால் குழப்பம்தான் ஏற்படுமே தவிர, நிர்வாகத்தை நடத்திச் செல்ல இயலாது.

''தொகுப்பு வீடுகளுக்கான தொகையை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்த வீடு கட்டும் திட்டம், ஒரு தொடர் நடவடிக்கையாகும். எதிர்காலத்தில் இந்தத் தொகை மேலும் உயர்த்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. நமக்கு வேண்டியதெல்லாம் ஒன்றுதான். நாட்டின் ஒற்றுமையும், உறுதிப்பாடும்தான் முக்கியம். இவைகள் இருந்துவிட்டால், எந்தச் சோதனையையும் முறியடிக்க முடியும்.

''இமயம் தொட்டுக் குமரி வரையும் ஒரே மக்கள்-ஒரே இலட்சியம் என்ற உணர்வோடு பணியாற்ற வேண்டும். பிரிவினையும், பேதமும் கொண்ட எந்த மாநிலமும் முன்னேற முடியாது. இதனை உணர்ந்து செயல்படும் எழுச்சியையும், ஊக்கத்தையும் இந்த விழா ஏற்படுத்தும் என நம்புகிறேன்''.

விழா இறுதியில் ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் திரு.வி.சுந்தரம், இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்



# காமராஜர் மாவட்டத்தில் பல்துறைப் பணிகள் விளக்க விழா

**மாநில அரசுகளும், மத்திய அரசும் பற்பல திட்டங்களைத் தீட்டி மக்களுக்குத் தொண்டு புரிந்து வரும் செய்தியை - மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக அவ்வப்போது மாவட்டங்களில் பல்துறைப் பணிகள் விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. அண்மையில் காமராசர் மாவட்டத்தில் நடைபெற்ற பல்துறைப் பணி விளக்க விழா நிகழ்ச்சிகள் இங்கே விளக்கப் பட்டுள்ளன.**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளையொட்டி காமராஜர் மாவட்டத்தில் ஜூலை 15 முதல் 21 முடிய பல்துறைப் பணிகள் விளக்க முகாமும், கண்காட்சியும் நடைபெற்றன.

தமிழ்நாடு அரசின் செய்திமக்கள் தொடர்புத்துறை, மத்திய அரசின் கள விளம்பரத்துறை ஆகியவை இணைந்து இந்த விளக்க விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

விருதுநகரில், காமராஜ் வித்தியாசாலா வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை ஜூலை 15 அன்று பிற்பகல் 3 மணியளவில் மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப.சிதம்பரம் அவர்கள் திறந்து வைத்தார். கண்காட்சியில் இடம் பெற்றிருந்த 18 அரங்குகளின் உள்ளேயும் சென்று பார்வையிட்டார். **பாண்டியன் போக்குவரத்துக் கழக இன்னிசைக் குழுவினரின்** இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பல்துறைப் பணி விளக்க விழாவை மாண்புமிகு மத்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு எம். அருணாசலம் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் தலைமையில், மாலை 6 மணியளவில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் தொடங்கி வைத்தார்.

ஜூலை 16-ஆம் நாள், வேளாண்மை தினமாகக் கொண்டாடப் பெற்றது. காமராஜர் வித்யாசாலா வளாகத்தில் உள்ள திரு. **மு. அ. பழனிச்சாமி நாடார்** கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் முகமது சகருதீன் தலைமை ஏற்றார். அருப்புக்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் திரு ஜீவானந்தம் வரவேற்புரை நல்கினார். துணை இயக்குநர் மருதநாயகம் உரையாற்றுகையில், "மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகிறது. நிலங்கள் பெருக வாய்ப்பில்லை. உற்பத்தி பெருக நல்ல விதை தேவை" என்று குறிப்பிட்டார்.

மதுரை **பாண்டியன்** போக்குவரத்துக் கழக இன்னிசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஜூலை 17-ஆம் நாள் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப் பட்டது. விழாவுக்கு வந்திருந்தோரை மாவட்ட தொழில் மையத்தின் பொதுமேலாளர் திரு சத்திய நாராயணன் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது :

''ஒரே தொழிலைப் பலரும் செய்வதைவிடப் பல்வேறு புதியதொழில்களை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். குறிப்பாக இளைஞர்கள் சிறிய தொழில்களைத் தொடங்கினால் நாடு முன்னேறி வளர்ச்சியடையும். தொழில் வளர்ச்சிதான் முக்கியம் எனமத்திய மாநில அரசுகள் கருதுகின்றன.''

தலைமை ஏற்ற காமராஜர் மாவட்ட சிறுதொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு என். சிதம்பரம் குறிப்பிட்டார்:

'எலக்ட்ரானிக், தோல், என்ஜினியரிங், பிளாஸ்டிக் ஆகிய இனங்கள் தொடர்பான தொழில்கள் இந்த மாவட்டத்தில் இல்லை. அவற்றைத் தொடங்க வேண்டும்.''



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக மேலாளர் (விருதுநகர்) திரு சிவராமன், சிட்கோ முதனிலை மேலாளர் திரு சாயிமுகமது, எஸ்.பி.சி. மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் நிர்வாக இயக்குநர் திரு பிருந்தாவன் ஆகியோர் பேசினர். பொருளாதாரப் புலனாய்வு மேலாளர் திரு என். நாகராஜன் நன்றி கூறினார். பின்னர் **சிவகாசி காந்திமதி சகோதரியரின்** வில்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஜூலை 18-ஆம் நாள் மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு வந்திருந்தோரை மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி ஆர். விமல் டெஸ்ஸி வரவேற்றுப் பேசினார். ஏய்ஸ் மகளிர் சங்கத்தைச் சார்ந்த திருமதிசௌந்தரி முருகேசன், திருமதி கிரேஷ் அந்தோணி, அரிமா மகளிர் சங்கத்தைச் சார்ந்த நளினி பாண்டியராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்குத் தலைமையேற்று உரையாற்றிய திரு டேவிட் ராஜா பேசுகையில் கூறியதாவது:

''கவியரசர் பாரதி அவர்களை இந்த நேரத்தில் நினைப்பது மிகவும் சாலப்பொருந்தும். இனி வருங்கால உலகில் ஆண் பெண் சமம் என்ற நிலை ஏற்படும். ஒரு பெண்ணின் மனத்தைப் புரிந்து கொண்டு வேறுபாடுகளைக் களைந்து நல்லதை நினைத்துச் செயல்பட வேண்டும்''.

பள்ளிக் குழந்தைகள் இசைக்கு ஏற்ப ஆடும் ஆட்டங்கள், விழாவிற்கு வந்திருந்த பொது மக்களை மிகவும் கவர்ந்தன.

விழா இறுதியில் மைய - மாநில அரசுகளின் சாதனைகளை விளக்கும் செய்திப் படங்கள் காண்பிக்கப்பட்டன.

செய்தி மக்கள் தொடர்புத் துறை உதவி மக்கள்தொடர்பு அலுவலர் திரு தாணப்பா நன்றி கூறினார்.

## நாடகம், இசை நிகழ்ச்சி, படக்காட்சி

காமராசர் மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் 6 நகரவைப் பகுதிகளிலும் அரசின் புதிய திட்டங்களை விளக்கும் வகையில் நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், படக்காட்சிகள் முதலியவை நடைபெற்றன.

அருப்புக்கோட்டைக் கோட்டத்தில் 124 கிராமங்களிலும் சிவகாசிக் கோட்டத்தில் 185 கிராமங்களிலும் படக்காட்சிகள் நடத்தப் பெற்றன.

மதுவிலக்கு, தீண்டாமை, குடும்பநலத் திட்டம், சிறுசேமிப்பு, முதியோர் கல்வித் திட்டம் ஆகியவை தொடர்பான இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள் சிவகாசிக் கோட்டத்தில் 55 கிராமங்களிலும் அருப்புக் கோட்டைக் கோட்டத்தில் 44 கிராமங்களிலும் நடைபெற்றன.

மொத்தம் 408 கிராமங்களில் நடத்தப்பட்டன.

நிகழ்ச்சிகள் நடைபெற்ற எல்லாக் கிராமங்களிலும் மக்கள் பேரார்வத்துடன் திரண்டு வந்து-கண்டு களித்தனர்.

ஜூலை 19-ஆம் நாள் கூட்டுறவு தினமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு வந்திருந்தோரைக் காமராஜர் மாவட்ட இணைப் பதிவாளர் திரு எஸ். ஆர். சிவசுப்பிரமணியம் வரவேற்றார். இராமநாதபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் திரு எஸ்.எம். முகம்மது இப்ராகிம் தலைமை வகித்தார். இராமநாதபுரம் கூட்டுறவு வங்கிச் செயலாளர் திரு ஜி. இராமசாமி முன்னிலை வகித்தார்.

பொது விநியோகத் திட்டத் துணைப் பதிவாளர் திரு செய்யது அகமதுகபீர், பால் திட்டத்துணைப் பதிவாளர், விருதுநகர், திரு மா. துரைராஜ், அருப்புக் கோட்டை துணைப் பதிவாளர் திரு மா. தமிழரசன் ஆகியோர் கூட்டுறவுத் திட்டத்தில் உள்ள நன்மைகள் பற்றி விளக்கிக் கூறினார்கள்.

விருதுநகர், காமராஜர் மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலைத் தனி அலுவலர் திரு அழகர்சாமி நன்றி கூறினார்.

**மீரா குழுவினரின்** இன்னிசைக் கச்சேரி ஏறத்தாழ இரண்டு மணி நேரம் சிறப்பாக நடைபெற்றது. விழா இறுதியில் அரசின் சாதனை விளக்கப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

ஜூலை 20-ஆம் நாள் வனப் பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் தினமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு மாவட்ட வன அலுவலர் திரு. வி. சிவராமன் தலைமை வகித்தார்.

''சுற்றுப்புறச் சூழலும் பாதுகாப்பும்'' என்ற தலைப்பில் சிவகாசி அய்ய நாடார் கல்லூரி விலங்கியல் பேராசிரியர் திரு. பி. கே. பரமானந்தன், ''சங்க இலக்கியம் கண்ட வளங்கள்'' என்ற தலைப்பில் சிவகாசி அய்ய நாடார் கல்லூரித் தமிழ்த்துறையைச் சார்ந்த திரு. க. அழகியநம்பி, 'பாலைவனத் தோற்றம் வனத்தின் அழிவே'' என்ற தலைப்பில் சிவகாசி அய்ய நாடார் ஜானகியம்மாள் கல்லூரி விலங்கியல் பேராசிரியர் திரு ஏ. தங்கமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



விழா இறுதியில் நடைபெற்ற **மருதுபாண்டியர்** போக்குவரத்துக் கழகக் குழுவினரின் மெல்லிசை, பொது மக்களுக்கு விருந்தாக அமைந்தது.

ஏறத்தாழ ஆறு நாட்கள் சீரும் சிறப்புடனும் நடைபெற்ற பல்



துறைப் பணி விளக்க விழாவிற்கு முத்தாய்ப்பு வைப்பது போன்று நிறைவு விழா ஜூலை 21-ஆம்நாள் சிறப்புடன் நடைபெற்றது.

செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (செய்தி) திரு வெ. பரஞ்சோதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திப் பேசுகையில் கூறியதாவது:

''இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களிலும், நகரங்களிலும் மைய அரசின் கள விளம்பரத் துறையும், மாநில அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையும் இணைந்து, கடந்த ஒரு வார காலமாக நாடகங்கள், சாதனை விளக்கப்படங்கள், மெல்லிசை, வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்தி மக்களுக்கு எழுச்சியை ஊட்டியுள்ளன.''

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு எஸ். தியாகராஜன், கள விளம்பரத்துறை இணை இயக்குநர் திரு எம். கருப்பசாமி, விருதுநகர் கே.வி.எஸ். நிர்வாகக்குழுச் செயலர் திரு ஏ. பிரபாகரன் முதலியோர் சிறப்புரையாற்றினர்.



**பல்துறை விளக்க விழா கண்காட்சியில் பங்கு பெற்ற அரங்குகள்**

மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம்
வேளாண்மைப் பொறியியல் கழகம்.
மாவட்டத் தொழில் மையம்.
வேளாண்மைத் துறை
திட்ட ஊரக வளர்ச்சி முகமை.
வனத்துறை
மீன் வளர்ச்சித் துறை
பாண்டியன் போக்குவரத்துக் கழகப்
சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை
செய்தி மக்கள் தொடர்புத்துறை
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்
கோ ஆப் டெக்ஸ்.
தாட்கோ.
காதி-கிராமத் தொழில் வாரியம்.
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.
கால்நடை பராமரிப்புத் துறை
கூட்டுறவுத் துறை
யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ்

மாவட்ட வருவாய் அலுவலர் திரு து.நா. இராமநாதன் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது: ''எந்தத் துறையை எப்படி அணுக வேண்டுமென்று இங்கு நடந்த கண்காட்சி மூலம் பொதுமக்கள் அறிய முடிந்தது''.

செய்தி மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் (பல்துறைப்பணி) திரு எஸ். எம். சண்முக சுந்தரம் நன்றி கூறினார்.

ஒரு வார காலம் நடைபெற்ற பல்துறை விளக்கக் கண்காட்சியில் பங்கு பெற்றிருந்த 18 அரங்குகளில் சிறந்த அரங்குகளுக்குரிய பரிசுகளை விழாத் தலைவர் திரு து.நா. இராமநாதன் வழங்கினார்.

பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் முதற் பரிசும், மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம், 2-ஆம் பரிசும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 3-ஆம் பரிசும் பெற்றன.

விழா இறுதியில் மல்லாங் கிணறு **அய்யனார் நூற்பாலை இசைக் குழுவினரின்** இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

பல்துறைப்பணி விளக்க விழா சிறப்பாக நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தையும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு எஸ். தீனதயாளன் மேற்கொண்டார்.

பல்துறைப்பணி விளக்க விழா காமராஜர் மாவட்ட மக்களுக்கு மிகவும் பயன்பட்ட விழாவாக விளங்கியது.

**—நமது செய்தியாளர்**

# விடுதலைக் கால
# நாடக மேடைப் பாடல்கள்

## வெள்ளை கொக்கினத்திற்குக் கறுப்புக் காக்கையரின் அறைகூவல்



[வெள்ளை ஏகாதிபத்தியத்தினிடம், இந்திய மக்கள் வினா தொடுப்பதும் ஏகாதிபத்தியம் விடை அளிப்பதும் என்ற முறையில் தொடுக்கப்பட்ட பாடல் இது]

கொஞ்சமோ நஞ்சமோ எங்கள் கும்பி கொதிக்கப் பணத்தைக்
கொள்ளை கொண்டு போகிறாயே கொக்கே கொக்கே
கொண்டுபோன பணத்துக்கு இந்திய சட்டசபையில்
குறிப்பாகக் கணக்குண்டு காக்கா காக்கா
கஞ்சியின்றி ஏழைமக்கள் கஷ்டப்படும் காலத்திலே
கள்ளுக்கடை எதற்கோதான் கொக்கே கொக்கே
கஞ்சியின்றி ஏழைமக்கள் கள்குடித்துப் போதைவந்து
கவலை தெரியாதிருக்கும் காக்கா காக்கா
ஆட்டுத்தோலுக் கம்பெனிக்கு ஆதியில் இடங்கொடுத்து
மாட்டிக் கொண்டோம் உங்களிடம் கொக்கே கொக்கே
மாட்டிக் கொண்ட உங்களுக்கு ரோடுமென்ன தந்தியென்ன
வானப்புகை வண்டியென்ன காக்கா காக்கா
பரப்பிடையே கோட்டை நிகர் பண்டிதனாம் வித்வகுரு
பால கவிமாலை சொன்னேன் கொக்கே கொக்கே.

இயற்றியவர்

கம்பம் தேசாபிமானி பீர்முகமது

## இளைஞர்களே வாருங்கள்!

அனுப்பி
உதவியவர்
கவிஞர்
கு. அ. ஆறுமுகன்



மீசை முளைத்திட்ட ஆண்பிள்ளைச் சிங்கங்காள்
வெளியிலே வாருங்கள்
நம் ஈசனருள் படைத்த இந்து முசல்மான்களே
தேச விடுதலைக்கோர் வழி பாருங்கோ

ஆசியாக் கடலிலே அலையுங் கொந்தளிக்குது
அந்நிய நாட்டினர்க்கு அமுதையு மளிக்குது
சிறைச்சாலை தன்னிலும் தினம் பரிமளிக்குது... (மீசை)

வந்தாலோ வாருங்கோ வராவிட்டால் போங்கோ
மஞ்சளைப் பூசிக்கொண்டு வளையலை மாட்டிக்கொள்ளுங்கோ
ஆறுதலான வார்த்தை அன்றே பிடுங்கிக் கொள்ளுங்கோ
அதிகார வர்க்கத்தின் ஆணிவேரைப் பிடுங்குங்கோ... (மீசை)

ஒற்றுமை இல்லாவிட்டால் உடுத்துங்கள் கதராடை
ஓடி ஒழியுமந்தோ உங்களைப் பிடித்த பீடை
கற்று மறிவில்லாரே கவனிப்பீர் இந்த ஜாடை
கவிமேக பூமி பாலன் கவியின் பிரசங்க மேடை.

எழுதியவர்:

உடுமலைப்பேட்டை வட்டம், கடத்தூர்

ஆர்.கே. பூமிபாலகதாஸ்

# திருச்சி மாவட்டத்தில் ஆளுநரின் ஆலோசகர்





தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பகுதிகளைத்தேர்ந்தெடுத்து நலப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த வகையில் திருச்சி மாவட்டம் குளித்தலை ஊராட்சி ஒன்றியம் - திருமலை ரெட்டிபட்டியில் இந்திரா நினைவுக் குடியிருப்பு, சமுதாய நலக் கட்டடம், ஊராட்சி ஒன்றியம் பொது நிதிப் பள்ளிக் கட்டடங்கள், நடைபாலம் ஆகியவை, தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்களால் 30-7-'88 அன்று திறந்து வைக்கப்பட்டன. இவற்றிற்கான செலவு ரூ. 10 இலட்சம் ஆகும்.

விழா நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு உஜாகர்சிங் இ.ஆ.ப. தலைமை வகித்தார். குளித்தலை ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு ஏ. சிவராமன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்களும் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள நரிக்குறவர்கட்குக் குடும்ப அட்டைகளையும், நலிந்தோர்க்கு வீட்டு மனைப்பட்டாக்களையும் ஆளுநரின ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்கள் வழங்கி, உரையாற்றுகையில் கூறியதாவது :

'கிராம மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. நகரத்தைவிட்டு மிகவும் தள்ளியுள்ள கிராமங்களில் அரசு விழாக்களை நடத்தி அரசின் திட்டங்களை மக்கள் அறியும்படி செய்கிறது.

'பதினைந்து ஆண்டுகளுக்குமேல் அரசு நிலங்களில் பட்டா இன்றி வசிப்பவர்களுக்கும், விவசாயம் செய்பவர்களுக்கும் அந்தந்த நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்க அரசு உத்தரவிட்டுள்ளது. மூன்று மாதத்துக்குள் இந்தப் பணிகளை முடிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆட்சேபனை உள்ள இடங்களாக இருந்தாலும், 20 ஆண்டுகளாக வீடு கட்டியிருப்பவர் ஏழையாக இருந்தால், அந்த இடங்களை ரெகுலரைஸ் செய்து தரவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளோம்.

**ஏரி, கண்மாய்களில் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது**

''நாற்பது ஆண்டுகளாக அரசு நிலத்தைப் பதப்படுத்தி விவசாயத்துக்குரியதாக ஆக்கிச் சாகுபடி செய்யும் ஏழைக்கு, அந்த நிலத்தை ரெகுலரைஸ்செய்து பட்டா தரவும் அரசு உத்தரவிட்டுள்ளது. ஆலோசகரே கூறிவிட்டார் என்று இன்றே ஏரி, கண்மாய்களுக்குச் சென்று குடிசை போட்டு, ஆக்கிரமிப்பு செய்து விடாதீர்கள். ஏரிகளும், கண்மாய்களும் ஆயிரம், 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை; அரசர்களும் பெரியோர்களுமான நமது முன்னோர்கள், வருங்கால மக்களுக்காக விட்டுச் சென்றவை. இவற்றில் நீர் நின்றால்தான் கிணற்றில் நீர் இருக்கும், கால்நடைகளும் பயன் பெறும்.


**ஏரிகளைச் செப்பனிட ரூ. 450 கோடி கடன்**

தமிழகத்தில் 38 ஆயிரம் ஏரிகள் உள்ளன. இவற்றைத் தூர்எடுத்துச் செப்பனிட ரூ. 450 கோடி செலவிலான திட்டத்துக்கு உலக பாங்கிடம் நிதிஉதவி கேட்டுத் திட்டம் அனுப்பி உள்ளோம். இந்தத் திட்டதில் உங்கள் மாவட்டத்தில் உள்ளபல ஏரிகளும் சேர்ந்திருக்கும். ஐந்து முதல் பதது ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

'கிராமத் தலைவர்கள் சிறப்பாகச் செயல்பட்டால், அந்தப் பகுதி செழிப்பாக இருக்கும். உங்கள் பகுதி செழிப்பாக உள்ளது. எனவே கிராமத் தலைவர்கள் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்று அறிய முடிகிறது.

**'ஜீவன்தாரா' திட்டம்**

''இரண்டரை ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு ரூ. 25 ஆயிரம் கடன் உதவியுடன் கிணறு வெட்ட ''ஜீவன்தாரா'' என்ற திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. நிலத்தடி நீர்பற்றி அறியும் நிபுணர்கள் உதவியுடன் முன்கூட்டியே ஆய்வு செய்த



பின்பு, கிணறு வெட்டினால்தான் செலவு செய்தபின் எதிர்பார்த்த நீர் கிடைக்கும். திருச்சி மாவட்டத்தில் மட்டும் 585 கிணறுகள் 'ஜீவன் தாரா' திட்டத்தின்கீழ் வெட்டப்பட்டுள்ளன.

''விவசாயிகளுக்கு அரசு பட்டா செய்து கொடுத்த நிலங்களில் சாகுபடி நடக்கிறதா என்று பார்க்கவும், நடக்கவில்லை என்றால் உரம், பூச்சி மருந்து, கடனுதவி முதலிய அடிப்படை வசதிகளைப் பட்டாதாரர்களுக்குச் செய்து தர வேண்டும் என்றும், திட்டமிட்டுள்ளோம். இந்தத் திட்டங்களை எல்லாம் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களின் குறைகளைத் தயங்காமல் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும். மக்கள் மனுக்கள் கொண்டு வரும் வரை காத்திருக்காமல் அதிகாரிகள் நேரில் சென்று மக்களைச் சந்திக்க வேண்டும் என்றுதான் அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த வகையிலேயே நான் உங்களைச் சந்திக்க இங்கு வந்துள்ளேன்.

''கிராம மக்கள்தான் அதிகாரிகள் மீது அன்பு வைப்பவர்கள். அதிகாரிகள் செய்யும் சிறு உதவியைக் கூட, பல ஆண்டுகள் ஆனாலும் மறக்காமல் பாராட்டி மகிழ்பவர்கள் என்பதை நான் அனுபவத்தில் பார்த்து வருகிறேன்.

**கிராமப் பெண்களுக்கு வேலை**

''கிராமப்புறங்களில் விவசாய வேலை இல்லாத காலங்களில் கைத்தொழில்கள் மேற்கொண்டு வருவாயை அதிகமாக்கிக் கொள்ளவும், படித்துவிட்டு வேலையின்றி இருக்கும் கிராமப்புறப் பெண்களுக்கு உடனடியாக வேலைதரவும் திட்டம் தயாரிக்க அரசு, கமிட்டி ஒன்றை அமைத்துள்ளது. இந்தக் கமிட்டி ஒரு மாதத்தில் அறிக்கை தரும். அறிக்கையின்படி மாவட்டம் தோறும் ஒன்று அல்லது இரண்டு வட்டாரங்களில் கிராமங்களைத் தேர்ந்தெடுத்துத் திட்டத்தை முன் மாதிரியாகச் செயல்படுத்த உள்ளோம்.

''விரைவில் மற்ற இடங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுப்படுத்தப்படும். எந்தத் திட்டமானாலும், அதன் பயன் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். இதையறிந்து அரசுடன் ஒத்துழைக்க மக்கள் முன்வர வேண்டும்.

கரூர் கோட்டவளர்ச்சி அலுவலர் திரு. மு. லெட்சுமணன் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்

**கிராம கூட்டுறவு அங்காடி விற்பனையாளர்களுக்கு சம்பள உயர்வு**

**தமிழகத்தில் உள்ள கிராமக் கூட்டுறவு அங்காடிகளில் (நியாயவிலைக் கடைகள்) பணியாற்றும் விற்பனையாளர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று, அவர்களின் மாதச் சம்பளத்தை ரூ. 200/- லிருந்து ரூ. 250/-ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சம்பள உயர்வு 1.8.88 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 60 லட்சம் கூடுதல் செலவாகும்.**

# நூல் நயம்

## அம்மா, எப்ப நீ பாட்டியாவ ?

ஆசிரியர்: சேயோன்
வெளியீடு: முரளி பதிப்பகம்,
9, வசந்தா பிரஸ் சாலை,
அடையாறு, சென்னை-20.

விலை: ரூ.9 பக்கம்: 96

இந்நூலில் ஐந்து நாடகங்கள் உள்ளன. எல்லாம் ஒலிபரப்புக்கென்று எழுதப்பட்டவை. நாடகங்களைப் படிக்கும்போதே பாத்திரங்கள் கண்முன் நிற்கிறார்கள். அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் மனிதர்கள் - பிரச்னைகள் - வெற்றி தோல்விகள் எல்லாம் நாடகங்களில் இழையவிட்டிருக்கிறார் ஆசிரியர்.

நூலுக்குத் தலைப்பாக வந்த 'அம்மா, எப்ப நீ பாட்டியாவ?' என்னும் நாடகம் சின்ன அரும்புகளின் மன உறுத்தல்களைச் சித்திரிக்கின்றது. தாய் அன்புக்கு ஏங்கும் அந்த மழலைகள் நம் நெஞ்சிலே நிற்கிறார்கள். மற்ற நான்கு நாடகங்களும் சமுதாயத்தைப் படம் பிடிக்கின்றன. எளிய, இனிய, உரையாடல்; நல்ல பாத்திரப்படைப்பு; படிக்கவும் நடிக்கவும் ஏற்ற நடை நூலுக்கு அணி சேர்க்கின்றன.

—பி.வி.ஜி.

## இந்திய மண்ணின் தலைவர்கள்

ஆசிரியர்: வசந்தநாயகன்
வெளியீடு: இளவழகி பதிப்பகம்
திம்மம்பேட்டை அஞ்சல்
வழி-அம்பலூர்
வாணியம்பாடிவட்டம்(வ.ஆ.)

நம் இந்திய நாட்டைப் பல்வேறு துறைகளில் உயர்த்துவதற்கு அரும்பாடுபட்ட தலைவர்களைப் பற்றிய தொகுப்பு நூல் இது. இராஜாராம் மோகன்ராய், கோகலே, இராஜாஜி, ஈ.வெ.ரா. அம்பேத்கார், வ.உ.சி, காந்தியடிகள், நேரு இப்படி 13 தலைவர்கள் ஆற்றிய அரும்பணிகளை விளக்குகிறது இந்நூல். குழந்தைகள் படித்துப்புரிந்துகொள்வதற் வதற்கேற்ற எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. மாணவ மணிகள் படித்துப் பயன்பெற வேண்டியநூல்.

## காலவெளி அழைக்கிறது

ஆசிரியர்: ப.மணிகண்டன்
வெளியீடு: மூவேந்தர் வெளியீட்டகம்,
8, காசி விசுவநாதர்கோயில் தெரு,
மேற்குமாம்பலம்,
சென்னை-600033.

விலை: ரூ-3 பக்கம்: 32

'புல்லாங்குழலாய்ப் பொலிகின்றேன் செந்தமிழே! சில்லென்ற பண்துள்ளச் செய்' என்று தன் கவிதையைத் தொடங்கும் நூலாசிரியர், சமூகக் கேடுகளை - அன்றாட வாழ்க்கையில் அல்லல்படும் மக்களைப் படம்பிடித்துக் காட்டுகிறார் பல கவிதைகளில்,

'பூக்கள் பொசுங்கலாமா?' என்னும் தலைப்பில்,

'சாவைத் தழுவுவதற்கும்
சருகாய் உதிர்வதற்கும்
போதைப் பொருள்தேடிப்
போகுதடா இளம்பூக்கள்!'

என்று ஏங்குகிறார் கவிஞர்.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரைப் பற்றிக் கூறுகையில், 'அவர் ஈடில்லாச் சிறப்புத் தமிழ்த் தோணி' என்கிறார். இப்படிப் பல்வேறு கவிதைகளில் கவிஞரின் சிந்தனைச் சிதறல்கள் விரவிக்கிடக்கின்றன.

—'கிரிஜா'

## பன்னாட்டுப் பொன்மொழிகளும் மறைநூல் போதனைகளும்

ஆசிரியர்: கவிஞர் மதுரம்நம்பி
வெளியீடு: கீதாஞ்சலி நிலையம்
மெயின்ரோடு,
விருகாவூர்-606203,
தெ.ஆ.மாவட்டம்.

விலை: ரூ.8 பக்கம்: 114

பழமொழிகளும், போதனைகளும் வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட உதவுபவை. முன்னோர்கள் சொன்ன அந்த அனுபவ மொழிகள், வாழ்க்கை முன்னேற்றத்துக்கு மூலகாரணமாகவும் அமையலாம். அத்தகைய பொன்மொழிகளை அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர்.

இந்நூலில் கீதை உபதேசங்களும் விவிலிய அருள்வாக்குகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

## பல்துறை அறிவியல்—1

ஆசிரியர்: டாக்டர் ஆனைவாரி ஆனந்தன்,
வெளியீடு: மணியம் பதிப்பகம்,
39, இரத்தின முதலித்தெரு,
குறிஞ்சிப்பாடி-607302.
(தெ.ஆ. மாவட்டம்)

விலை: ரூ.12 பக்கம்: 128

அறிவியல் துறை இன்று பல அற்புதங்களை நிகழ்த்தி வருகின்றது. அதன் மூலம் சமுதாயம் அளப்பரிய நன்மைகளைப் பெற்று வருகின்றது. அவற்றுள் தொழில் நுட்பமும் ஒன்று. இதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் இந்நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

கால்குலேட்டர்கள், கம்ப்யூட்டர்கள், தொலைக்காட்சி, ஜெட்விமானங்கள், இராக்கெட்டுகள், ஏவுகணைகள், செயற்கைக் கோள்கள், நீர்மூழ்கிக்கப்பல், பேசும் கடிகாரம், இயந்திர மனிதன்-இப்படி ஐம்பது தலைப்புகளிலே, வளரும் தொழில் நுட்பம் பற்றிய சுவையான செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவர் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள தகவல்கள் நிறைந்த புத்தகம் இது.

—பி.வி.கிரி

## வழிகாட்டி தமிழ்ச் சுருக்கெழுத்து வினாக்கள்-விடைகள்

ஆசிரியர்: ஜி.எஸ்.அனந்தநாராயணன் எம்.ஏ (தமிழ்),
வெளியீடு: தமிழ்க்கடல் பதிப்பகம்,
ஐ.19.டர்ன்புல்ஸ் சாலை,
முதலாவது குறுக்குத் தெரு,
நந்தனம், சென்னை-600035.

விலை ரூ:24 பக்கம்:120

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதப் பதிவாளராக இருந்த இந்நூலின் ஆசிரியர், தமிழ்ச் சுருக்கெழுத்து தொடர்பாக பல்வேறு நூல்களையும் எழுதிப்பக்குவப் பட்டவராவார். 'தமிழ்ச்சுருக்கெழுத்து அகராதி'யொன்றும் இவரால் வெளியிடப்பட்டதுண்டு.

அவ்வளவு அனுபவம் பெற்றவரான அவர், தமிழ்ச் சுருக்கெழுத்துத் தேர்வுகளில் அவ்வப்போது கேட்கப்பட்ட வினாக்களுக்கு அதற்குச் சரியான விடைகள் எழுதித் தொகுத்து வெளியிடப்பட்ட நூலே இந்த நூல். தமிழ்ச் சுருக்கெழுத்து பயிலும் மாணவர்களுக்கு மட்டுமல்ல; அதைப் பயிற்றுவிக்கும் நூலாசிரியர்களுக்கும் இந்தநூல் மிகவும் பயன்தருவதாகும்.

மெய்யெழுத்துக்கள், உயிரெழுத்துக்கள் முதலாக -எழுதிப் பழகும் முறை, மாதிரித் தாள்கள் ஈறாக 28 தலைப்புகளிலான அரிய கட்டுரைகள் இப்புத்தகத்தில் அணி செய்கின்றன. தமிழ் வளர்ச்சிக்கு இந்நூலும் தக்கபடி உதவும் என எதிர்பார்க்கலாம்.

—பி.எல்.ஆர்.

## பகைமையின்றி வாழ்வோம்

வாழ்க வாழ்க நம் பாரதநாடு வாழ்கவே
காந்திஜி காட்டிய வழியிலே செல்வோம்
கருணையும் அன்பும் மனதிலே கொள்வோம் (வா)

எம்மதமாயினும் சம்மதமென்பது
எல்லோர்க்கும் தெய்வம் இறைவனடா
இரவும் பகலும் இயங்கிடச் செய்யும்
இறைவன் யாவர்க்கும் ஒருவனடா (வா)

பலவித மொழிகளைப் பேசியபோதும்
பாரத மென்பது நம்நாடு
பகைமை யில்லாமலே யாவரும் ஓர்மையாய்
வாழ்ந்திடுவோம் நாம் அன்போடு.

—தஞ்சை கோவிந்தராஜன்

### பின்பக்க அட்டையில்...

* மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் திண்டிவனம் அருகில் உள்ள சிங்கனூரில் 4.8.88 அன்று காமராஜர் ஆதி திராவிடர் வீட்டு வசதித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

* திருச்சிச் சிறையில் இருந்த விடுதலைப் போர்த் தியாகிகளை நினைவு கூரும் விழாவில் (30.7.88) ஆளுநர் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் டாக்டர் ம.பொ.சி, மற்றும் பெருமக்கள் கலந்து கொண்டனர்.


# சித்தார்த்தி இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்

49/7, பெரிய செளராஷ்டிரா தெரு, உறையூர்,
திருச்சி-620 003.
போன் : 33743, 33121

கடந்த 10 ஆண்டுகளாக சிறந்த முறையில்
சாண எரிவாயு சாதனங்களை
அமைத்து வரும் நிறுவனம்
திருச்சி சித்தார்த்தி இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்

தயாரிப்பாளர்கள்:

சாண எரிவாயு கொள்கலன்கள் (10 Gauge)
நவீன மாடல் குரோமியம் இரட்டை அடுப்பு
ஜனதா மாடல் காஸ்டிங் ஒற்றை அடுப்பு



# சுதந்தர உணர்வே

—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை



சுதந்தரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்தரம் இருந்தால்தான்
நிதந்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்தர நிலைவேண்டும்!

சோறும் துணிமணி சுகங்களைக் காட்டிலும்
சுதந்தர உணர்வே மேலாகும்
கூறும் நலங்களை விலைகொடுத் தாயினும்
கொள்ளத் தகுந்தது சுதந்தரமே.
வீறும், கருணையும், வித்தக ஞானமும்
விளைவது சுதந்தர விருப்பத்தால்
தேறும் பொழுதினில் சுதந்தரம் தொழத்தகும்
தெய்வம் என்பது தெளிவாகும்.



உத்தமன் காந்தியின் மெய்த்தவ பலத்தால்
உலகம் இதுவரை கண்டறியாச்
சுத்தநல் வழிகளில் சுதந்தரம் அடைந்தோம்
சொல்லரும் பாக்கியம் நமதாகும்;
கைத்தலம் கிடைத்துள கற்பகச் செடிஇதைக்
காயவும் கருகவும் விடமாட்டோம்
சத்திய சபதம் பக்தியில் காப்போம்
சர்வே சன் துணை புரிந்திடுவான்!



சென்னை மணிகார் மற்றும் ராஜா வெங்கடகிரி சத்திர முதியோர் இல்லத்தின் புதிய கட்டடத்தை 4.8.88 அன்று திறந்து வைத்து, மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் இல்லத்திலுள்ள முதியோர்களுக்கு மூக்குக் கண்ணாடி களை வழங்கினார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. புஜங்கராவ் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

தொலைபேசி : 20735, 21609

# கணேஷ் பயோ-கேஸ் இம்பிளிமெண்ட்ஸ்

(அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)



முகவரி :

பண்ணை இல்லம்,
கருணாவதி நகர் எதிரில்,
41-43, நாஞ்சிக்கோட்டை சாலை.
தஞ்சாவூர்-6.

**தயாரிப்புகள் :** தரமான பைபர் கிளாஸ் வாயு கொள்கலன்கள்
இரும்புத் தகட்டாலான வாயு கொள்கலன்கள்
மற்றும் சாண எரிவாயு அடுப்புகள்

---

**என்ன?**

வீட்டிற்குத் தேவை **எரிசக்தி**
நாட்டு வளர்ச்சிக்குத் தேவை **எரிசக்தி**
விறகு வேண்டாம், எண்ணெய்/கரி வேண்டாம், மின்சாரம் வேண்டாம்
எருகுழியிலே போடப்படும் மாட்டுச்சாணம்
மற்றும் கால்நடை, விவசாய கழிவே போதும்
என்றும் கொடுத்திடும், செலவின்றி கொடுத்திடும்
குறையின்றி கொடுத்திடும் **கோபர்கேஸ்**
என்னும் **எரிசகதியை**

**எதற்கு?** அடுப்பு எரிக்க, விளக்கு எரிய, வயலுக்கு நீர் இறைக்க மற்றும் பல பயனுண்டு

**எப்படி?**

சிறந்த தொழில்நுணுக்க உதவியுடன்
சிறப்புப் பயிற்சிபெற்று, நூற்றுக்கணக்கான
கோபர்கேஸ் கலன்கட்டி அனுபவமிக்க கொத்தனார்களைக்
கொண்டு உத்தரவாதத்துடன் கலன்கட்டித் தரப்படும்


**எங்கே?** வங்கியிலே கடன் வசதி உண்டு அரசின் மான்யம் உண்டு

**எங்களின் உத்தரவாதம் உண்டு**

ஜனதா/தீனபந்து ரக கோபர்கேஸ்/சாண எரிவாயு கலன்களை
உத்தரவாதத்துடன் அமைத்துக் கொடுக்க

**இன்றே அணுகுங்கள்**

திரு ஏ. ஆசீர்வாதம்
**ஆலோசகர்-சாண எரி வாயு**
**ஊரக எரிசக்தி முன்னேற்ற நிறுவனம்**
**24, கே. என். ரோடு, காந்திநகர்,**
**வேலூர்-632006, வடஆர்க்காடு மாவட்டம்.**



# சென்னை வானொலியில் முக்கிய நிகழ்ச்சிகள்

## சென்னை-1 அலைவரிசை

**16-8-88 (செவ்வாய்)**
இரவு :
9.30 : இலக்கிய ஏடு நிகழ்ச்சியில் பாரத வாணன் வழங்கும் கவிதைகள்

'தமிழ் இலக்கியத்தில் அறிவியல்'—
என். ராஜகோபாலன் உரை
'தமிழ் இலக்கியத்தில் சட்டம்'—
ஓ.என். சிவராஜ் உரை

10-00 : 'அறிவியல் வளர்ச்சியில் அண்ணாபல்கலைக் கழகம்'
—உரைச் சித்திரம்

**17-8-88—(புதன்)**
பிற்பகல் :
3.30 : 'எல்லோருக்கும் கல்வி' நிகழ்ச்சியில் உணவுக்குப் பயன்படும் காளான்கள் பற்றி இலத்தேரி கல்வி உலகம் சிவசுப்பிரமணியன் உரை.

இரவு
8.30 : 'வினாவும் விளக்கமும்' இலக்கிய வினா விடை நிகழ்ச்சி - பேராசிரியர் ஏ. ஆர். இந்திரா.

**18-8-88—(வியாழன்)**
மாலை :
5.00 'இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம்' பற்றி ராசையா அமைக்கும் உரைச் சித்திரம்.

இரவு :
8.45 : 'உரையரங்கு'- நிகழ்ச்சியில் 'வணக்கமும் வாழ்த்தும்'—
எம்.ஏ. சண்முகநாதன் உரை.

**19-8-88—(வெள்ளி)**
இரவு :
10.00 தென்மண்டல கர்நாடக அரங்கிசை—
ரமாரவியின் இசை.

**20-8-88—(சனி)**
முற்பகல் :
11.40 : ஆசிரியருக்கான நிகழ்ச்சி 'கல்வி சிறக்க'-ஏ.கே.ஏ அப்துல் சமது, கிருஷ்ணசந்த் சோர்டியா, சரோஜினி வரதப்பன், டி. நாச்சிமுத்து ஆகியோர் பங்கு பெறும் கலந்துரையாடல்

**21-8-88—(ஞாயிறு)**

மாலை :
6.05 'மணைமங்கலம்' நிகழ்ச்சியில் டாக்டர்
ஈ. எஸ். எஸ். ராமன் உரை.

**22-8-88—(திங்கள்)**
காலை :
8.00 : 'எழுத்துலகம்' நிகழ்ச்சி எழுத்தாளர் - உஷா சுப்பிரமணியனுடன் நேர்முகம்.

பிற்பகல்
3.30 : 'எல்லோருக்கும் கல்வி' நிகழ்ச்சியில் சிறுகதை
—த.கு. இராமசாமி.

மாலை :
5.00 'வைகுந்தப் பெருமாள் கோயில்'
என். லட்சுமி எழுதி அமைக்கும் உரைச் சித்திரம்.

**24-8-88 (செவ்வாய்)**
இரவு :
8.30 : 'முகரம் பண்டிகை'—
சங்கு
கே.எம்.சையது அப்துல் காதர் உரை.

**25-8-88 (வியாழன்)**
மாலை :
5.00 'மகாபலிபுரம்'—
உரைச்சித்திரம்
6.05 : 'பார்வை பாதுகாப்புப் பற்றிய நேயர் வினாக்களுக்கு டாக்டர் ஃபையஸ் பெர்னாண்டஸ் விடை.

**26-8-88—(வெள்ளி)**
இரவு
8.30 : 'தமிழ்த் தென்றல் திரு. வி. க. பற்றி வெ. சண்முகசுந்தரம் உரை.

10.00 : தென் மண்டல கர்நாடக அரங்கிசை—
கொப்பம்பட்டி
என். பாஸ்கர், எஸ். குமார் குழுவினரின் நாகஸ்வர இசை.

**27-8-88—(சனி)**
முற்பகல்
11.40 : 'தேசியக் கல்விக் கொள்கையும், எழுத்தறிவு முனைப்பு இயக்கமும்'-
டி.ஏ. ரயான், பி.கே. கோபால்ராஜா, பத்மினி சிவசுப்பிரமணியன், சண்முக சுந்தரம் ஆகியோர் பங்கு பெறும் கலந்துரையாடல்

இரவு
9-30 : அகிலபாரத இசை நிகழ்ச்சி
என். எஸ். சீனிவாசன் புல்லாங்குழல் இசை.

**28-8-88—(ஞாயிறு)**
பிற்பகல் :
3.30 பரணி கோபு எழுதி வழங்கும் 'சிறகுகள்' நாடகம்.

மாலை
6.05 'நாங்கள் முன்னோடிகள்'-
குடும்ப நலத்திட்டத்தினை ஏற்றுக்கொண்டோர் கருத்துக்கள்—
உரைச்சித்திரம்.

**29-8-88—(திங்கள்)**
மாலை :
5.00 'சென்னை பெசண்ட் நகர் வேளாங்கண்ணி மாதா கோயில்' உரைச் சித்திரம்.

9.30 : 'அறிவியல் அருவி' கப்பு ஆறுமுகம் குழுவினரின் அறிவியல் வளர்ச்சி பற்றிய வில்லுப்பாட்டு.

**30-8-88—(செவ்வாய்)**
பிற்பகல் :
3.30 : 'வாழ்க்கை வளம்பெற' அழகு பழநிச்சாமி, முருகுவண்ணன் ஆகியோரின் கவிதைகள்.

இரவு :
10.00 : 'அறிவியல் அரங்கு'—
'கழிவுப் பொருள்களை எங்ஙனம் சீர் செய்யலாம்—உரைச்சித்திரம்.



# தேசபக்தக் கவிஞர்

கவிஞரின் புகழ் பாடக் கேளீர்—நாமக்கல்
கவிஞரின் புகழ் பாடக் கேளீர்
'காந்தியின்' வழிநின்று வாழ்ந்த நற்றமிழ்த்தொண்டர்
கவிஞரின் புகழ் பாடக் கேளீர் [நாமக்கல்

அநுபல்லவி

'அன்னையின்' வாக்கினைக் காத்து நடந்தார்—பாரத
அன்னையின் கைவிலங்கை அறுத்திடத் துடித்தார்
தன்னிரகற்ற தேச பக்தனாய்த் திகழ்ந்தார்
தமிழுக்கு ''முடிசூட்ட'' தளராது உழைத்தார் [நாமக்கல்


சரணங்கள்

இன்முகம் காட்டியே பழகிடும் பான்மை—தனக்கு
இடர்வந்த போதும்பிறர்க் குதவிடும் கேண்மை
'தன்சுகம்' மறந்தே தாயகம் காத்திடச்
சிறைபுகுந்தார் தியாக சீலனாய்த் திகழ்ந்தார் [நாமக்கல்

'காந்திமகான்' சொல்லே வேதம் எனக்கொண்டார்
''கதிமோட்சம்'' நாட்டுக்கு அதுவென்றே கண்டார்
சோர்ந்து 'அடிமையுற்ற' இழிவினைச் சாடினார்
''சுதந்திர தாகம்''கொண்டு கவிதைகள் பாடினார் [நாமக்கல்

''தெய்வ'' நினைப்பிருந்தால் 'தேசீயம்' தழைக்குமென்றார்
''சத்தியம்'' ''நேர்மை வழி'' என்றென்றும் நிலைக்குமென்றார்
—நாம்
உய்யவழி உரைத்த ''திருக்குறள்'' நூலுக்கு
''உரை''ஒன்று புதுமையாய் உரைத்திட்டார் உலகுக்கு [நாமக்கல்

— நாமக்கல் ரா. பாலு



## பார்த்தோம் படித்தோம்!



பத்தொன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'தமிழரசு' இதழ் இன்பத் தமிழ்போல என்றென்றும் இனிமையுடன் திகழவும், வளரவும், வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறேன். கவியரசு கண்ணதாசன் பற்றிய கட்டுரையாளருக்கும் எனது நல் வாழ்த்துக்கள்.

—என். சண்முகம்,
திருவண்ணாமலை.

'அறிவின் இமயம் அம்பேத்கார்' என்னும் எழுத்தோவியம் நாட்டுப் பற்றை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. 'தீண்டாமை என்பது வேண்டாமே' என்ற கருத்தோடு அதை வெளியிட்ட தமிழரசுக்கு நன்றி.

—ப. அ. சண்முகம்,
களம்பூர் (வ.ஆ.மா.)

அன்பு, அமைதி, உழைப்பு, எளிமை, வலிமை, தியாகம், தேசப் பற்று ஆகியவற்றால் உயர்ந்த காமராசருக்கு மலர் வெளியிட்டுப் பெருமை செய்தீர்கள். பாராட்டுகிறேன்.

—ஆர். அத்தியப்பன்,
மூணுசாவடி,
சேலம் மாவட்டம்.

கர்மவீரர் காமராசர் சிறப்பிதழில் அரிய சிறப்புக் கட்டுரைகள், புகைப்படங்கள் வெளியிட்டிருந்ததற்கு நன்றி.

—கே.எம். ஷம்மிகுமார்
ஷெரீப் நகர், வேலூர்.

மதுரை மாவட்ட வளர்ச்சித் திட்டங்களைத் 'தமிழரசு' கட்டுரை மூலம் அறிந்தோம். அதே போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் வளர்ச்சிப் பணிகள் நடக்க வேண்டும் என்பது எங்கள் ஆசை.

—எஸ். ராஜேந்திரன்,
நம்புரான்பட்டி,
புதுக்கோட்டை
மாவட்டம்.

தலைவர் காமராசரை நேரில் காணாத நாங்கள், அன்னாரைப் பற்றிய அருமை பெருமைகளையெல்லாம் 'தமிழரசு' மூலம் ஏராளமாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. பத்தொன்பதாவது பிறந்தநாள் காணும் 'தமிழரசு'க்கு மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

—பி. ரமேஷ்,
வந்தவாசி.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

